# அத்துஹ்பத்துல் முர்ஸலா

***Athubathul Mursala and explanation of it named Al Hakeekah-Written by:- As-Shaikh Muhammad Ibn Falulullah (Hindi) Qadasallahu Sirrahul Azeez.***

***Its Side hints named Athareea – Written by:- Allama Quadiri Lebbai Ibn Abdul Quadir Ibn Mahmood Ibn Sadackathullahil Nusky Qadasallahu Sirrahul Azeez.***

***In Tamil:* Moulana Moulvi As-Sheikh Sheikh Abdul Quadir Sufi Hazrath Kahiri Qadasallahu Sirrahul Azeez.** **தமிழில்: அல்லாமா அஷ்ஷெய்குல் காமில், மௌலானா மௌலவி ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி ஹழ்ரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்**

**இரண்டாம் பதிப்புரை**

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹு தஆலாவுக்கே சர்வ புகழும், சலவாத்தும், சலாமும் சம்பூரண வெளியாகுந்ததானமான முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பேரிலும், உருவத்திலும், கருத்திலும், சன்மார்க்கத்திலும் அவர்களுடன் சம்பந்தமான கிளைஞர்கள் பேரிலும், சொல்லிலும், செயலிலும், குணத்திலும் அவர்களுடன் ஸ்திரமாக நிற்கின்றவர்களான அவர்களது தோழர்கள் பேரிலும், நல்லடியார்கள் அனைவர்களின் பேரிலும் உண்டாவதாக!

மெய்நிலை கண்ட ஞானவான்களான அவ்லியாக்களுக்கும், அவர்கள் தம சீடர்களான முரீதீன்களுக்கும், முஹிப்பீன்களுக்கும் ஈருலக பாக்கியங்களைப் பெற்றிட துணை நின்ற நூல்களில் முக்கிய இடத்தைப் பெற்ற நூற்கள் '**அத்துஹ்பத்துல் முர்ஸலா**' எனும் நூலும், இதன் விரிவுரையான '**அல்ஹகீகா**' எனும் நூலும், இவ்விரண்டு நூற்களுக்கு ஹாஷியா-ஓரக் குறிப்பான '**அத்தரீஆ**'எனும் நூலாகும்.

ஒரே திரட்டான இம்மூன்று நூற்களையும் மிகத் திறமையாக, மிக அற்புதமாக, அருமையாக ஒன்று சேர்ந்தார்போல் அழகு தமிழில், எளிய நடையில் எங்கள் ஆன்மீக குருநாதர் அல்லாமா **அஷ்ஷெய்குல் காமில், மௌலானா மௌலவி ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி ஹழ்ரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்** அவர்கள் மொழி பெயர்த்து அவர்களது நேரடி பார்வையில் ஜீவிய காலத்தில் மிகப் பிரயாசை எடுத்து 'ஹிஸ்புல்லாஹ் சபை மூலம் வெளியிட்டு அழியா பொக்கிஷத்தை விட்டு சென்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ். அவர்கட்கு கோடிகோடி நன்றி செலுத்துகிறோம். அவர்கட்கு இதற்கான நற்கூலியை அவர்கள் மனம் பொருந்திக் கொள்ளும் அளவிற்கு அல்லாஹுதஆலா பெரிதாக்குவானாக! ஆமீன்.

மெஞ்ஞான வழிப்பாட்டையில் நடந்து ம..ரிபாவின் நற் பாக்கியத்தைப் பெற்று உத்தமர்களாக நம் மக்கள், அதிலும் குறிப்பாக அவர்களது தரீகத் பிள்ளைகள் ஆக வேண்டுமென்ற அவர்களது நன்னோக்கத்திற்கு முதற்பதிப்பு துணை நின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

இந்நூல் விளங்கவில்லை என்றும், விளங்க கஷ்டமாக இருக்கிறது என்றும், அனேகமானவர்கள் சொல்கிறார்கள்.

**அவர்களுக்கு இந்நூலில் புகுவதற்கு முன் ஓர் அறிவுரை:-**

இந்நூல் மூன்று நூற்களை உள்ளடக்கியிருக்கிறது. 1. **அத்துஹ்பத்துல் முற்ஸலா, 2. அல்-ஹகீகா, 3. அத்தரீஆ** இம்மூன்றையும் தனித்தனியாக பிரித்துக் காட்டுவதற்காகவே முதல் நூலை **அண்டர்லைன்-அடிக்கோடு போட்டு திக்பாயிண்ட்-பெரிய எழுத்திலும் (பச்சைக் கலர் எழுத்திலும்),** இரண்டாவது நூலை **அண்டர்லைன்-அடிக்கோடு போடாமல் திக்பாயிண்ட்-பெரிய எழுத்திலும் (பிரௌன் கலர் எழுத்திலும்),** மூன்றாவது நூலை சிறிய எழுத்திலும், நம் குருநாதர் ஷெய்குனா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸிஸ் அவர்களின் சொந்தமான விசேஷ குறிப்புகளை ( ) இப்படி பிராக்கட் - பிறை வடிவத்திற்குள்ளும் அமைத்திருக்கிறோம்.

இதை நன்றாக விளங்கிய பின் முதன்மையாக முதல் நூலை அண்டர்லைன் போட்டதை மட்டும் படித்து முடியுங்கள். அதன்பின் இரண்டாவது நூலை-திக்பாயிண்ட-பெரிய எழுத்து போட்டதையும் சேர்த்து படியுங்கள். அதன்பின் சிறிய எழுத்தில் உள்ள இரண்டு நூற்களுக்கும் விளக்கமான ஓரக் குறிப்பான மூன்றாவது நூலையும் சேர்த்து சேர்த்து படியுங்கள். இப்போது இன்ஷாஅல்லாஹ் நன்கு விளங்கவரும். திரும்பத் திரும்ப கவனமாக படியுங்கள். முயற்சியை கை விடாதீர்கள். தெண்டிப்பிற்கு தக்க பலன் கிடைக்கும்.

எப்படியும் மெஞ்ஞானத்தை அடைவதற்கு இதுவழி கோலாக, துணையாக நிற்க வேண்டுமென்பதுதான் எங்களது குறிக்கோள். அது நிறைவேற நீங்களும் முயற்சியும், துஆவும் செய்யுங்கள். நம் ஷெய்குனா நாயகத்தின் பொருட்டால் அல்லாஹுதஆலா அங்கீகரிப்பானாக! ஆமீ;ன்.

ரபீவுல் ஆகிர் 1418 இவண்,

ஆகஸ்ட் 1997. **ஹிஸ்புல்லாஹ் சபை,**

ஸூபி மன்ஸில், காயல்பட்டணம்.

**'அத்தரீஆ'வின் துவக்கம்.**

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்)

சர்வ புகழும் எமக்கு அவனுடைய வார்த்தைப் பாட்டை நிறைவேற்றிய அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும்.

ஸலவாத்தும், ஸலாமும் அவர்களுக்குப் பிறகு ஒரு நபியுமில்லையே அ(ந்h நாயகம்)வர்கள் பேரிலாகும்.

பின்னர், அறிஞர்கட்கெல்லாம் அறிஞரும், விளக்கவான்களிலெல்லாம் விளக்கவாளருமான காதிறு லெப்பை இபுனு அப்துல் காதிர் இப்னு மஹ்மூது இபுனு சதக்கத்துல்லாஹின்னுஸ்கி- இவர்கள் முத்து வியாபாரி. காயல்பட்டணத்தில் பிறந்து வளர்ந்து நாகூர் ஷரீபில் அடங்கப்பட்டிருக்கிறார்கள்.

அல்லாஹ் இவர்களின் அறிவைக் கொண்டு எமக்கு பிரயோசனமாக்கி வைப்பானாக!

இவர்களிடத்தில் மதராஸ் காழி, அறிஞர் (அபூபக்கர்) அவர்கள் ஓதிக் கொண்டிருக்கும்போது **'அத்துஹ்பத்துல் முற்ஸலா'** எனும் நூலிலும், அதன் விரிவுரையான **'அல்ஹகிகதுல்-முவாபிகது-லஷ்ஷரீ அதில்-முனஸ்ஸலா'** எனும் நூலிலும் வெள்ளையாக உள்ளதின் (காலியாக உள்ள இடத்தின்) பேரில் எழுதப்பட்டிருந்தவைகளை, அவை இரண்டிற்கும் விரிவுரையாக ஆகிறவிதத்pதில் (ஒன்று மற்றதோடு கலந்து போகாமல்) பிரித்துப் பிரித்து சேகரிக்கும்படி கேட்டபோது, அதை அவர்கள் சேகரித்து கருப்பு (எழுத்து வசனங்)களோடு சேர்த்து கேர்த்து எழுதினார்கள்.

ஆகையினால் 'அத்துஹ்பத்துல் முற்ஸலா'வின் நூலாசிரியர் அவர்கள் அதை சிகப்பு மீம் (என்ற எழுத்தைக்) கொண்டு சயிக்கினை செய்வோம் என்று சொன்னதற்கு (அதாவது:- அத்து**ஹ்**பதுல் முற்ஸலாவுக்கு சிகப்பு மீமை மட்டும் எழுதி மத்னு என்று சயிக்கினை செய்துவிட்டு அதை கருப்பு மையினால் எழுதுவேன் என்று சொன்னதற்கு) மாற்றமாக இருந்தாலும் சரி, நாம் அதை (பூறாவையும்) சிகப்பு மையைக் கொண்டு எழுதுகிறோம்.

இன்னும், அதன் விரிவுரையான 'அல்-ஹகீகத்துல்-முவாபிகது-லிஷ்-ஷரீ ஆ' வையும் இன்னும் 'அத்தரீ ஆ' என்று சொல்லக் கூடிய இந்த விரிவுரையையும் அதற்கு சிகப்பு ஷீனைக் கொண்டும், இதற்கு கருப்பு ஷீனைக் கொண்டும் சயிக்கினை செய்துக் கொண்டு கருப்பு மையினால் எழுதுகிறோம்.

மொழி பெயர்ப்பாசிரியர் சொல்கிறேன்:-

'அத்துஹ்பத்துல் -முர்ஸலா' இன்னும் அதன் விரிவுரையான 'அல்ஹகீகதுல்-முவாபிகது-லஷ்ஷரீ ஆ' வினுடைய நூலாசிரியர் அவர்கள் அதை கையெழுத்து பிரதியாக எழுதியதனால் 'அத்துஹ்பதுல் -முர்ஸலா' என்ற மத்னுக்கு சிகப்பு மீமை மட்டும் போட்டு அடையாளம் காட்டிவிட்டு மத்னையும் விரிவுரையையும் கருப்பு மையினால் எழுதினார்கள்.

பின்னர் 'அத்தரீ ஆ' எனும் விரிவுரையை சேர்த்து எழுதியவர்கள் கையெழுத்து பகிரதியாகவே எழுதியதனால் 'அத்துஹ்பதுல்-முர்ஸலா'எனும் மத்னை பூறாவையு; சிகப்பு மையினால் எழுதிவிட்டு அதன் விரிவுரை 'அல்ஹகீகதுல்-முவாபிகது-லிஷ்ஷரீ ஆ'வையும், அவை இரண்டிற்குமே விரிவுரை போன்றதான 'அத்தரீ ஆ'வையும் கருப்பு மையினால் எழுதி, முந்தின

விரிவுரையான 'அல்ஹகீகது'க்கு சிகப்பு ஷீனைக் கொண்டும், பிந்திய விரிவுரையான 'அத்தரீஆ'வுக்கு கருப்பு ஷீனைக் கொண்டும் சயிக்கினை செய்தார்கள்.

அவை எல்லாவற்றையும் மொழி பெயர்க்கின்ற நாம் அவைகளை அச்சுப் பிரதியாக்க வேண்டியதாகயிருப்பதினால் நாம் 'அத்துஹ்பதுல்-முற்ஸலா'வையும் அதன் விரிவுரையான'அல்ஹகீகதுல்-முவாபிகா'வையும் பெரிய எழுத்தாகவும், 'அத்துஹ்பதுல்-முற்ஸலா' வேறானதாக காட்டுவதற்கு அதன் கீழே (அண்டர்லைன்-அடிக்கோடு)-------------. இப்படி கோடு போட்டும் எழுதுவோம்.

இன்னும் 'அத்தரீஆ'வை சிறிய எழுத்தாகவும் எழுதுவோம். மேலும் இவைகளில் ஏதும் குறிப்பு எழுதும்போது அதை இருபுறமும் ( ) இப்படி பிராக்கட்-பிறை வடிவத்திற்குள் எழுதுவோம்.

**அல்ஹகீகாவின் துவக்கம்**

**அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்)**

**சகல புகழும், சகல உலகத்தார்களின் போஷகனான அல்லாஹ்வுக்கே உரித்தாகும்.**

**சலவாத்தும் ஸலாமும் அவனுடைய தூதர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பேரிலும், அவர்களின் கிளைஞர்கள், தோழர்கள் அனைவர்கள் பேரிலுமாக இருக்கும்.**

**பின்னர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குலாம், முஹம்மது இபுனு பள்ளுல்லாஹ் என்பவன் சொல்கிறான்.**

**நான் முன்னாளில் (இந்த விரிவுரையை எழுத முன்னொரு காலத்தில்) ஹகாயிகுடைய இல்மில், நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களளவில்(அதன் தவாபை) அனுப்பப்பட்ட காணிக்கையாகிய 'அத்துஹ்பதுல் முற்ஸலா' எனும் நூலைக் கோர்வை செய்திருந்தேன். மேலும் அதற்கு சூழால் விரிவுரைகளையும் எழுதியிருந்தேன்.**

**அந்த விரிவுரைகள் பிரிந்;துப் பிரிந்ததாக இருந்தன. இறுதியாக அவைகளை சிலது சிலதோடு சேர்ந்ததாய் சேகரித்தேன்.**

**அப்போது அது ஒரு விரிவுரையைப் போன்று ஆகிவிட்டது. 'மத்ன்' பூறாவையும் அப்படியே எழுதினேன். மேலும் சிகப்பு மீமை எழதி மத்னளவிவும், சிகப்பு ஷஷPனை எழுதி விரிவுரையிலும் சயிக்கினை செய்துள்ளேன்.**

**பின்னர், அவை இரண்டோடும் ஒரு முடிவுரையையும் சேர்த்தேன். அதில் முன்னாளில் ஹகாயிகுடைய இல்மில் என் நாவில் நடந்த கவிகளைப் போன்ற வசனங்களை எழுதினேன்.**

**பின்னர், அதில் நான் சில முஹக்கிகீன்களின் நூலில் பார்த்த சூபியாக்களின் கொள்கைகளையும் எழுதினேன்.**

**அந்த கிதாபின் தவாபை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய றூஹுக்கு ஆக்கினேன்.**

**அதற்கு 'அல்ஹகீகத்துல்-முவாபிகது-லிஷ்-ஷரீஆ' என்று பெயர் வைத்தேன். அதன் தவாபை நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களளவில் எட்டி வைக்கும்படி அல்லாஹுதஆலாவிடம் கேட்கிறேன். அவன் சகலத்தின் பேரிலும் மிக்க சக்தியுடையவன். (துவாவை) அங்கீகரிக்க மிகவும் தகுமானவன்.**

**அத்துஹ்பதுல் முற்ஸலா**

விரிவுரைகளுடன் துவக்கம்

**அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்.)**

அதாவது:- என்னுடைய வெளிரங்கமான தாத்தில் மறைந்த உலூஹிய்யத்தைக் கொண்டு இதை செய்கிறேன். (வாஹிதிய்த்தின் சமூகத்தில் அல்லாஹ் உடைய அறிவிலிருந்த என்னுடைய ஐனுதாபிதாவும் அஹதிய்த்தின் சமூகத்தில் அறிந்தவன், அறியப்பட்டவன், அறிவு, எல்லாம் ஒன்று என்ற விதத்தில்) இலாஹு என்னும் இஸ்மைக் கொண்டு பெயர் வைக்கப்பட்ட முஸம்மாதானாகயிருக்கிற என்னுடைய உள்ரங்கமிருக்கிற (உலூஹியத்துக்கு) மாற்றமாக.

**அருளாளன்** அதாவது:- அவனல்லாதவையடங்கலின் பேரிலும் (பிரதிபலனாக இல்லாத) நன்கொடையான தாத்திய்யானதும் சிபாத்தியானதுமாகிய கிருபையை மிக்க ஒலிக்க வைக்கிறவன்.

அதைப் பற்றித்தான் உயர்த்தியான அவனின் வசனமான

وَسِعَتْ رَحْمَتِيْ كُلَّ شَيْءٍ

'என்னுடைய கிருபை சகல வஸ்துவிற்கும் விஸ்தீரணமாகிவிட்டது' என்ற வார்த்தை மொழிகிறது.

(வஹ்தத்தின் சமூகத்தில்) ஷுஊனுக்கும் (வாஹிதிய்யத்தின் சமூகத்தில்) ஐனுதாபிதாவுக்கும், (இவை இரண்டிற்கும் தாத்திய்யான ரஹ்மத்) இன்னும் (வெளி உஜூதில்) ரூஹுக்கும், நபுஸுக்கும், ஹுயூலாவுக்கும், ஹபாவுக்கும், சடத்திற்கும், வானத்திற்கும், பூதத்திற்கும், உலோகத்திற்கும், தாவரத்திற்கும், சீவராசிக்கும்.

மனிதனுக்கும், துன்யாவுக்கும், பர்சகுக்கும், ஆகிறத்திற்கும், மஹஷருக்கும், மீஸானுக்கும், சிராத்திற்கும், நரகத்திற்கும், சுவர்க்கத்திற்கும்(சுவர்க்கத்திலொரு இடமான) கதீபுக்கும், வேளைக்கு வேளை, நொடிக்கு நொடி தொடர்படியாக, நின்று போகாமல் எக்காலமு; நேமமாக (விஸ்தீரணமாகி விட்டது)

**அன்புடையோன்** அதாவது:- மு:ஃமினானவர்கள் பேரில் அவர்களுக்கு பிரதிபலனாக அவனுடைய திருவசனமான

فَسَأَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ

'மேலைக்கு அதை தக்வா செய்தவர்கள் பேரில் அவசியமாக்குவேன்'என்றதில் அதைக் கொண்டு வார்த்தைப்பாடு செய்த உஜூபிய்யான-தன் பேரில் கடமையாக்கிக் கொண்ட ரஹ்மத்தை ஒலிக்க வைத்தவன்.

அவர்களின் இஸ்தி:ஃதாதுகள்- அருகதைகள் அறிவிலும், அமலிலும், நற்கூலியிலும் சம்பூரணத்தை தேடினதளவில் அவர்களுக்கு நல்லுதவி செய்தான்.

**சகல புகழும்** அதாவது:- சகல புகழ்கிறவனாக இருப்பதையும், புகழப்பட்டவனாக இருப்பதையும் புகழாக இருப்பதையும் சேர்த்துக் கொண்ட ஒரு ஹகீகத்தாகிறது:-

அல்லாஹுக்காகயிருக்கும் அதாவது:- (அல்லாஹ் எனும் இஸ்மில் வேறொன்றையும் கவனிக்காமல்) அது அதுவாகயிருக்கிற விதத்தில் அது தாத்துடைய இஸ்மாகயிருக்கிற இந்த இஸ்முடைய முஸம்மாவுக்காக, அதைக் கொண்டு பெயர் வைக்கப்பட்டவனுக்காக இருக்கும் ஒரு விதத்தில்,

இன்னுமொரு விதத்தில் அது -அல்லாஹ் எனும் இஸ்மு சகல அஸ்மாக்களையும், சிபாத்துகளையும் சூழ்ந்துக் கொண்டிருப்பதினால் அந்த இஸ்முக்காகயிருக்கும்.

சர்வ உலகங்களையும் போஷpக்கிறவன் அதாவது:- அல்லாஹுதஆலா அவனுடைய 'அவ்வலு' 'பாதினு' எனும் இஸ்மின் புறத்தால் அவன் வெளியாகி அதனால்(அவனுடைய) அறிவின் சமூகத்தில் ஐனுதாபிதாவும், அவைகளின் இஸ்தி:ஃதாது- அருகதைகளும் உண்டாகிய அவனுடைய மறைவான வெளிப்பாட்டிற்குச் சொல்லக்கூடிய 'பைளுல் அக்தஸை'க் கொண்டு முதலாவதாகவும், இன்னும் அவனுடைய 'ஆகிர்' 'ளாஹிர்' எனும் இஸ்மின் புறத்தினால் வெளியாகி அதனால் வெளியில் சிருஷ்டிகளை உண்டாக்கிய அவனின் வெளிரங்கமான வெளிப்பாட்டிற்குச் சொல்லக் கூடிய 'பைளுல் முகத்தஸை'க் கொண்டு இரண்டாவதாகவும் சர்வ உலகங்களையும் போஷpக்கிறவன்.

**இன்னும் ஒழுக்கத்தின் நற்பேறாகிறது:- அதாவது:- சம்பூரண விதத்தில் ஒடுக்கத்தின் நற்பேறாகிறது:- இரு உலகத்தையும் விட்டு ஒழிந்தவனுக்காகயிருக்கும்.**

(அதாவது:- நான் எனும்) நபுஸு இருப்பதையும், அதன் இலட்சணங்கள் இருப்பதையும் விட்டு ஒழிந்தவனுக்காகயிருக்கும்.

அ(வை இரண்டையும் விட்டு ஒழிவதாகிற)து காட்சியின் மகாமிலேயேயல்லாது உண்டாகாது.

(நூலாசிரியர்) அவர்கள், மற்றவர்கள் 'முத்தகீன்களுக்காயிருக்கும்' என்று சொல்வது போல் சொல்லாமல் 'இரு உலகத்தையும் விட்டு ஒழிந்தவனுக்காகயிருக்கும்' என்று சொன்னதெல்லாம் 'அ(ந்த ஒடுக்கத்தின் நற்பேறாகிற)து சம்பூரணமான விதத்தில் இரண்ட மனிதர்களிலொருவருக்கேயல்லாமல் உண்டாகாது' என்பதளவில் சயிக்கினை செய்வதற்காகவேதான்.

அவ்விருவரிலொருவர்:- நூலாசிரியர் சொல்வது போல். அல்லாஹுதஅலாவுக்கு தனது எல்லா நிலைமைகளிலும் கலப்பறுதலாக்கி தனது சகல அமல்களிலும் தன் நப்ஸுடைய லௌகீக அபிலாசைகளையும், வைதீக அபிலாசைகளையும் விட்டும் ஒழிந்தவனாகும்.

மற்றவராகிறவர்:- சகல சிருஷ்டிகளையும் உணர்வதை விட்டும். மேலும் இரு உலகம் என்று சொல்லக் கூடிய தன் நபுஸையும் விட்டும் ஒரு நேரத்திற்காகிலும் முற்றாக அழிந்து நாஸ்தியானவனாக இருக்கும்.

**அதாவது:- வணக்கத்தைக் கொண்டு அல்லாஹு தஆலாவை இம்மையில் தனது மனக் கண்ணினாலும், மறுமையில் மனக் கண்ணினாலும், தலைக் கண்ணினாலும் காண்பதையேயல்லாது (வேறொன்றையும்) நாடாத தேடாதவனாகும்.**

**சலவாத்தும்** அதாவது:- தாத்தியான, சிபாத்தியான அஸ்மாயிய்யான தஜல்லியாத்துக்களை-தோற்றங்களைக் கொண்டு கிருபையை ஒலிக்கச் செய்வதாகிறது:-

**சலாமும்** அதாவது:- சகல கருமங்களிலும் நடு நிலைமையான மற்தபாவின் ஹகாயிகுகளைக் கொண்டு திட்பபடுவதை உண்டாக்கக் கூடியதாகிய அல்லாஹ்வின் 'ஸலாம்' எனும் இஸ்மின் புறத்தினாலான இலாஹிய்யத்தான-தெய்வீகத்திலான தஜல்லியாகிறது:-

**சம்பூரணவெளியாகுந்தானத்தின் பேரிலாயிருக்கும்.**

'வெளிப்பாடு' என்பது 'மறைவு' என்பதற்கு எதிராகும். 'ளாஹிறு-வெளியானவன்' என்பது அல்லாஹு தஆலாவின் திருநாமங்களில் ஒன்றாகும். அவன் சகல வஸ்துக்களுக்கும் மேலெ வெளியாகி அவைகளின் மேல் உயர்ந்தவன்.

**(நூலாசிரியர் அவர்கள்) சம்பூரண வெளியாகுந்தானத்தின் பேரில் என்று சொன்னதெல்லாம்** மற்றவர்கள் 'ரஸூலின்பேரில்' 'நபியின் பேரில்' என்றும் இவை போன்ற வார்த்தைகளைக் கொண்டு சொல்வதுபோல் இவர்கள் சொல்லவில்லை இரண்டு கருத்துக்காக.

அதிலொன்று:- ஒவ்வொரு மனிதனும் ஹக்குதஆலா வெளியாகிக் கொண்டிருப்பதை இம்மையில் தன் கல்புக்கண்ணாலும், மறுமையில் கல்புக் கண்ணாலும், தலைக் கண்ணாலும்

தான் காணக் கூடிய ஒரு வெளியாகுந்தானத்தை தனக்குத்தேடி எடுத்துக் கொள்வது அவனுக்கு அவசியமாகும்.

பின்னர், வெளியாகும் தானங்களில் குறைவானதுவும், நிறப்பமானதுவும், சம்பூரணமானதும் இருப்பதினால் நூலாசிரியர் அவர்கள் 'சம்பூரண வெளியாகும் தானம்' என்ற அவர்களின் வார்த்தையைக் கொண்டு, அல்லாஹு தஆலா நல்லுதவி செய்த ஒவ்வொருவரும் அவர் கடுமையான தெண்டிப்பும், அதிகமான பிரயாசையும் எடுத்து இந்த சம்பூரண வெளியாகும் தானமான நாயகத்தை தனக்கு எடுத்துக் கொள்வது அவசியம் என்பதளவில் சயிக்கினை செய்தார்கள்.

மற்றுமொரு கருத்தாவது:-

நூலாசிரியர் அவர்கள் தங்கள் விரிவுரையில் விளக்கியதாகும்:-

**ஏன் ஹக்குதஆலா நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் அவனுடைய எல்லா இஸ்முகளையும் கொண்டும் வெளியாகியிருப்பதற்காக.**

உலகங்களில் வெளியாவதை தேடிய இஸ்முகளைக் கொண்டு.

அல்லாஹுதஆலா தனக்காக தேர்ந்தெடுத்துக் கொண்ட இஸ்முகளைக் கொண்டல்ல.

**உஜூபு தாத்தியையும்-தாத்து இருப்பது அவசியமாக இருப்பதையும்,**

அதாவது:- அல்லாஹுதஅலா தானல்லாதவற்றைக் கொண்டல்லாமல் தன்னைக் கொண்டே தான் நிலைபாடாக இருக்கிற சிபத்தையும், இன்னும் **(அவனல்லாதவற்றை விட்டும்) தேவையற்றிருக்கிற சிபத்தையும் தவிர ஒரு இஸ்மு மிகைத்ததாகவும், மற்றொன்று மிகைப்பட்டதாகவுமில்லாமல், என்றாலும் சமமான விதத்தில் (வெளியாகியிருப்பதற்காக.)**

**சமம் என்பதற்கு கருத்தாவது:-**

**எல்லா இஸ்முகளும் நமது நாயகத்தில் சம்பூரணமான விதத்தில் ஒவ்வொரு இஸ்மும் மற்ற இஸ்முக்கு சரிசமமானதாக வெளியாகி இருப்பதாகும்.**

**அவர்களல்லாத மற்ற நபிமார்களோ அவர்களிலும் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா தனது எல்லா இஸ்முகளையும் கொண்டு வெளியாகி இருக்கிறான். ஆனாலும் ஒரு இஸ்மு மிகைத்ததாகவும், மற்றொன்று மிகைக்கப்பட்டதாகவுமான விதத்தில்.**

எஹ்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களில் தனது ஜலாலிய்யத்தான சிபத்துக்களைக் கொண்டு மிகைப்பானதாக வெளியானது போலும், இன்னும் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களில் தனது இலாஹிய்யத்தான சிபாத்துக்களைக் கொண்டும் அப்படியே (மிகைப்பானதாக) வெளியானது போலும்.

**ஆகவே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே சம்பூரணமான வெளியாகும் தானமாக ஆகுகிறார்கள்.**

**(கேள்வி) நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவுலியாக்களுடைய நிலைமைகள் என்ன? இன்னும் மற்ற நபிமார்கள் சலவாத்துல்லாஹி அலைஹிம் அவர்களின் அவுலியாக்களுடைய நிலைமைகள் என்ன? என்று நீ கேட்பாயானால்**

**(பதில்) நான் சொல்கிறேன் நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவுலியாக்களாகிறவர்கள்:-**

அவர்கள் நம்முடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கல்பின் பேரில் இருக்கிறவர்கள்.

அல்லாஹு தஆலா

قُلْ هٰذِهٖ سَبِيْلِيْٓ اَدْعُوْٓا اِلَى اللّٰهِ عَلٰى بَصِيْرَةٍ اَنَا وَمَنِ اتَّبَعَنِيْ

'(நபியே) சொல்லுங்கள். இதுதான் என்னுடைய வழி, நான் அல்லாஹ் அளவில் தெரிந்துக் கொண்ட அழைக்கிறேன். நானும் என்னைப் பின்தொடர்ந்தவர்களும்' என்று சொன்னதுபோல்.

அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பூரணமாக பின் தொடர்ந்ததினால் அவர்கள் 'விலாயத்'தில் நின்றும் எடுத்ததை எல்லாம் (ரஸூலுல்லாஹ்) அவர்கள் எடுத்த இடத்தில் நின்றுமேதான் எடுத்தார்கள்.

**அவர்கள் சமமான விதத்தில் வெளியாவதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தொடர்ந்தவர்களாகும்.**

**மற்ற நபிமார்களுடைய அவுலியாக்களாகிறவர்கள் ஒரு இஸ்மு மிகைப்பானதாகவும், மற்றொன்று மிகைக்கப்பட்டதாக ஆகும் விதத்தில் (அந்தந்த நபிமார்கள்) சலவாத்துல்லாஹி அலைஹிம் அவர்களை தொடர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.**

**(கேள்வி) இதனால் நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவுலியாக்கள், 'விலாயத்'துடைய மற்தபாவில் மற்ற நபிமார்களை விடவும், அவர்களில் ஒரு இஸ்மு மிகைக்கப்பட்டதாக வெளியாகி இருக்கிற காரணத்தால் வருசையானவர்களாக ஆகுகிறது ஏற்படுமா? என்றும்,**

**மேலும் இதனால் மற்ற நபிமார்கள் 'விலாயத்'துடைய மற்தபாவில் அவர்களில் சில அஸ்மாக்கள் மிகைப்பானதாக வெளியாகி இருக்கிற காரணத்தினால் நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விடவும் வருசையானவர்களாக ஆகுகிறது ஏற்படுமா? என்றும் நீ கேட்டாயானால்**

**(பதில்) நான் சொல்கிறேன். அவைகளில் ஒன்றும் ஏற்படாது.**

**முதலாவாகிறது:- (மற்ற நபிமார்களில் சில இஸ்முகள் மிகைக்கப்பட்டதாக இருப்பதாகிறது:-**

**அவை அவர்களில் மிகைப்பானதாக வெளியான இஸ்முகளளவில் சேர்த்துப் பார்ப்பது கொண்டேயாகும்.**

**நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவுலியாக்களில் சமமாக வெளியான இஸ்முகளளவில் சேர்த்துப் பார்ப்பது கொண்டல்ல.**

**ஏனென்றால் நிச்சயமாக அவர்களில் மிகைக்கப்பட்டதாக வெளியான இஸ்மாகிறது நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவுலியாக்களில் (சமமாக வெளியான) அஸ்மாக்களை விடவும் வெளிப்பாட்டில் மிக்க பூரணமானதாகவே ஆகும்.**

**இரண்டாவதாகிறது:-**

**(மற்ற) நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களில் சில இஸ்மு மிகைப்பானதாக வெளியானதாகிறது:- அவர்களில் மிகைக்கப்பட்டதாக வெளியான இஸ்முகளளவில் சேர்த்துப்பார்ப்பது கொண்N;டயாகும்.**

**நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் சமமான வித்தில் வெளியான இஸ்மளவில் சேர்த்துப் பார்ப்பது கொண்டல்ல.**

**ஏனென்றால் அவர்களில் மிகைப்பானதாக வெளியான இஸ்மாகிறது நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் சேர்த்துப்பார்க்க, வெளிப்பாட்டில் குறைந்ததாக இருப்பது அல்லது சமமாக இருப்பது அவசியமாகும்.**

**எப்படியானாலும்** வெளிப்பாட்டில் குறைவான இருந்தாலும், அல்லது சமமாக இருந்தாலும் **அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விடவும் வருசையானவர்களாக ஆகிறது ஏற்படாது. மேலும் அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சரிசமமானவர்களாக ஆகிறதும் ஏற்படாது.**

**முதலாவது கவனிப்பின்படி நன்கு வெளியானதாகும்.**

**இரண்டாவது கவனிப்பின்படி அவர்களில் மிகைப்பானதாக வெளியான இ;ஸ்முகளாகிறது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் வெளியான அஸ்மாக்களுக்கு வெளிப்பாட்டில் சமமானதாக இருந்தாலும் அவர்களில் மிகைக்கப்பட்டதாக வெளியான இஸ்மாகிறது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் வெளியான இஸ்முகளளவில் சேர்த்துப் பார்க்க கண்டிப்பாக வெளிப்பாட்டில் குறைந்ததாகவேயாகும்.**

ஆகவே அவர்களைக் காண 'விலாயத்'துடைய மற்தபாவில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருசையானவர்களாக இருப்பது உண்டாகிவிடும்.

(கேள்வி) சகல அஸ்மாக்களின் வெளிப்பாடு நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிலும், அவர்களுடைய அவுலியாக்களிலும் சமமான விதத்தில் ஆகுமானால் அதனால் நம்முடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், அவர்களுடைய அவுலியாக்களுக்குமிடையில் 'விலாயத்'துடைய மற்தபாவில் சரிசமமாவது ஏற்படுமா என்று கேட்டாயானால்?

(பதில்) நான் சொல்கிறேன்:- அறவே ஏற்படாது. ஏனென்றால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் வெளியான அஸ்மாக்களாகிறது:-

அவர்களில் வெளியான அஸ்மாக்களைப் பார்க்கிலும் வெளிப்பாட்டில் மிக சம்பூரணமானதாக இருக்கும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விஷயத்தில் சமம் என்பதாகிறது 'மிக்க சம்பூரண'த்திலாகும். அவர்கள் விஷயத்திலோ 'பூரணம்' தன்னிலேயேயாகும். ஆகையினால் சரிசமம் உண்டாகாது.

எனினும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் 'நுபுவ்வத்'தைக் கொண்டு அவர்களைக் காண வருசையானவர்களாக இருப்பதைப்போல், 'விலாயத்'துடைய மற்தபாவிலும் அவர்களைக் காண வருசையானவர்களாக இருப்பது அவசியமாகும், கவனமாக எடுத்துக் கொள்!

(கேள்வி) உலகமாகிறது அதன் சகல பாகங்களோடும் சேர்ந்து ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவின் வெளிப்பாடுகளில் சிலதுதான் என்று ஹகீகத்துடைய முஹக்கிகீன்கள் எல்லோர்களும் ஏகோபித்திருக்கிறார்கள். ஹக்குஸுபுஹானஹு வதஆலா நபிமார்களிலும், அவுலியாக்களிலும் தனது எல்லா அஸ்மாக்களையும் கொண்டு வெளியாகியிருக்கிறான் என்று சொல்வது எப்படி சரியாகுமென்று கேட்டாயானால்?

(பதில்) நான் சொல்கிறேன்:- இப்படி (அல்லாஹு தஆலா நபிமார்களிலும், அவுலியாக்களிலும் அவனுடைய சகல அஸ்மாக்களையும் கொண்டு வெளியாகி இருக்கிறான் என்று) சொல்கிறதைக் கொண்டு கருத்து:-

ஹக்கு ஹஸுபுஹானஹு வதஅலா அவனுடைய எல்லா அஸ்மாக்களையும் கொண்டு பொதுவாக வெளியானான் என்பது இல்லை.

எனினும் அது கொண்டு கருத்தாகிறது:- ஹக்கு சுபுஹானஹுவதஆலா உலகத்தில் ஒவ்வொன்றாக, அல்லது இரண்டு இரண்டாக, அல்லது மும்மூன்றாக, அல்லது நான்குநான்காக அல்லது அதைவிடவும் அதிகமாக வெளியான தனது அஸ்மாக்கள்

**அடங்களையும் கொண்டு நபிமார்கள் அவுலியாக்களில் நின்றும் ஒவ்வொருவரிலும் வெளியானான் என்பதுவேயாகும்.**

**முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பேரிலும், அவர்கள் ஆல்கள் பேரிலும்,**

அ(வர்களின் ஆல்கள் என்ப)வர்கள்:-

அவர்களுடைய குடும்பத்தார்களும், சொந்தக்காரர்களுமாகும்.

குடும்பம் என்பது ஒன்று, சூரத்தில்-உருவத்தில் மட்டுமாக இருக்கும், அல்லது கருத்தில்-ஆன்மாவில் மட்டுமாக இருக்கும், அல்லது சூரத்திலும், கருத்திலுமாக இருக்கும்.

எவருக்கு கருத்திலும் சூரத்திலும் அவர்களோடு சம்பந்தம் சரியாக ஆகிவிட்டதோ அவரே 'கலீபா'வாகவும், அவர்களின் ஸ்தானத்தில் இருப்பவருமாவார். இவர் அவர்களுக்கு முன்புள்ளவராக இருந்தாலும் சரி, உவமையில் சென்று போன பாரதூரமான நபிமார்களைப் போல், அல்லது அவர்களுக்கு பின்புள்ளவராக இருந்தாலும் சரி, உவமையில் காமிலான அவுலியாக்களைப் போல்,

இன்னும் அவர்களோடு கருத்தில் மட்டும் சம்பந்தம் சரியானவராகிறவர்:- அவர்களுக்கு முன்புள்ள மற்ற அவுலியாக்களைப் போலும், இன்னும் பிர்அவுனுடைய ஆல்களில் முஃமினானவரைப் போலும் இன்னும் 'யாசீன்ஸூரத்'தையுடையவரை (அதாவது:- யாசீன் ஸூரத்தில் 'வஜாஅ-மின் அக்ஸல்- மதீனத்தி-றஜ்லுன்-யஸ்ஆ.... தூர தேசத்திலிருந்து ஒருவர் விரைந்து வந்தார்' என்று சொல்லப்பட்டவரும், ரஸூலுல்லாஹி அவர்கள் இந்த உலகில் வெளியாக ஐநூறு வருடங்களுக்கு முன்னால் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டவருமான ஹபீபுன்னஜ்ஜாறு என்பவரை) போலும், இவர்கள் அவர்களுடைய கருத்தில் நின்றும் ஏந்துக் கொள்வதற்கானதைக் கொண்டு நிற்கிற அவர்களின் றூஹின் பிள்ளைகளாகும்.

இதற்காகவேதான் அந்த கருத்திலான குடும்பத்தினளவில் சயிக்கினை செய்து 'ஸல்மானுமின்னா-ஸல்மான் (பார்ஸி) நம்மில் நின்றுமுள்ளவர்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

இன்னும் அவர்களுடைய சூரத்தில் மட்டும் சம்பந்தம் சரியானவராகிறவர் ஒன்று அவர்களின் சடலத்தின் புறத்தினால் சம்பந்தமானவராக இருக்கும் செய்யிதுமார்கள், ஷரீபுகளைப் போல்.

அல்லது அவர்களின் மார்க்கத்தின் புறத்தினாலும் நபித்துவத்தின் புறத்தினாலும் சம்பந்தமானவராக இருக்கும், வெளிரங்ககாரர்களான முஜ்தஹிதீன்கள் இன்னும் அவர்களல்லாத உலமாக்கள், ஆபிதீன்கள் மற்றும் முவஹ்ஹிதீன் (முஃமீன்) களைப் போலும்.

ஆகவே கவனிக்கத் தகுந்த, நிறப்பமான கறாபாத்தாகிறது-குடும்பஸ்தமாகிறது:- சூறத்தையும் கருத்தையும் சேர்த்துக் கொண்டதுவாகும்.

பின்னர் கருத்தான ஆன்ம சம்பந்தமான கறாபாத்தாக இருக்கும்.

பின்னர் மார்க்க சம்பந்தமான சூறத்தைப் பொருத்த சம்பந்தமாக இருக்கும்.

பின்னர் சடலத்தை பொருத்த சம்பந்தமாக இருக்கும்..

**இன்னும் அவர்களுடைய தோழர்கள் பேரிலும்,** இவர்கள் அவர்களுடைய சொல்லில் பிரதிநிதியானவர்களும், அவர்களுடைய செயலிலும், குணத்திலும் ஸ்திரமாக நிற்கிறவர்களுமாகும்.

**அனைவர்கள் பேரிலும்**

**பின்னர் பாவியாகிய அடியான் சொல்கிறான்:-**

**அதாவது:- ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவே அதைக் கொண்டு வெளியானதும் தோன்றினதுமான 'அன்னிய்யத்து' எனும் திரையில் புரண்டவன் சொல்கிறான்:-**

**(ஹல்லாஜு ரஹ்மத்துல்லாஹி அவர்கள் சொல்கிறார்கள்:-)**

**بَيْنِيْ وَبَيْنَكَ اَنِّيْ يُنَازِعُنِيْ ،**

**فَارْفَعْ بِجُوْدِكَ اَنِيّاً مِنَ الْبَيْنِ،**

**பைனீ-வபைனக-அன்னியுன்-யுனாஸிவுனி**

**பற்ப:-பிஜூதிக-அன்னிய்யன்-மினல்பைனி,**

**'(ஆண்டவனே!) எனக்கிடையிலும், உனக்கிடையிலும் 'அன்னிய்யு-நான்' என்ற உணர்ச்சி என்னோடு பிணங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் உனது அருள் கிருபையைக் கொண்டு நமக்கிடையிலிருந்து அந்த 'அன்னிய்யத்'தை எடுத்து விடு.**

**(கேள்வி) இங்கு 'அன்னியத்து' என்பது கொண்டு கருத்தென்ன? என்று கேட்டாயானால்**

**(பதில்) நான் சொல்கிறேன்:- இங்கு 'அன்னிய்யத்'தைக் கொண்டு கருத்தாகிறது:- எனக்கு வெளி உஜூதான என்னுடைய குறிப்பைப் பற்றிய** அதாவது:- றூஹு நப்ஸைப் போல் மறைவானதும், இன்னும் சடலத்தைப் போல் காட்சியானதுமான (குறிப்பைப் பற்றிய) **உணர்வு உண்டாகிறதாகும்.**

**இந்த உணர்ச்சிக்கு பாவம் என்று சொன்னதாகிறது:- தஷ்பிஹை-சிருஷ்டியை கவனிப்பது கொண்டாக இருக்கும்.**

ஏனென்றால்(சூபிய்யாக்) கூட்டத்தார்களிடத்தில் 'பாவம்' என்று சொல்லப்பட்டதுவாகிறது:- அதன் முடிவு 'இன்மை'யளவில் மீளக்கூடியதுவேயாகும். எனவே சிருஷ்டியான குறிப்பு எனும் தஷ்பீஹாகிறது:- அது அல்லாஹ்வின் தோற்றங்களில் நின்றும் ஒரு தோற்றமாக இருந்த

போதிலும் பொதுப்படையான உஜூது(எந்த விதமான குறிப்புமில்லாத உண்மைப்பொருள்) அளவில் கவனித்துப் பார்க்கிறபோது நிச்சயமாக அது 'இன்மை'யளவிலேயே மீளும்.

**சில சமயம் 'அன்னிய்யத்து' என்றதைச் கொல்லி அதைக் கொண்டு உன்னுடைய அந்தரங்கமும், உள்ரங்கமும்(ஜனுதாபிதா) ஹக்குஸுபுஹானஹு வதஆலா அல்லாத்தது என்று நீ சந்தேகிப்பது என்றும் கருதப்படும் அது இங்கு நாடப்பட்டது அல்ல.**

**இந்த இரண்டு கருத்துக்களில் ஒவ்வொன்றிருக்கும் ஆரிபீன்களில் ஒருவருடைய வார்த்தை இடம்பாடாகும்.**

**وُجُودُكَ ذَنْبٌ لَايُقَاسُ بِهِ ذَنْبٌ**

**'உஜூதுக-தன்புன்-லாயுகாஸு-பிஹீதன்புன்'**

**'உன்னுடைய உஜூதாகிறது பாவமாகும். அதைக் கொண்டு வேறொரு பாவத்தையும் அதற்கு நிகரிடப்படமாட்டாது.'**

அந்தப் பாவத்தை மறைப்பதற்காகவும், அதை நீக்கி விடுவதற்காகவும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஷபாஅத்தளவில் தேவையானவனாகிய ஷெய்கு முஹம்மதுபுனு பள்ளுல்லாஹ் என்பவன் சொல்கிறான்,

இதுவாகிறது:- ஹகீகத்துடைய ஞானத்தைப் பற்றி விளக்கி வைப்பதிலான **வார்த்தைகளில் நின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட, கருத்து நிறைந்த, பதம் சுருக்கமான** சில வார்த்தைகளாக இருக்கும்.

அந்த ஞானமாகிறது:- ஷரீஅத்தின் சட்டங்களை தழுவி நடக்கிற சூபியாக்களின் ஞானமாகும். ஏனென்றால் ஹகீகத்திற்கும் ஹகீகத்தாகிறது ஷரீஅத்தின் உள்ரங்கமாகவேயாகும்.

**சூபியாக்களின் நம்பிக்கைக்குரிய நூல்களிலிருந்து பொறுக்கி எடுத்து,** அல்லாஹுதஆலாவின் கலப்பற்ற வருசை அவனுடைய அருட் கொடையினாலேயே இதை நான் சேகரித்தேன். இதனுடைய தவாபை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய றூஹுக்கு தாத்துக்கு ஆக்கினேன்.

ஏன் நன்மையான அமல்களடங்களும் அதனுடைய தவாபு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கிடைக்கும். (அதை அவர்களுக்கு சேர்த்து வைக்கும்பஎ) நாடப்படாது போனாலும் சரி.

இதற்கு 'அத்துஹ்பதுல் முற்ஸலத்து-இலன்னபி-ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்-நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களளவில் **அதன் தவாபை** அனுப்பப்பட்ட காணிக்கை'என்று பெயர் வைத்தேன். **நாயகம் -ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு** நான் 'பனாவுல் பனா'வின் மகாமில் சேர்கிறதற்காக

**துன்யாவிலும், இன்னும்** 'பகாவின் மகாமி'ல் சேர்கிறதற்காக **ஆகிறத்திலும் ஷபாஅத்து செய்கிறதற்காக வேண்டி.**

**இன்னும் அல்லாஹு தஆலாவிடத்தில் இதனுடைய தவாபை நாயகம் -ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களளவில் சேர்த்து வைக்கும்படி கேட்கிறேன். அவன் சகல வஸ்துக்களின் பேரிலும் சக்தியுடையவனும், (துஆவை) அங்கீகரிக்க மிக தகுதியானவனுமாகும்.**

**என்னுடைய சகோதரர்களே!**

அதாவது:- ஏகத்துவக் கொள்கையுடையவர்களே! **அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹுதஆலா உங்களையும், எங்களையும் சீதேவியாக்குவானாக!**

**நிச்சயமாக ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவாகிறவன் அவனே உஜூதாக இருக்கும்.**

எந்த ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டும் கட்டுப்பாடாகாத பொதுவானவன், அதாவது:- சுருதிப் பிரமாணத்தாலும், யுக்திப் பிரமாணத்தாலும், இன்னும் காட்சி அனுபவப் பிரமாணத்தாலும் உளதாக இருப்பது தரிபாடான ஒரு தாத்தாக இருக்கும்.

**அதாவது:- ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா அவனுடைய தாத்தானது அவனுடைய உஜூது தானாகவேயாகும். அதற்கு வேறானதுவல்ல. இது 'வஹ்தத்துல் உஜூது-உஜூது ஒன்று' என்று சொல்கிறவர்களிடத்திலாக இருக்கும்.**

**ஆனால் அவர்களல்லாத 'முதகல்லிமீன்'களிடத்தில்,** அதாவது:- உஸூலுடைய உலமாக்களிடத்தில் **ஹக்குதஆலாவின் தாத்தாகிறது அவனுடைய உஜூதுக்கு வேறானதும் அதை வேண்டுவதுமாகும். சரியான (சொல்லாகிற)து முந்தினதுவேயாகும்.**

**இன்னும்** அல்லாஹுதஆலாவை அறிவது மூன்று வழியானதாகவும், அதிலொன்றாகிறது:- அது குறைவானதுவாகும். அது 'தன்ஸீஹிய்யான' அறிவாகும்.

அதாவது:- ஹக்கு ஸுபுஹானஹு வதஅலா அவனுடைய தாத்து, இன்னும் அவனுடைய (ஹகீகிய்யான, மஜாஸிய்யான) சிபத்துகள் இவை இரண்டின் புறத்தினாலும் அவனுக்கு இலாயிக்கல்லாதவைகள் அடங்கலையும் விட்டு பரிசுத்தமானவன் என்று சொல்வதாகும்.

இரண்டாவதாகிறது:-

அதுதான் குப்ரு என்று குறிக்கப்பட்டதுவாகும். அது 'தஷ்பீஹி'ன் படி அறிவதாகும். (குர்ஆனில்) முதஷாபிஹான-நேர்பொருள் பொருந்தாத வசனங்களில் வந்தவைகளை எதார்த்தத்தின் பேரிலேயே சுமத்தாட்டுவதும் அல்லாஹு தஆலாவுக்கு அவனுடைய தாத்தின் புறத்தினாலும், சிபத்துகளின் புறத்தினாலும் சிருஷ்டிகளுடைய உருவங்களையும், உறுப்புகளையும் போன்று உருவங்களையும், உறுப்புகளையும் தரிபடுத்துவதாகும். அல்லாஹுதஆலா அவைகளை விட்டும் மிக உயர்வாகி பரிசுத்தமாகி விட்டான்.

மூன்றாவதாகிறது:- அதுதான் நிறப்பமானதாகும். அது 'தன்ஸீஹு'க்கும், தஷ்பீஹுக்குமிடையில் சேகரமாக்கியதும், பின்னர் கலப்பற்ற தன்ஸீஹின் படிக்கானதுவுமாகும்.

அல்லாஹுதஆலா 'லைஸக-மித்லிஹி-iஷவுன்-அவனைப் போன்று ஒரு வஸ்துவுமில்லை' என்று சொன்னது போல் அவனுடைய தாத்தின் புறத்தினால் அவனுக்கு ஒரு விதமான எல்லையும். கோலமும், கட்டுப்பாடும் இல்லை என்றும்.

இன்னும் 'வலஹு-குல்லு-iஷயின்- அவனுக்கு எல்லா வஸ்துவும் உண்டு' என்று அவன் சொன்னது போல் அவனுக்கு அவனுடைய(மஜாஸிய்யான) சிபாத்தின் புறத்தினாலும், அவனுயைட தஜல்லியாத்தின் புறத்தினாலும் முன்பு மறுதளிக்கப்படவைகள் எல்லாம் உண்டு என்றும் நம்புவதாகும். இன்னும் ஹக்குதஆலா வேறொன்றைக் கொண்டு ஒப்பானவனில்லை. ஏன் வேறொரு பொருள் அறவே இல்லையே. இன்னும் அவன் 'தஷ்பீஹு'டைய சூரத்துகளில் வெளியானவனாக இருப்பதுடன் அவன் முன்னிருந்த 'தன்ஸீஹை' விட்டும் பேதகமாகவுமில்லை என்றும்,

இன்னும் 'தன்ஸீஹானது' அவனுக்கு (அவனுடைய) தாத்தைப் பொருத்தாகும். 'தஷ்பீஹா'கிறது அவனுக்கு (அவனுடைய) மள்ஹரை-வெளியாகும் தானத்தைப் பொருத்ததுவாகும் என்றும்,

இன்னும் 'ஸுபுஹான- றப்பிக- றப்பில்- இஸ்ஸதி- அம்மா எசிபூன்- சிறப்புடைய உம்முடைய போஷகன், அவர்கள் வர்ணிப்பதை விட்டும் பரிசுத்தமானவன்' என்று அவன் சொன்னது போல் அவன் இவையிரண்டிலேயும் கட்டுப்பட்டவனுமில்லை என்றும் நம்புவதாகும் என்றும்,

ஆனபோது நூலாசிரியர் அவர்கள், கடைசியானதும் சரியானதுவுமான இக் கொள்கைளயைப் பற்றி விபரிக்க நாடி சொன்னார்கள்:-

அறிந்து கொள்ளுங்கள்.

**அந்த உஜூதாகிறது:- அதற்கு கோலமுமில்லை, எல்லையுமில்லை, கட்டுப்பாடுமில்லை.**

**அதாவது:- அந்த உஜூதாகிறது அதனுடைய தாத்திலும், அதனுடைய ஹகீகிய்யான சகல சிபத்துகளிலும் அதற்கு எல்லை இல்லை. ஏன் அந்த உஜூதாகிறது அது அதுவாக இருக்கிற புறத்தில்** அதாவது:- அதனோடு எந்த ஒரு சிபத்தையும், இஸ்மையும் கவனிக்காமல் **பொதுவானதாகவும், எல்லைக்குள்ளாகாத்ததாகவும் இருப்பதைப் போன்று அதனுடைய ஹகீககிய்யான சிபத்துகளும் பொதுவானதாகவும், பரந்ததாகவும்** அதாவது:- தாத்தில் நின்றும் ஒரு குறிப்பான இடத்தைக் கொண்டு சொந்தமாக்கப்படாத்ததுவாகவும் **எல்லைக்குள்ளாக்கப்படாத்ததுவுமாகும்.**

**இந்த** கூறப்பட்ட 'தன்ஸீஹு' இருப்ப**துடன் அது கோலத்திலும்,** குணப்பாட்டிலும் **எல்லையிலும்** தன்னாலேயே **வெளியாகி** தனது அஸ்மா சிபாத்துகளைக் கொண்டு **தோன்றினது.**

**அதாவது:- அந்த உஜூது வெளியில் சிருஷ்டிகளின் சூரத்தில், தன் பேரிலும், இன்னும்** மனு, ஜின்னு, மலாயிக்கத்துக்களைப் போல் எட்டிக் கொள்ளும்படியான சிருஷ்டிகளாகிய **தானல்லாதவர்கள் பேரிலும்** அதாவது:- தனக்கும் தானல்லாதவற்றிற்கும் எட்டிக் கொள்ளப்படக் கூடியதாக **வெளியானது, தோன்றினது.**

மேலும் சிருஷ்டியாகிய வெளியாகும் தலங்களில் இப்படி வெளியான காரணத்தினால், **கோலமின்மை எல்லையின்மையில் நின்றும்** அது எதன் பேரில் **இருந்த**தோ **அதை விட்டும் அது பேதகப்படவுமில்லை.**

ஏன் அதனுடைய குணபாடு அப்படி வெளியாகிறதாகிறது அதனால் சொல்லப்பட்ட மறுக்கப்பட்டவைகளில் நின்றும் ஒரு வஸ்துவும் அவசியமாகாது.

**எனினும் அது இப்போதும் கடைசி வரையிலும், எதன் பேரில் அது** ஆதியில் **இருந்ததோ அப்படியே இருக்கிறது.**

இதுவே தான் ஷெய்கு முஹிய்யத்தீனுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு புஸூஸுல்-ஹிகமெனும் கிதாபில் சொன்னதின் கருத்தாகும்.

فَاِنْ قُلْتَ بِالتَّنْزِيْهِ كُنْتَ مُقَيِّدًا ،

وَاِنْ قُلْتَ بِالتَّشْبِيْهِ كُنْتَ مُحَدِّدًا

وَاِنْ قُلْتَ بِالْاَمْرَيْنِ كُنْتَ مُسَدِّدًا ،

وَكُنْتَ اِمَامًا فِى الْمَعَارِفِ سَيِّدًا

فَمَنْ قَالَ بِالْاَشْفَاعِ كَانَ مُشْرِكًا ،

وَمَنْ قَالَ بِالْاِفْرَادِ كَانَ مُوَحِّدًا

فَاِيَّاكَ وَالتَّشْبِيْهَ اِنْ كُنْتَ ثَانِيًا ،

وَاِيَّاكَ وَالتَّنْزِيْهَ اِنْ كُنْتَ مُفْرِدًا

(பொருள்) நீ 'தன்ஸீஹை' கொண்டு (மட்டும் 'தஷ்பீஹ் இல்லாமல்) சொல்வாயானால் நீன் (ஹக்கு தஆலாவை 'தன்ஸீஹ் உடைய சூரத்தைக் கொண்டு) கட்டுப்பாட்டுக்குள்ளாக்கினவனாக ஆகுவாய்.

நீ 'தஷ்பீஹ் கொண்டு(மட்டும் 'தன்ஸீஹ்' இல்லாமல்) சொல்வாயானால் நீ (அவனை 'தஷ்பீஹ்' உடைய சூரத்தைக் கொண்டு) எல்லைக்குள்படுத்தியவனாக ஆகுவாய்.

நீ (தன்ஸீஹ், தஷ்பீஹ்) இரண்டு கருமங்களையும் கொண்டு சொல்வாயானால் நீ நேரான வழியிலானவனாக ஆகுவாய். மேலும் மஃரிபாவில் இமாமாகவும் தலைவனாகவும் ஆகுவாய்.

ஆகவே எவன் (ஒன்றாகிய ஹக்கை அவனோடு கல்கை தரிபடுத்துவது கொண்டு இரண்டாக்கி) சொல்வானோ அவன் (உஜூதில் கல்கை ஹக்கோடு) கூட்டாக்கியவனாக ஆகுவான்.

எவன் ஒன்றாக்கி சொல்வானோ அவன் (ஹக்கை உஜூதில் ஒன்றாக்கி தரிபடுத்தி அவனோடு அவனல்லாத்ததை தரிபடுத்தாததினால்) முவஹ்ஹிதாக (ஒன்றாக்கியவனாக) ஆகுவான்.

ஆகையினால் நீ (ஹக்கையும் கல்கையும் இரண்டு என்று சொல்லி) இரண்டாக ஆக்குவாயானால் (கல்கை ஹக்கோடு தரிபடுத்தி அவனை அதைக் கொண்டு) ஒப்பாக்குவதைப் பயந்து கொள்!தவிர்ந்து கொள்!

(எனினும் கல்கை ஹக்குடைய தஜல்லியாத்தின் சூரத்து என்றும், அது தன்னிலே மவுஜூது அல்ல என்றும், தரிபடுத்துவது அவசியமாகும்.)

நீ என்று சொல்வாயானால் தன்ஸீஹ் செய்வதை தவிர்ந்துக் கொள்!!

**இன்னும் அந்த உஜூதாகிறது ஒன்றேயாகும்.** அதில் அறவே எண்ணிக்கை இல்லை. **ஆனால் உடைகளாகிறது**, அதாவது:- அந்த உஜூது அன்னியர்களுடைய பார்வையை விட்டும் அதைக் கொண்டு திரை போட்டுக் கொண்டும், இன்னும் இரகசியவான்களுக்கு அதில் வெளியாகிக் கொண்டுமிருக்கிற சூரத்துகளாகிறது அவைகளின் இனங்களும், வகைகளும், கோலமும், உருவமும் விதற்பமாக இருப்பதினால் **விதற்பமானதாகவும் இன்னும்** அவை விதற்பமானதாக இருப்பதினால் எண்ணிக்கையாவது அவசியமாகிறதினால் **பலதாகவுமிருக்கும்.**

ஆகையினால் அப்பொழுது உஜூதில் பன்மையாகிறது:- மள்ஹருடைய-வெளியாகும் ஸ்தானத்தினுடைய புறத்தினாலேயேயாகும். வெளியான (தாகிய உஜூ)தின் புறத்தினாலில்லை. கவிஞர் சொன்னது போல்:-

وَمَا الْوَجْهُ اِلَّا وَاحِدٌ غَيْرَ اَنَّهُ ، اِذَا اَنْتَ اَعْدَدْتَّ الْمَرَايَا تَعَدَّدَا

'முகம் ஒன்றையல்லாதில்லை எனினும் நீ கண்ணாடிகளைப் பலதாக்குவாயானால் அது பலதாகிவிடும்'.

**அதாவது:- அந்த உஜூது அதைக் கொண்டு வெளியான சிருஷ்டிகளெனும் சூரத்துகளாகிறது**, அறிவில் அஃயான தாபிதாக்களின் சூரத்துகளை போலும். வெளியில் அஃயான காரிஜாவிலுள்ள-வெளி உஜூதிலுள்ள றூஹஜகளான-ஆன்மாக்களான சூரத்துகளையும், மிதால்களான- சூக்கும சூரத்துகளையும், ஸ்தூல சூரத்துகளையும், இன்னும் மனித சூரத்துகளையும் போல், **விதற்பமானதாகவும் பலதானதாகவும் இருக்கும்.**

**இன்னும் அந்த உஜூதாகிறது** ஒன்றன் பின் ஒன்றாக உண்டாகக் கூடியதும், அதனுடைய ஹகாயிக்குகளும், உட்பொருள்களுமாகிறது வாஹிதிய்யத்துடைய மற்தபாவில் (விபரமான) அறிவிலுள்ள குறிப்புகளுமாக இருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும், **இன்னும் அவைகளின் உட்பொருளுக்கும் ஹகீகத்தாக-அந்தரங்கமாக இருக்கும்.**

அதாவது:- சிருஷ்டிகளின் உட்பொருளாகிய அஃயானுதாபிதாவுக்கும் ஹகீகத்தாகயிருக்கும். ஏன் அஃயானு தாபிதாவின் ஹகீகத்தாகிறது (பொதுப்படையான) அறிவாகிய 'வஹ்தத்தி'ன் மற்தபாவிலுள்ள ஷுஊனு தாத்திய்யா தானே. (நூலாசிரியரின் வாசகத்திற்கு இது ஒரு கருத்தாகும்.)

(இன்னுமொரு கருத்தாகிறது அந்த உஜூதாகிறது சகல சிருஷ்டிகளுக்கும் ஹகீகத்தாக இருப்பதைப்போல் அது அந்த சிருஷ்டிகளெனும் கண்ணாடியில் வெளியானதின் பின்னால் அவைகளுக்கு பாதினாகவும்-உள்ளானதாகவும் அவைகளில் மறைந்ததாகவுமிருக்கும். ஆனால் உஜூதாகிய ஹக்குதஆலா 'அஃயானு தாபிதா' எனும் கண்ணாடியில் வெளியானான் என்று சொல்வாயானால் அப்பொழுது அவன் அதில் ளாஹிறாக- வெளியானவனாக இருக்கும். அஃயானு தாபிதா பாதினாக-உள்ளானதாக இருக்கும். விளங்கிக் கொள்! நேர்மை பெறுவாய்!

**இன்னும் சகல சிருஷ்டிகளும்** "குன்" என்ற அவனுடைய வார்த்தையில் நின்றும் சதாகாலம் வரையிலும் உண்டானதும், உண்டாகக் கூடியதும், அதில் பெரியதும், அதில் சிறியதும் **அணுவும்** அதை விடவும் சிறதும் **உள்பட** முழுதாகவும், பாகங்களாகவும் **அந்த உஜூது** அதில் வெளியானதாக இருப்ப**தை விட்டும்**, இன்னும் அதற்காக ஆயத்தமாகிய, அவனுடைய பூரணத்துவங்களைக் கொண்டு அவனில் எண்ணிக்கை உண்டாகாதபடி அதில் குறிப்பாகியிருப்பதையும் விட்டும் **ஒழியாது.**

இஃது ஒருவனாகிய ஹக்குதஆலாவை சிருஷ்டிகளெனும் வெளியாகும் ஸ்தானங்களில் வெளியானவனாக காட்சி கண்டவர்களிடத்திலாகும்.

**இன்னும் அந்த உஜூதானது-** அந்த உஜூது எனும் பதத்தைக் கொண்டு கருத்தாகிறது(ஆராய்தலால்) **நிச்சயப்படுதல்**; (தேடலால்) கிட்டுதல் என்பதாகிய அதன் பாஷைப் பொருள் என்ற **அர்த்தங் கொண்டல்ல.**

**ஏனெனில் அவ்விரண்டும்** அரூபிய்யான செயல்களின் பேரில் அறிவிக்கும்படியான பதங்களில் புழங்கப்பட்ட **தொழிலால் உண்டான பொருள்களில் நின்றுமுள்ளதாகும்.**

**அவை இரண்டும்** (யூத்திலேயேயல்லாமல்) **புறத்தில் பிரத்தியட்சமாயுள்ளதில்லை.**

சொல்லப்பட்ட தொழிலைப் பற்றிய, பாஷைப் பொருளான **இக்கருத்தின் படிக்கான** இந்த **உஜூ**(து எனும் பதத்)**தை** தனது குறிப்பெனும் குணப்பாட்டில் வெளியாகிற புறத்தில் தனது சிருஷ்டிகளென்ற **வெளியில்** -வெளி உதய ஸ்தானங்களில் ஹக்குடைய ஒளியைக் கொண்டு தங்கள் ஹிருதயங்கள் பிரகாசமாகி அவனைக் கொண்டு தங்களை விட்டும் முற்றாக நீங்கியவர்கள் அவனை அதில் கண்காட்சியாக காண்பது போன்று **பிரத்தியட்சமாக உள்ள ஹக்குதஆலாவின் பேரில் நடத்தாட்டப்படாது.**

மேலும் அவன்பேரில் அந்த உஜூதெனும் பதத்)தை அவ்விரண்டு கருத்தின் படிக்கும் நடத்தப்படுமானால் 'நிச்சயப்படுதல்' என்பதினால் அவனைப்பற்றிய சந்தேகமு;, 'கிட்டுதல்' என்பதினால் அவன் பேரில் இல்லாமை முந்துவதும் உண்டாகும்.

அல்லாஹு ஸுபுஹானஹுவதஆலா

**அவன்** தொழில் பொருளான கருத்துப்படி அவன் பேரில் **அதை** நடத்தாட்டுவதை **விட்டும் மிகமிகப் பரிசுத்தமாகி விட்டான்.**

**எனினும்** அத்வைதிகளாகிய **நாங்கள்** தொழில் பொருள் படிக்கல்லாத **அந்த உஜூதைக் கொண்டு** அதற்குரிய இந்த மூன்று **இலட்சணங்களையும் கொண்டு இலட்சணம் பூண்ட ஒரு ஹகீகத்தை-எதார்த்தப் பொருளை நாடுகிறோம்.**

**அதாவது:- அதன் உஜூது-அது உண்டானது தன்னைக் கொண்டாக,** இன்னும் அதன் கியாமும்-அதன் நிலைப்பாடும், ஸ்தலத்தளவிலோ, ஆக்கியவனளவிலோ, தேவையற்று தன்னைக் கொண்டாகவும் **இருப்பதும் இன்னும் சகல சிருஷ்டிகளுடைய உஜூதும்- அவைகள் உண்டானதும்** அவைகளின் கியாமும்-நிலைப்பாடும் அறிவுடைய சமூகத்திலும் இன்னும் வெளியிலும், அவைகளில் அது வெளியாவது கொண்டும், குறிப்பாவது கொண்டும்.

**அதைக் கொண்டாக இருப்பதும், இன்னும் வெளியில்-வெளி உஜூதில் அது அல்லாதது இல்லாதிருப்பதுவுமாகும்.**

ஏனெனில் அது அல்லாத்தது ஒவ்வொன்றையும் கற்பனை செய்து பார்ப்போமானால் அது அதன் இன்மையில் நின்றும் உண்டாகவும், வெளியாகவும் முன்னால் அதற்கு ஹக்கு தஆலாவின் உஜூதைப் போன்று ஒரு உஜூது இல்லை. அப்படியே அதற்கு பின்னாலும் கற்பனை செய்து பார்ப்போமானால் அதாவது:- அது (அதன் இன்மையிலிருந்து)வெளியான பிறகும் அதற்கு ஹக்கு தஆலாவின் உஜூதுக்கு மேலதிகமாக ஒரு உஜூது இல்லை. ஏன்? அது நீங்கிப் போகக் கூடிய 'நிழல்' என்பதாகவும், பிற பொருளைக் கொண்டு அண்டி நிற்கும்படியான அழிந்துப் போகக் கூடிய 'ஆதேயம்' என்றும் நீ அறிவாயே.

நிச்சயமாக நிழலாகிறது:- அது நிழலாக இருக்கிற புறத்தில் அதற்கு நிழலையுடையவனின் அசைவைக் கொண்டேயல்லாது அதற்கு அசைவு இல்லை என்பதும், அது எந்தப் பொருளின் நிழலாக இருக்கிறதோ அந்தப் பொருளில் நின்றும் வெளிப்படுகிறதின் விதத்தின்

படிக்கேயல்லாது அது தனக்கு ஒரு தாத்தும் எதார்த்தமுமில்லை என்பது அறியப்பட்ட விஷயந்தானே!

ஆகவே பொருள்களை உண்டாக்க முன்னாலும் அதற்குப் பின்னாலும், நிச்சயமாக உஜூதானது ஹக்குதஆலா ஒருவனுக்கு மட்டுமேயாகும்.

அறிந்து கொள்! நாம் இவ்விடத்திலும், இவையல்லாத இதை போன்ற இடங்களிலும் சொல்லி வந்தவைகளாகிறது:-

கஷ்பையுடைய அஹ்லுல்லாக்களின் அடிப்படை திட்டங்களின் பிரகாரம் அதை நாம் நடத்தாட்டினாலேயேயல்லாது அது சரியாகாது.

அவர்கள் அல்லாஹ் அல்லாதவைகளை அவன் அதில் வெளியாக முன்னால் அது அல்லாஹ்வின் தாத்தை விடவும் மேலதிகமான ஒரு வஸ்துவாக இல்லை என்று பார்க்கிறார்கள். ஏன்? அது அவனின் தாத்தைக் கொண்டே நிற்கக் கூடிய அவனின் குறிப்புகளெனும் நிஸபு- தொடர்புதானே.

ஆனால் வெளியாகும் தானமாகிய அஃயானு தாபிதாவென்ற அவைகளின் ஹகீகத்தைக் கொண்டு ஹக்குதஆலாவின் 'இல்மு' எனும் ஹழ்ரத்திலும்- சமூகத்திலும், அதில் அவன் வெளியானதின் பின்னால் அது 'மும்கினாத்து'-சிருஷ்டிகளில் நின்றுமுள்ளதாகும்.

அவர்களிடத்தில் 'மும்கினாத்து' களாகிறது:- அவைகளின் அஹ்காம்களான குணப்பாட்டைக் கொண்டு வெளியிலும் அவை தன்னாலேயே வெளியாவது அசம்பாவிதமானதாகும். ஏன் அவைகளின் பேரில் ஒலித்ததும், அவைகளளவில் சேர்;க்கப்பட்டதுவுமான உஜூதை கவனிப்பதில்லையானால் அவைகளின் இம்கானு வெளியில் இம்கானாக ஆகாது.

இதனாலேயே உஜூதானது 'வாஜிபுல் உஜூதான' ஹக்குதஅலாவைக் கொண்டே தனித்ததாக இருப்பதினால் அவர்களிடத்தில் வெளியில் உள்ளவைகள் ஹகீகத்தின் புறத்தினால் ஹக்குதஆலாவேதான். அவனல்லாத சிருஷ்டிகளில்லை என்று குறிப்பாகிவிட்டது. விளங்கிக் கொள்!

**இன்னும் அந்த உஜூதானது 'குன்ஹின்' புறத்தினால்** அதாவது:- அஹதிய்யத்துடைய மற்தபாவென்று சொல்லக் கூடியதான தாத்தின் ஹகீகத்தின் புறத்தினால் **எவருக்கும் வெளியாகாது**. முற்ஸலான நபியானாலும் சரி, முகற்றமான மலக்கானாலும் சரி, துன்யாவிலும் சரி, ஆகுறத்திலும் சரி 'பார்வைகள் அவனை எட்டிக் கொள்ளாது. அவன் பார்வைகளை எட்டிக் கொள்வான்' என்று அல்லாஹுதஆலா சொல்லியிருப்பது போல்.

**இன்னும் அதை புத்தியும், பேதமுற்ற மனமும், இன்னும் புலன்களும்** அதாவது:- அந்தக் கரணங்களைப் போன்று வெளிப்புலன்களான ஞானேந்திரியங்களும் **எட்டிக் கொள்ளாது அ**ந்த குன்ஹை அறிவதான**து ஒழுங்கு பிடிப்பதினாலும் வராது**. அதாவது:- புத்தியும், சிந்தனையும், அதற்கிடையிலும், அதை எதன் பேரில் ஒழுஞ்கு பிடிக்கப்படுமோ அதற்கிடையிலும் சம

ஒற்றுமை இருப்பதாக ஏற்பாடு செய்து பார்ப்பதிலும் வராது, ஏன் அவனுடைய ஹகீகத்தை-சுய தத்சொரூபத்தை அவனேயல்லாது (வேறெவரும்)அறியாரே.

**ஏன் சொல்லப்பட்ட இவையடங்கலும் புதிதானதாகும். புதிதானதாகிறது** அதாவது:- இன்மையைக் கொண்டு முந்தப்பட்ட சிருஷ்;டியாகிறது **குன்ஹைக் கொண்டு- தத்சொரூபத்தைக் கொண்டு - தத்சொரூபத்தைக் கொண்டு** தன்னைப் போன்ற இன்மையால் முந்தப்பட்ட **சிருஷ்டியையே அல்லாது எட்டிக் கொள்ளாது.** ஆகவே அது பூர்வீகமானதை அறியாது. எனவே புதிதானதாகிறது:- குன்ஹைக் கொண்டு புதிதானதையேயல்லாது எட்டிக் கொள்ளாது. ஏன் அவை இரண்டும் ஒன்று மற்றதை போன்றிருப்பதினால்.

பின்னர், நூலாசிரியர் அவர்கள் தன்ஸீஹைப் பற்றி சயிக்கினை செய்து சொல்கிறார்கள்:- **அவனுடைய தாத்தும், அவனுடைய சிபாத்துகளும் புதுமையை விட்டும் மிகமிக உயர்த்தியாகிவிட்டது**.

ஆகவே அவர்கள் சொல்லி வந்ததிலிருந்து நிச்சயமாக ஹக்குதஆலா உடைய தாத்தும், அவனுடைய சிபத்துகளும் பூர்வீகமானவை என்று அறியப்பட்டது.

இதனாலேயே ஷாரிஉ- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:-

'ஸுபுஹானக-மா அரப்னாக-ஹக்க-ம:ரிபதிக- ஆண்டவா! நீ பரிசுத்தமானவன், உன்னை அறிய வேண்டிய முறைபோல் உன்னை நாங்கள் அறியவில்லை'என்று சொன்னார்கள்.

**நான் சொல்கிறேன்:- ஹக்கு ஸுபுஹானஹுவதஅலாவின் குன்ஹுவாகிறது எவருக்கும் வெளியாகாது என்பதில் (வெளியாகாது என்று ஆரிபீன்கள் சொன்னதில்) ஆரிபீன்களில் ஒருவருக்கு துவக்கத்தில் சந்தேகமுண்டானது.**

**பின்னர், அல்லாஹுதஆலா அவனுடைய வருசையைக் கொண்டு அதை** அதாவது:- அந்த சந்தேகிக்கப்பட்டதை **விளக்கி வைக்கக் கூடிய மறைவான சில வாசகங்களை எனக்கு உதிப்பாக்கித் தந்தான்.**

**அதாவது:- அல்லாஹ்வை அறிந்த ஆரிபானவர், ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவை காட்சியாக கண்டாரேயானால் அந்த காட்சியை அறிந்தவராகவோ**, அது தம்கீனுடைய மகாமான 'பனாவுக்குப் பின் பகா'வுடைய மகாமாக இருக்கும். **அல்லது அல்லாமலாகவோ,** (அந்த காட்சியின் உணர்வு இல்லாதவராகவோ கண்டாரேயானால்) அது தல்வீனுடைய மகாமான 'பனாவுல் பனா' உடைய மகாமாக இருக்கும். **ஹக்கு ஸுபுஹானஹுவ தஆலாவின் குன்ஹை அறவே அவர் எட்டிக் கொள்ள மாட்டார்.**

**ஏன் ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலாவின் குன்ஹாகிறது:- அது சகல குறிப்புகளையும் விட்டும்** அதாவது:- லாத்தஅய்யுனுடைய மற்தபா என்று சொல்லக்கூடிய தன்ஸீஹிய்யான குறிப்புகளையும் விட்டும், இன்னும் தஅய்யுனுடைய மற்தபா என்று சொல்லக்கூடிய

தஷ்பீஹிய்யத்தான குறிப்புகளையும் விட்டும், நீங்கி பொதுவாக இருக்கிற புறத்தில் உஜூதுவேயாகும்.

நிச்சயமாக ஆரிபானவர், தான் காட்சி காண்பதைப் பற்றி அறிந்தவராகவோ அல்லது அறியாதவாரகவோ அல்லாஹு ஸுபுஹானஹுவதஆலாவை காட்சி காண்பாரேயானால் அவருடைய காட்சியாகிறது:- அதாவது:- அவருடைய காட்சியின் முடிவும், அவர்(ஹக்களவில்) சேர்ந்ததின் தீர்மானமுகாகிறது:- அவசியம் அது 'லாகைபுகு- கோலமில்லாமை'யின் படிக்கேயாகும்.

இதுவும் அதாவது:- இந்தக் 'கோலமில்லாமை'யும் குறிப்புகளில் ஒரு குறிப்பேயாகும். அப்போதும் அவர் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவை காட்சி கண்டதாகிறது, அவனுடைய உஜூதை, உவமையில் 'கோலமில்லாமை' எனும் குறிப்புடனேயே கண்டதாகவேயாகும். 'இத்லாக்கு-ஒரு குறிப்புமில்லா பொதுப்படை'யின் புறத்தினாலில்லை. அகவே ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவின் 'குன்ஹை' அறவே காட்சி காணமாட்டார்.

இதற்கு உவமானமாகிறது:-

அல்லாஹ்வை அறிந்த ரப்பானிய்யீன்களான உலமாக்களைத் தவிர, எனைய மிகுந்த ஜனங்கள், மனிதரையும், குதிரையைம், அவையல்லாத உயிரினங்களையும் பார்;க்கிறார்கள். வானம், சூரியன்,சந்திரன், மற்ற நட்சத்திரங்களையும் பார்க்கிறார்கள். மேலும் புலனால் கிரஹிக்கப்படக்கூடிய அனேக வஸ்துக்களையும் கிரஹிக்கிறார்கள். எனினும் அந்த வஸ்துக்களின் ஹகாயிக்குகளை-அந்தரங்கங்களை என்னவென்று அறிய மாட்டார்கள்.

இதைப்போல் தான் அல்லாஹ்வை அறிந்த ஆரிபீன்களுடைய நிலைமையும், அவர்கள் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவை தங்களுடைய கல்பினால் அந்த மள்ஹறுகளில்- உதயஸ்தானங்களில் காண்பார்கள்.

ஆனால் அந்த உதய ஸ்தானங்களில் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவின் 'குன்ஹை- ஹகீகத்தை' காட்சி காண மாட்டார்கள்.

(கேள்வி) ஆரிபானவர் அவர் காட்சி காணுகிற அறிவையும் கூட அவரை விட்டும் உரியப்பட்டு போகிற அளவில் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவை காட்சி காண்பாரேயானால் அப்பொழுது அவர் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவின் 'குன்ஹு' அளவில் சேர்ந்து விட்டார் என்று சொல்லப்படுமா? கேட்டாயானால்.

(விடை) நான் சொல்கிறேன்:- அப்படி சொல்லப்படாது. ஏனென்றால் 'சேருதல்' என்பதற்கு பொருள் காட்சி காண்பதுவேயாகும்.

ஹக்குத்தஆலாவை காட்சி காண்பதினால் அவனுடைய'குன்ஹை' காட்சி காண்பது உண்டாகி விடமாட்டாது. காட்சி காண்கிற அறிவை உரியப்பட்டாலும் சரியே, நாம் சொல்லி வந்தது போல்.

**எவராவது இந்த விதத்தில்** அதாவது:- குன்ஹின் புறத்தினால் **அவனை அறிவதை** அதாவது:- அல்லாஹுதஆலாவை **அறிவதை நாடி அதில் முயற்சி செய்வாரேயானால்** அந்த தேட்டத்தில் தெண்டித்தானேயானால் **அவருடைய நேரத்தை வீணாக்கி விட்டான்**. ஏன் அது, அசம்பாவிதத்தில் முயற்சிப்பதாகும்.

**இன்னும்** (அறிந்து கொள்!) **அந்த உஜூதுக்கு** அதனிடத்தில், வெளியாவதைத் தேடிய அதனுடைய அஸ்மாக்களின் தேட்டத்தை உண்டாக்கிக் கொள்வதற்காக வேண்டி அதனுடைய கமாலாத்துகளுடைய மற்தபாக்களில் இறங்குகிற புறத்தில் **அதற்கு அனேக மற்தபாக்கள் உண்டு. 'ரபீவுத் தரஜாத்தி'**-'பதவிகள் உயர்வானவனாக இருக்கும்' என அவன் சொன்னது போல்.

அவைகளில் நின்றும் ஷெய்கு அப்துல் கரீமுல் ஜியலி (அல்லாஹ் அவர்களின் அறிவைக் கொண்டு நமக்குப் பிரயோஜனமாக்குவானாக!) அவர்கள் தங்களின் 'அல்கஹ்பு-வற்றகீம்' என்ற நூலில் நாற்பது மற்தபாவை எண்ணிக் காட்டியுள்ளார்கள்.

அவை இவையாகயிருக்கும்:- அறிந்து கொள்! 'மீம்' (எனும் அச்சரத்தி)னுடைய எண்ணமாகிறது நாற்பது எண்ணாக இருக்கும்.

இவ்வெண்ணமாகிறது:- ஒவ்வொரு வஸ்துக்களிலும் சம்பூரணமான நடு நிலைமையாக இருக்கும்.

இது அல்லாஹு ஸுபுஹானஹு வதஆலா உடைய 'மீகாத்தாக' இருக்கும்.

'மீகாத்து' என்பதற்கு பொருள் இந்த எண்ணிக்கையாகிறது உஜூதுடைய மற்தபாக்களுக்கு இதற்குப் பிறகு துவக்கத்திலிருந்ததுவேயல்லாதில்லையே அப்படியான மற்தபாக்களுக்கு இது நேர்பாடாக இருப்பதுவேயாகும்.

1. முதலாவது மற்தபாவாகிறது:- 'தாத்துஸ்ஸாதஜு'வாகும்.

2. இரண்டாவது மற்தபாவாகிறது:- 'அமா'வாகும். அது 'ஸறாபகுத்து' 'கலப்பற்றது' என்று சொல்லக் கூடிய 'குன்ஹு தாத்து'வாகும்.

3. மூன்றாவது:- 'அஹதிய்யத்' தாகும். அது ;கன்ஸுல் மக்பி' என்று சொல்லக் கூடிய 'ரஹ்மத்-தாத்திய்யா-தாத்தின் கிருபை'க்கு சொல்லப்படும்.

4. நான்காவது:- 'வாஹிதிய்யத்'தாகும். அது தாத்து, அஸ்மா, சிபாத்தில் இறங்கிய முதல் இறக்கமாகும்.

5. ஐந்தாவது:- 'உலூஹிய்யத்'தாகும். அது உஜூதுடைய மேல் மற்தபாக்களையும், கீழ் மற்தபாக்களையும் பொதிந்த மற்தபாவாகும்.

6. ஆறாவது:- 'ரஹ்மானிய்த்'துடைய மற்தபாவகும். அது உஜுதுடைய மேல் மற்தபாக்களைக் கொண்டு சொந்தமானதாகும்.

7. ஏழாவது:- 'ரப்பியத'து- போஷகனாகயிருப்பதுடைய மற்தபாவாகும். அது 'மற்பூபு'- போஷpக்கப்பட்டவன் இருப்பதைத் தேடக் கூடிய மற்தபாவாகும். இங்கிருநு;து தான் சிருஷ்டி வெளியானது.

8. எட்டாவது:- 'அற்ஷா'க இருக்கும். அது 'ஜிஸ்முல் குல்லு'- பொதுவான சடமாகும்.

9. ஒன்பதாவது:- 'கலமுல்-அ்ஃலா'வாகும்.

10. பத்தாவது:- 'லௌஹு'வாகும். (அது இன்ஸானிலே 'ரூஹுல் குத்ஸுவாக' இருக்கும். அது அலமுல் கபீரில் 'ஹயாத்தாக' இருக்கும். அது 'அக்லுல்-குல்லு-பொதுவான அக்லு'வாகும். அதை 'கல்பு' என்று சொல்லப்படும்.)

11. பதினொன்hறவது:- 'நப்ஸுல் குல்லிய்யா'-பொதுவான நப்ஸுவாகும்.

12. பன்னிரெண்டாவது:- 'ஹயூலா'வாகும்.

13. பதிமூன்றாவது:- 'ஹபா'வாகும்.

14. பதினான்காவது:- 'பலகுல் அனாஸிராகும்'-பூத மண்டலமாகும்.

15. பதினைந்தாவது:- 'பலகுல் அத்லஸாக' இருக்கும். (-ஒரு நட்சத்திரமில்லாத மொட்டையான வானமாகும்.)

16. பதினாறாவது:- 'பலகுல் புறூஜு'-இராசிகளின் வானமாகும்.

17. பதினேழாவது:- 'பலகுல் ஸுஹலு' சனி நட்சத்திர வானமாகும்.

18. பதினெட்டாவது:- 'பலகுல் முஷ்தரீ'- வியாழ நட்சத்திர வானமாகும்.

19. பத்தொன்பதாவது:- 'பலகுல் மிற்றீகு'-செவ்வாய் நட்சத்திர வானமாகும்.

20. இருபதாவது:- 'பலகுஷ் ஷம்ஸு'-ஞாயிறு நட்சத்திர வானமாகும்.

21. இருபத்தொன்றாவது:- 'பலகுஸ் ஸுஹறா'-வெள்ளி நட்சத்திர வானமாகும்.

22. இருபத்திரண்டாவது:- 'பலகுல் அதாரிது'- புதன் நட்சத்திர வானமாகும்.

23. இருபத்தி மூன்றாவது:- 'பலகுல் கமறு' 'திங்கள் நட்சத்திர வானமாகும்.

24. இருபத்தினாங்காவது:- 'பலகுல் அதீறு' அது 'பலக்குன்னாறு'-நெருப்பு மண்டலமாகும்.

25. இருபத்தைந்தாவது:- 'பலகுல் ஹவா'-காற்று மண்டலமாகும்.

26. இருபத்தாறாவது:- 'பலகுல் மாஉ'- தண்ணீர் மண்டலமாகும்.

27. இருபத்தேழாவது:- 'பலகுத் துறாபு'-பூ மண்டலமாகும்.

28. இருபத்தெட்டாவது:-'பலகு முவல்லி தாத்து'- ஈனக் கூடியவைகளின் மண்டலமாகும்.

29. இருபத்தொன்பதாவது:- 'பலகுல் ஜவ்ஹருல் பஸீது'-பரந்த ஆதாரப் பொருளின் மண்டலமாகும்.

30. முப்பதாவது:- 'பலகுல் அர்ழி-வல்லாஸிமி'-ஆதேயப் பொருள், அவசியப் பொருளின் மண்டலமாகும்.

31. முப்பத்தி ஒன்றாவது:- 'முறக்கபாத்து' சோக்கப்பட்ட பொருள்களாகும்.

32. முப்பத்திரெண்டாவது:- 'மஃதினு'- நிரசப் பொருளாகும்.

33. முப்பத்தி மூன்றாவது:- 'நபாதாத்து'- தாவரப் பொருள்களாகும்.

34. முப்பத்தி நான்காவது:- 'ஹயவானாத்து'-உயிர் பிராணிகளாகும்.

35. முப்பத்தி ஐந்தாவது:- 'இன்ஸான்'-மனித வர்க்கமாகும்.

36. முப்பத்தாறாவது:- 'இன்ஸானில் நின்றும் வெளி உருவ உலகமாகும்'. இதனோடு தான் துன்யாவை சேர்க்கப்படும்.

37. முப்பத்தேழாவது:- 'இன்ஸானின் உட்பொருளான அக உலகமாகும். இதனோடு தான் 'கியாமத்'து நாளை சேர்க்கப்படும்.

38,39. முப்பத்தெட்டாவதும், முப்பத்தொன்பதாவதும்:- சுவர்க்கமும், நரகமுமாகும்.

40.நாற்பதாவது:- 'கதீபுல்-அப்யளு'- 'வெண்மணல் திடலா'கும். இதனளவில் தான் சுவர்க்கவாதிகள் போவார்கள். இது ஹக்குதஆலாவின் சமூகத்திற்கு சொல்லப்படும்.

சுழல் சுற்றி விட்டது. இதற்குப் பின்னால் தாத்தேயல்லாதில்லை.

இவைகளை நூலாசிரியர் அவர்கள் ஏழு மற்தபாவில் சுருக்கிச் சொல்கிறார்கள்.

தாத்தாகிய உஜூதுக்குள்ள ஏழு மற்தபாக்களில் நின்றும்

**1. முதலாவது மற்தபாவாகிறது:- மற்தபதுல்-லா-தஅய்யுனி, வல்-இதலாக்கி, வத்-தாத்தில் பஹ்தி-குறிப்பில்லாத, குறிப்பை விட்டும் பொதுப்படையான தாத்து பஹ்துடைய** அதாவது கலப்பற்ற தாத்துடைய **மற்தபாவாகும்.**

இதற்கு 'ஜம்வுல் ஜம்வு' என்றும், 'ஹகீகத்துல்- ஹகாயிகு' என்றும், 'அமா' என்றும் சொல்லப்படும்.

பின்னர், அறிந்து கொள்! இங்கு 'இத்லாக்கு-பொதுப்படைய' என்பதாகிறது:- குறிப்புக்கு எதுகையான 'பொது' என்ற பொருள் படிக்கில்லை. ஏன் அதுவும் குறிப்பாகுமே.

எனினும் அதைக் கொண்டு கருத்தாகிறது:- அதனால் விளங்கப்படுவதுமாகும். அதுவாகிறது:- பல்வேறு விதங்களில் நின்றும் ஒரு விதத்தையும் கொண்டும் அதில் குறிப்பில்லையே அதுவாகும்.

(குறிப்பை நீக்குவதைக் கொண்டு) **'பொது' என்கின்ற கட்டுப்பாடும், இன்னும் குறிப்பை நீக்குகிற கருத்தும், இந்த மற்தபாவில் தரிபாடாக இருக்கிறது என்ற பொருள் படிக்கில்லை. எனினும் அந்த** தாத்தாகிய **உஜூதாகிறது இந்த அஹதிய்யத்துடைய மற்தபாவில் அதனளவில் நஃதுகளையும், இன்னும் சிபத்துகளையும் சேர்ப்பதை விட்டும் பரிசுத்தமானதாகும் என்ற கருத்துப்படிக்காகும்.**

'நஃது' என்பது:- இருக்கிற ஒரு பொருளைக் கொண்டு வர்ணிப்பதாகும்.

'சிபத்து' என்பது கொண்டு கருத்தாவது:- இருக்கிறதைக் கொண்டு வர்ணிப்பதற்கும், இல்லாததைக் கொண்டு வர்ணிப்பதற்கும் பொதுவான வர்ணிப்பாகும்.

நஃதுகளும், சிபத்துகளும் இந்த மற்தபாவில் தரிபாடானதாகவே இருந்தாலும் சரியே.

ஏன் இந்த மற்தபாவில் அவை இரண்டிற்குமிடையிலும், தாத்துக்குமிடையிலும் வேற்றுமை இல்லையே.

**அதாவது:- அங்கு இஸ்முமில்லை**. ஹையுன்-சீவனுள்ளவன் ஆலிமுன்- அறிவுள்ளவன் என்பதைப்போலும், அவை போன்றவைகளைப் போலும்.

**இன்னும் றஸ்முமில்லை.** கதீமுன்- பூர்வீகமானவன். பாகின்-தரிபாடாக இருப்பவன் என்பதையும், அவை போன்றவைகளையும் போல்.

**இன்னும் நஃதுமில்லை** ஹயாத்து-சீவன் என்பதைப் போல்.

**இன்னும் ழுஹூறும்-வெளியாவதும், புதூனும்-உள்ளாவதுமில்லை இன்னும் குல்லிய்யத்தும் - சமட்டியாயிருப்பது - பொதுவானதாயிருப்பதும், ஜுஸ்யிய்யத்தும்-வியட்டியாயிருப்பதும் - குறிப்பானதாயிருப்பதும் இல்லை.**

**இன்னும் உமூமும் - பொதுவும், குஸூஸும் -சிறப்பும் இல்லை.**

**எனினும் இவையெல்லாம்** பின் வருகிற **அதன் மற்தபாக்களையும், ஸ்தானங்களையும் அனுசரித்துண்டானவைகளாகும்.**

**ரபீவுத்தறஜாத்தி துல் அற்ஷி -தானங்களால் உயர்ந்தவன், அறுஷையுடையவன் என்று அதனளவில் அல்லாஹுத்தாஆலா அவனின் திருவாக்கியத்தைக் கொண்டு சயிக்கினை செய்திருப்பது போல்.**

**(கேள்வி) சூபியாக்களான ஷெய்குமார்களும், ஹுகமாக்களும்-தத்துவ ஞானிகளும் முதகல்லிமீன்களில் ஷெய்கு அபுல்ஹஸன் அஷ்அரீ அவர்களும், ஹக்கு ஸுபுஹானஹு**

வதஆலா உடைய தாத்தாகிறது அது உஜூது காஸ்ஸாகம் -குறிப்பான உஜூதாகும்- (ஆம்மானது- பொதுவானது இல்லை) என்பதின் பேரில் ஏகோபித்திருக்கிறார்களே, அப்படியானால் ஜுஸ்யிய்யாகவும்- குறிப்பானதாகவும், வாஜிபுல் உஜூதைக் கொண்டு - இருப்பது அவசியமானவனைக் கொண்டே அவசியம், சொந்தமானதாகவும் ஆகிவிடுமே? என்றும் சொல்வாயானால்

(பதில்) சொல்லப்படும். 'ஜுஸ்யிய்யத்துமில்லை, குஸூஸுமில்லை 'குறிப்பானதாக இருப்பதுமில்லை, சிறப்புமில்லை' என்று நான் சொன்ன வார்த்தையில் மறுக்கப்பட்ட 'குறிப்பு, சிறப்பு' என்பது கொண்டு கருத்தாகிறது:- அவனுடைய தாத்துக்கு மேலால் மேலதிகமான குறிப்பு என்பதுவேயாகும்.

இல்லையானால் அதாவது அப்படி கருத்து இல்லையானால், அவன் தாத்து தானாகவேயிருக்கிற குறிப்பானது ஹக்குஸுபுஹானஹுவதஆலா உடைய தாத்தில் நிச்சயமாக இருக்கவே செய்கிறது.

(கேள்வி) அவர்கள் எல்லோர்களும் ஏகோபித்திருக்கிறபடி ஹக்குதஆலாவின் தாத்தாகிறது:- அது உஜூது காஸ்ஸாக- குறிப்பான உஜூதாகவே இருக்கும்போது, அதை 'முத்லக்கு-பொதுவானது' என்பதற்கு கருத்தென்ன? என்று கேட்கப்படுமானால்,

(பதில்) அது அதாவது:- உஜூது பொதுவானதாக இருப்பதற்கு கருத்தாவது:- அது சிபாதிய்யான, அஸ்மாதயிய்யத்தான குறிப்புகளில் நின்றும் ஒரு வஸ்துவைக் கொண்டும் குறிப்பாகாமலும், கட்டுப்பாடாகாமலும் இருக்கிற கவனிப்பைக் கொண்டாகும்.

அங்கு அதாவது:- எதார்த்தத்தில் ஒரு குறிப்பும் அறவே இல்லாதிருப்பது என்பதில்லை. ஏன் அவர்கள்(-சூபியாக்கள் எல்லோர்களும்) அல்லாஹு தஆலாவாகிறவன், அவன் தாத்து தானாக இருக்கிற குறிப்பைக் கொண்டு குறிப்பானவன். (அதாவது:- அவன் காஸ்ஸான உஜூதாக இருக்கும்) என்று நல்ல துலாம்பரமாக சொல்லியிருக்கிறார்கள்.

நான் சொல்கிறேன்:- இதுவாகிறது:- அதாவது:- சூபிய்யாக்களான ஷெய்குமார்களும், ஹுகமாக்களும், இன்னும் ஷெய்கு அபுல்ஹஸன் அஷ்அரீ அவர்களும் ஏகோபித்திருக்கிறார்கள் என்பதாகிறது:- அது ஹகீகுத்ததுடைய சில கிதாபுகளிலிருந்து விளங்கப்படுவதாகும்.

**எனினும்,** சொல்லப்பட்ட ஏகோபித்தலை அந்த சொல்லப்பட்ட ஏகோபித்தலைக் கொண்டு கருத்து:- ஹுகமாக்களும் ஷெய்கு அபுல் ஹஸன் அஷ்அரீ அவர்களும், இன்னும் எல்லா சூபிய்யாக்களும் அல்லாமல், சில சூபிய்யாக்களும் ஒற்றுமையானது என்பதாகவே கருத்துக் கொள்ளப்படுவது அவசியமாகும். ஏனென்றால் நாம் இதற்கு அடுத்தான்மையாகவே சூபிய்யாக்களுக்கிடையில் விதற்பமான அபிப்பிராயத்தை சொல்லிக் காட்டுகிறோமே அதற்காக,

இன்னும் (அது) சகல கட்டுப்பாட்டை விட்டும், மேலும் (கட்டுக்கபாட்டை விட்டு) ;நீங்குவது என்ற கட்டுப்பாட்டையும் கூட விட்டும் பரிசுத்தமானதாகும்.

ஏனென்றால் பொதுவாக 'நீங்குவது' என்பதாகிறது:- சிந்தித்துப் பார்க்கும்போது அதன்பேரில் பொதுவாக ஒரு ஒரு குறிப்பைக் கொண்டு தீர்ப்பளிக்கின்றது. அல்லாஹு ஸுஹானஹுவதஆலாவோ அவனுடைய தாத்தின் புறத்தால் அவன் பேரில் எந்த ஒரு தீர்ப்பைக் கொண்டும் தீர்ப்பு செய்யப்படாதவனாக இருக்கும்.

**அறிந்து கொள்! இந்த தாத்தாகிய உஜூதாகிறது கவனிப்பின் புறத்தினால் அதனளவில் சேர்த்துப் பார்க்கிறதை விட்டும், பரிசுத்தமாக்கப்பட்டவை அடங்களுமாகிறது அவை ஹகீகத்ததின் புறத்தினாலும், மறைந்திருப்பது என்ற புறத்தினாலும் இந்த அஹதிஜய்யத்தென்ற தஜல்லியில்- அஹதிய்யத்தின் மர்தபாவில் இருக்கவே செய்கின்றன.**

**அறிந்து கொள்! நான் சூபிய்யாக்களான ஷெய்குமார்களுடைய நூல்களை எல்லாம் கவனித்து ஆராய்ந்து பார்த்ததில் அவைகளில் சிலவற்றில் சூபிய்யாக்கள், ஹக்குஸுபுஹானஹுவதஆலாவின் தாத்தாகிறது அது 'உஜூது காஸ்ஸாக' இருக்கும்- குறிப்பான உஜூதாக இருக்கும் என்றும், இன்னும் அல்லாஹுதஆலா அவனுடைய தாத்து தானாகவே இருக்கிற குறிப்பைக் கொண்டு குறிப்பானவன் என்றும் சொல்கிறதாகவும் தெரிந்தேன்.**

**அதுவேதான் ஹுகமாக்களுடையவும், ஷெய்கு அபுல்ஹஸன் அஷ்அரீ அவர்களுடையவும் கொள்கையாகும்.**

**இன்னும் அவைகளில் சிலவற்றில், சூபிய்யாக்கள் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவின் தாத்தாகிறது 'உஜூது முத்லக்'காகும் 'காஸ்ஸு' அல்ல- 'பொதுவான உஜூதுவாகும், குறிப்பானதல்ல' என்றும், இன்னும் அல்லாஹு தஆலா அவன் அவனின் தாத்தின் புறத்தினால் எல்லா கட்டுப்பாட்டையும், குறிப்பையும், அந்தக் குறிப்பு அவனுடைய தாத்தின் பேரில் மேலதிகமானதாக இருந்தாலும் சரி, அல்லது தாத்து தானாகவேயிருந்தாலும் சரி, மேலும் (குறிப்பை விட்டும்) 'நீங்குவது' என்ற கட்டுப்பாட்டையும் கூட பரிசுத்தமானவன் என்றும் சொல்கிறதாகவும் தெரிந்தேன்.**

**இப்போது இந்த இரண்டு பிரதிகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்படுகின்றது நயும் அறிவாய்.**

**அவை இரண்டிற்குமிடையில் நேர்மையாக்குவதாகிறது:- முந்தின பிராதியில் சில சூபிய்யாக்களைத் தொட்டும் சொல்லப்பட்டது என்றும், மற்ற பிரதியில் வேறு சில சூபிய்யாக்களைத் தொட்டும் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் வைப்பதினால் உண்டாகும். அப்போது முரண்பாடில்லை. (ஆனாலும் சூபிய்யாக்கள் இரு வகையினர்களாக இருப்பதாக தெரிகிறது)**

**எனினும் என்னுடைய மதஹபாகிறது:- இரண்டாவது பிரதிபடிக்காக இருக்கும்.**

இந்த மர்தபாவாகிறது:- இதற்கு 'மர்தபத்துல் அஹதிய்யத்து' என்று சொல்லப்படும்.

இன்னும் 'தாத்துஸ்ஸாதஜ்'-'கலப்பற்ற தாத்து' என்றும், 'மஸ்கூத்து அன்ஹு...-அதை தொட்டும் வாய் பொத்தப்பட்டது' என்றும், இன்னும் விரிவான நூல்களில் கூறப்பட்ட இவையல்லாத பெயர்களைக் கொண்டும் சொல்லப்படும்.

**அதுவாகிறது:-** அஹதிய்யத்தாகிறது-**ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவின் 'குன்ஹு' ஹகீகத்துவாகும்.** அவனுடைய ஹகீகத்தாகிறது, அவனல்லாதவர்களுக்கு அறியப்படாததாகும். இந்த மர்தபாவில் உஜூதை அறிவதானது:- ஓடும் தானத்தால் அறிவு மிக கிட்டுமையானதும், சொல்லால் ரொம்ப வருத்தமானதும், சிந்தையின் பேரில் மிக்க வருத்தமானதும், சொல்வதை ஒப்புக் கொள்வதை விட்டும் மிக தூரமானதுவுமாகும்.

அதனளவில் நம்முடைய இமாம் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், உஸ்வதுல் அனாம், கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பின்வருமாறு சயிக்கினை செய்தது போல்.

اَلْعَجْزُ عَنْ دَرْكِ الْاِدْرَاكِ اِدْرَاكٌ

وَدَعْوَي الْاِدْرَاكِ بِالْحَوَاسِّ الْخَمْسِ اِشْرَاكٌ

وَدَعْوَي كَمَالِ الْمَعْرِفَةِ مِنَ الْخِيَالِ تَشْبِيْهٌ وَتَمْثِيْلٌ

فَاقْطَعْ بِوُجُوْدٍ بِلَا تَشْبِيْهٍ

وَاطْمَانَ اِلٰى تَعْظِيْمٍ وَتَقْدِيْسٍ وَتَنْزِيْهٍ

'எட்டிக் கொள்வதை விட்டும் மாட்டாங்கியாவதுவே எட்டிக் கொள்வதாகும். ஐம்புலன்களைக் கொண்டு எட்டிக் கொள்கிறதாக தாவா செய்வது இணை வைப்பதாகும். பொதுவாக மஃரிபா தன்னை விட்டுமே அவேட்கையை தறிப்பதானது (மனதை) பாழ்படுத்துவதாகும். கற்பனையினால் பூரண மஃரிபாவை (அது உண்டாகி விட்டதாக) தாவா செய்வதாகிறது, ஒப்பாக்குவதும், உவமானமாக்குவதாகும்.

ஆகையினால் ஒப்புவமையில்லாமல் ஒரு உஜூது உண்டென்பதாக நிச்சயப்படுத்திக் கொண்டு மரியாதை செய்வதளவிலும், (ஒப்புவமையை விட்டும்) பரிசுத்தமாக்குவதிலும், தூய்மைப் படுத்துவதிலும் மனச் சாந்தி பெறு.'

**இதற்கு மேலால் வேறொரு மர்தபாவுமில்லை. எனினும் சகல மர்தபாக்களும் இதற்கு கீழாலேயேயுள்ளதாகும்.**

www.sufimanzil.org

**<u>இன்னும்</u>** உஜூது தாத்திய்யிக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

**<u>2) இரண்டாவது மற்தபாவாகிறது:- தஅய்யுனுல் அவ்வலு-முதலாவது குறிப்புவாகும்.</u>**

அதாவது:- 'லாதய்யுனு- குறிப்பில்லாத்தது எனும் சமூகத்திலிருந்து வெளியான முதலாவது குறிப்பாகயிருக்கும். எனவே அது சகல ஹகாயிகுகளையும் சேகரமாக்கியதாகவும், இன்னும் உஜூது உள்ளாகிறதற்கும் அது வெளியாகிறதற்குமிடையில் பிரிக்கிறதானதாகவும் குறிப்பானது.

இதுவாகிறது ஹக்குதஆலா, அவனுடைய தாத்தையும், அறிந்திருப்பதற்கும், அதாவது;- அவனுடைய தாத்து தானாகவேயிருக்கிற தாத்தின் கமாலாத்துகளை-வல்லமைகளை தன் தாத்தைக் கொண்டே அறிவதற்கும், இன்னும் தீர்மானமில்லாத அவனுடைய சிபத்துகளையும், இன்னும் அந்த சிபத்துகள் அவை தாத்திய்யானதாக இருந்தாலும் சரி, 'அஹது''பற்து' என்பதைப் போல்.

அல்லது நப்ஸிய்யத்தான சிபத்தாக இருந்தாலும் சரி, 'ஆலிம்' 'காதிர்'என்பதைப் போல்.

அல்லது பி்லிய்யாவான சிபத்தாக இருந்தாலும் சரி, 'மு்தி' 'கல்லாக்கு' இவை போன்றவைகளை போல்,

அவைகளில் நின்றும் பனராக வந்த அவனுடைய அஸ்மாக்களையும்,

**<u>இன்னும்,</u>** அவனுடைய அறிவிலுள்ளவைகள், இங்கு அவைகளின் ஹகீகத்துகளாகிறது;- அவனுடைய 'ஷுஊனு தாத்திய்யா'வாக இருக்கிறதே அப்படியான **<u>சகல சிருஷ்டிகளையும், ஒன்றை மற்றொன்றை விட்டும் பிரித்தில்லாமல் பொதுவாக அறிவதற்கும் சொல்லப்படும்.</u>**

ஏனெனில் அது ஒன்றாக இருப்பதற்காகவும், அது அஸ்மாக்களையும், இன்னும் இலாஹிய்த்தான ஹகாயிகுகளையும். கௌனிய்யத்தான ஹகாயிகுகளையும், சூழ்ந்துக் கொண்டுகம், சேகரமாக்கிக் கொண்டுமிருப்பதற்காகவுமாம்.

இன்னும் 'மகாமு அவ் அத்னா' வின் மற்தபாவென்றும் சொல்லப்படும். ஏன் மற்ற நபிமார்கள் எவருக்குமேயில்லாமல், நம்முடைய நபி அவர்களுடைய 'மி்ராஜு-ஏற்றம்' இங்கு வரையிலும் இருந்ததற்காக.

**<u>இன்னும்</u>** மேலும் **<u>இதற்கு 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா'</u>** வின் மற்தபா **<u>என்றும் சொல்லப்படும்.</u>**

இதற்கு சூபிய்யாக்களிடத்தில் 'ஹகீகத்துல்-ஹகாயிகி-அந்தரங்கத்திற்கெல்லாம் அந்தரங்கம்' என்று சொல்லப்படும்.

ஏன் இந்த மற்தபாவாகிறது:- இதுதான் ஹக்குதஆலா 'கைபுல்-ஹுவிய்யத்'திலிருந்து குறிப்பாகி வெளியான முதலாவது குறிப்பும், வெளிப்பாடுமாகயிருப்பதை கவனித்ததற்காக.

இன்னும் அதில் அவன் நிர்ணயித்த முதலாவது நிர்ணயிக்கப்பட்டதாகிறது:- 'நூருல் முஹம்மதிய்யு'- நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒளியாக இருக்கும்.

இதனளவில் தான் 'அவ்வலு மா கலகல்லாஹு நூரீ'- 'அல்லாஹ் நிர்மாணித்ததில் முந்தினது என்னுடைய ஒளியாகும்' என்ற தங்களின் வார்த்தையைக் கொண்டு சயிக்கினை செய்யப்பட்டதாகும்.

இன்னும் இதில் அமைந்திருக்கிற அறியப்பட்டவைகளான 'கவனிப்புகளை'யும் 'ஷ{ஊனு தாத்திய்யா'வையும் இது பொதிந்துக் கொண்டும், 'இத்லாக்கு' 'தக்யீது' 'கட்டுப்பாட்டின்மை' 'கட்டுப்பாடு' இரண்டிற்குமிடையில் பிரிக்கக் கூடியதாவுமிருந்து அவை இரண்டையும் சேகரமாக்கிக் கொண்டுமிருப்பதற்காக இதற்கு 'மற்தபதுல் ஜம்வு' 'சேகரிக்கும் மற்தபா' என்றும் சொல்லப்படும்.

பின்னர், அந்த அறியப்பட்ட 'கவனிப்பு'களும், ஷ{ஊன்'களும், அவைகளுக்கு அறிவிலும், உஜுதிலும் விபரமில்லாதிருப்பதை கவனித்து அவைகளுக்கு 'ஹுறூபுன் ஆலியாத்'து என்றும்,

இன்னும் அவைகள் அல்லாஹ்வின் பூர்வீகமான, விபரமான அறிவில், அவைகள் விபரமானதாக இருப்பதை கவனித்து அவைகளுக்கு 'nஃயானு தாபிதா' என்றும் சொல்லப்படும்.

<u>**இன்னும்** </u>தாத்தாகிய உஜூதுக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

<u>**3) மூன்றாவது மற்தபாவாகிறது:- 'தஅய்யுனுத்-தானி'யின் மற்தபாவாகயிருக்கும்.**</u>

அதாவது:- தாத்துடைய மற்தபாவில் இரண்டாவனதாகும். அதுவாகிறது:- தாத்து வஸ்துக்கள் விபரமாகிறது கொண்டு வெளியான புறத்தினாலாகும்.

<u>**அது அல்லாஹுதஆலா**</u> அவனுடைய தாத்தைக் கொண்டு <u>**அவனுடைய தாத்தையும் அவனுடைய சிபாத்துகளையும் இன்னும்**</u> வஹ்தத்தில் ஷ{ஊனு தாத்திய்யாகயிருந்து பொதுவான அறிவைக் கொண்டு அறியப்பட்ட <u>**சகல சிருஷ்டிகளையும்**</u> அவை இதற்கு முந்தின மற்தபாவில் பொதுப்படையாகவும், விபரமில்லாமலுமிருந்த நிலைமையிலேயே அவைகளை <u>**அவன் விபரமாகவும், ஒன்றை மற்றதை விட்டும் பிரிந்ததாகவும் அறிவதற்கு சொல்லப்படும்.**</u>

அறிவாகிய <u>**இந்த மற்தபாவாகிறது:-**</u> அதில் அறியப்பட்டவை(களான அவனின் தாத்து, அவனின் சிபாத்துகள், இன்னும் வஸ்துக்கள்) மூன்றுக்கும் சேர்த்து<u>**, இதற்கு 'வாஹிதிய்யத்' என்றும்,**</u>

அதாவது:- அதன் (தாத்தின்) வஹ்தத்தில் பொதிந்தவைகளுக்கு மள்ஹறுகள் என்று சொல்லப்பட்ட வாஹிதிய்யத்தான தாத்தின் மற்தபா என்று சொல்லப்படும்.

அந்த மள்ஹறுகளாகிறது:- அதன்(தாத்தின்) குறிப்புகளாகும். அது இந்த கவனிப்பைக் கொண்டு அதன் அஸ்மாக்கள், சிபத்துகளில் நின்றும் அல்லது அதனால் குணப்பாட்டை பெற்றதுகளில்

நின்றும், ஒரு வஸ்துவில் வெளியாகிறபோது அந்த வஸ்து அது தானாகவேயாகும். அது இது தானாகவேயாகும்.

**இன்னும்** தாத்திய்யான அஸ்மாக்களுக்கும், இன்னும் இலாஹிய்யத்தான சிபத்துகளுக்கும், கியானிய்யத்தான சிபத்துகளுக்கும், அசலான பாத்தியதையாக பாத்தியமாகிய **'ஹகீகத்துல் இன்ஸானிய்யா' என்றும் சொல்லப்படும்**. (அது உஜூபுக்கும், இம்கானக்குமிடையில் பர்ஸகாக இருக்கும்.)

இன்னும் 'மர்தபத்து காப கௌஸைனி' என்றும், 'மர்தபத்துல் அஸ்மா' என்றும், 'வாஹிதிய்யத்துல்-கத்றத்து' என்றும், 'முஸ்தவற்றஹ்மான்' என்றும், இன்னும் இவை போன்றவைகளைக் கொண்டும் பெயர் சொல்லப்படும்.

பின்னர் அறிந்து கொள்! ஹக்குஸுபுஹானஹுவதஆலா அவனின் திருவசனமாகிய 'வமா-கான-லிபஷரின்-அன்யு கல்லி மஹுல்லாஹு-இல்லா-வஹ்யன்-அவ்மின் வறாயி-ஹிஜாபின்-அவ் யுர்ஸில-றஸூலன்'- ஒரு மனிதருக்கும் வஹ்யாகவேயல்லாமல். அல்லது திரைக்குப் பின்னாலேயேயல்லாமல் அல்லது ஒரு தூதரை அனுப்பியேயல்லாமல் அவரோடு அல்லாஹ் பேசுகிறவனாக ஆகிறதில்லை' என்ற வாக்கியத்திற்கிணங்க, அவன் அவனுடைய 'இம்தினானிய்யான ரஹ்மத்'தைக் கொண்டு-நன்கொடையான கிருபையைக் கொண்டு வெளியாக வேண்டுமென்று, அவனிடத்தில் தேடிய அவனுடைய சகல அஸ்மாக்களுடைய சூறத்துகளையும் சேகரமாக்கிய ஒரு சிருஷ்டியை வெளியாக்க நாடியபோது, வாஹிதிய்யத்துடைய மர்தபாவாகிய தனது பூர்வீகமான, துவக்கமில்லா அறிவில் 'ஹகீகத்துல் இன்ஸானிய்யத்துல் காமிலா'வை நிர்மாணித்தான். அது 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா'வுக்கு கலீபாவாக இருக்கும்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து, வாக்களிக்கப்பட்ட மஹ்தீ ரஹிமஹுல்லாஹ்வாகிய 'காதமுல் விலாயத்துல் முகய்யதா'-கட்டுப்பாடான விலாயத்தின் முத்திராங்கமானவர் வரையிலும்,

இன்னும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களாகிய 'காதமுல் விலாயத்துல் முத்லகா'-பொதுவான விலாயத்தின் முத்திராங்கமானவர் வரையிலும், பின்னர், அவர்களில் நின்றும் ஒவ்வொருவரையும் வரிசைக்கிரமமாக படைத்தான்.

அவனுடைய நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாவினால் 'அல்லாஹு தஆலா ஆதமை அவனுடைய சூரத்தின் பேரில்-அதாவது:- அவனுடைய அஸ்மாக்களின் சூரத்தின் பேரில் படைத்தான்' என்று சொன்னான்.

ஆகவே இவை தாத்திற்கு குறிப்பில்லை என்ற புறத்தில், அவல்லது ஒரு குறிப்பு இருக்கிறது என்ற புறத்தில், அல்லது பல குறிப்புகளிருக்கிறது என்ற புறத்தில் மூன்று மர்தபாக்களாகும். அவை அடங்கலும் அவைகளின் வகைகளோடும் இன்னும் அவை பொதிந்திருக்கிற

ஷு{ஊன்கள், அஃயானு தாபிதாகளுடனும் பூர்வீகமானதாக இருக்கும் -அஸனுலிய்யாகும்- துவக்கமில்லாத்ததாகும்,

சிபாத்துகளும், மவுசூபும் ஒன்றே, அஸ்மாக்களும், முஸம்மாவும் ஒன்றேயாகும் வேறில்லை என்ற புறத்தில் அது ஒன்றாக இருக்கும்.

**இதை முந்தியும், பிந்தியும் ஆக்கினது புத்தியினாலாகும். காலத்தினாலில்லை.**

ஏன் அவன் காலமும், தவமுமில்லாத போதிருந்தது போலவே இப்போதுமிருக்கிறான்.

**இன்னும்** உஜூது தாத்திய்யிக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

4) நான்காவது மற்தபாவாகிறது மனிதர்களுக்குள்ளதும், மலக்குகளுக்குள்ளதும், ஜின்களுக்குள்ளதும், மற்றவைகளுக்குள்ளதுகளுமான தனித்த **அர்வாஹுகளுடைய ஆலமெனும் மற்தபாவாக இருக்கும்.**

அதுதான் 'ஜபரூத்துடைய ஆலம்' என்றும், 'கியாலுல் முதலக்குடைய ஆலம்' என்றும் சொல்லப்படுவதாகும்.

**அதுவாகிறது:-** அஹ்லுல் இஷாஹாக்களிடத்தில்-ஜத்புடைய வழிக்காhரர்களிடத்தில், வஹ்தத்தில், கத்றத்து-ஒருமையில் பன்மை மோதினதற்காக ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா 'உஜூபிய்யத்தான மற்தபா'க்களில் நின்றும், 'இம்கானிய்யத்தான மற்தபா'க்களில் பின்வரும் விதமாக இறங்கிய தாத்திய்யான இறக்கங்களில் நின்றும், முதலாவது இறக்கத்திற்கு சொல்லப்படும்.

அதுவாகிறது:- ஹக்குஸுபுஹானஹுவதஆலா அவனிடத்தில் அவைகளின் தேட்டங்களைக் கொண்டு வெளியில் வெளியாக வேண்டுமென்று தேடிய அஸ்மாக்களுடைய கஷ்டத்தைப் போக்க மூச்சுவிட நாடினபோது,

اَلَمْ تَرَاِلٰى رَبِّكَ كَيْفَ مَدَّ الظِّلَّ

'உம்முடைய போஷகனளவில் அவன் எப்படி நிழலை நீட்டினான் ன்று பார்க்கவில்லையா?' என்று அவன் சொன்னதுபோல்.

'உஜூது' 'இல்மு' 'நூறு' ஷுஹூது' என்று வர்ணிக்கப்பட்ட 'ரஹ்மானிய்யத்'தின் சமூகத்தில் நின்றும் தன்னுடைய தாத்திய்hன 'நூறு'லிருந்து ஒரு 'நூறு' 'அஃயானு தாபிதாக்களின் முகங்களில் ஒளிhந்தது விழுந்தது.

அதனால் அந்த 'அஃயானு தாபிதா'க்கள் தன் தாத்தின் புறத்தினால் 'மஃதூமத்தாக-இல்லாதவைகளாக' இருக்கிற நிலைமையில் அறிவில் 'மவுஜூதத்தாக-உண்டானதாக' ஆகி விட்டது.

அந்த (ஒளிர்ந்து வந்த) நூறானது அதற்குத்தான் 'உஜூதுல் ஆம்மு' என்றும், 'உஜூதுல் இளாபி' என்றும், 'நபஸூற் றஹ்மான்' என்றும் சூபிய்யாக்களின் பரிபாஷையில் சொல்லப்படும்.

அது வெளிப்பாடு, குறிப்பு, எண்ணிக்கை ஆகுதலைப் போல் கவனிப்புகள் சம்பந்தங்களைக் கொண்டேயல்லாமல் (எல்லா வகையிலும்) அஃயான்களைவ pட்டும், இன்னும் மற்ஹறுகளை விட்டும் தனித்த, பாத்தினான, ஙக்கான, கலப்பற்ற உஜூதுக்கு வேறானதாக இல்லை.

பின்னர், அந்த நூறில் நின்றும் ஒளிர்க்கும்படியான தனமு 'பைளு முகத்தஸை'க் கொண்டு ஒரு நூறை உண்டாக்கினான். அதற்கு 'அக்லு' என்று பெயர் வைத்தான். அதுதான் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நூறாக இருக்கும்.

பின்பு, 'நூறுல் முஹம்மதிய்யா' வான அந்த நூறில் நின்றும் அற்வாஹுகளின் வகைகள் அனைத்தையும், வரிசைக்கிரமமாக ஒன்றன்பின் ஒன்றாக அதன் பதவி, ஹக்குஸூபுஹானஹு வதஆலாவிடத்தில் முடுகுதலாகி இருக்கிற விதப்படி படைத்தான்.

இன்னும், அஹ்லுல் இபாறத்துகளின்-ஸூலூக்குடைய பாதையையுடையவர்களின் பரிபாஷையில், நூலாசிரியர் தங்களின் வார்த்தையைக் கொண்டு சயிக்கினை செய்ததாகும். அது:-

**<u>கௌனிய்யத்தான</u>** அதாவது:-'குன்'-உண்டாகு' என்ற எல்லைக் கோட்டைக்குள் புகுந்த தனித்த அதாவது:- 'அதமு காரிஜி'யில் நின்றும் 'உஜூது காரிஜி' அளவில் வெளியில் இன்மையில் நின்றும் வெளியில் உண்மையில் உண்டானதாக ஆனபுறத்தில், **மாத்தாவை விட்டும் ஒழிந்த-மூலப்பொருளை விட்டும் நீங்கிய <u>பஸீத்தான-பரந்த,</u>** அதாவது:- ஆதாரப் பொருள் பலதினால் சேர்க்கப்படாத எனினும் அவை தனித்தனியான ஒரு ஆதாரப் பொருளாகயிருந்து **<u>அவை தத்தம் நபுஸுகளுக்கும், இன்னும்</u>** பரந்ததாகவும், தனித்ததாகவும் படைக்கப்பட்டதில் **<u>தம்மைப் போன்றவைகளுக்கும் வெளியாகிய</u>** அவைகள் இந்த மற்தபாவுக்கு முன்னுள்ளதில் அவைகளுக்கு மாற்றமாக, ஏன் அஃயானு தாபிதாவாகிறது:- தன்னையும் அறியாது. அதில் ஒன்று மற்றொன்றினால் அறியவும்படாது. அவைகள் அவைகளை அறிந்த, மறைவானவைகளை எல்லாம் அறியும்படியான அல்லாஹுதஆலாவுக்கே அல்லாது வெளியாகாது. **<u>வஸ்துக்களுக்குச் சொல்லப்படும்.</u>**

இன்னும் உஜூது தாத்திய்யிக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

**<u>5). ஐந்தாவது மற்தபாவாகிறது:- ஆலமுல் மிதாலுடைய மற்தபாவாகும்.</u>**

அது அஹ்லுல் இஷாறாக்களின் பரிபாஷையில், ஹக்கு ஸூபுஹானஹு வதஆலா உஜூபிய்யான தமற்தபாக்களில் நின்றும் இம்கானிய்யத்தான மற்தபாக்களளவில் முதலாவதாக 'நபுஸூ குல்லிய்யா' என்ற உடையிலும். பின்னால் மற்ற நபுஸுகளுடைய உடையிலும் வரிசைக் கிரமமாக இறங்கிய தாத்திய்யான இறக்கங்களில் நின்றும் இரண்டாவது இறக்கத்திற்குச் சொல்லப்படும்.

அஹ்லுல் இபாரத்துகளுடைய பரிபாஷையில் அது **கௌனிய்யத்தானதும்,** அதாவது:- 'குன்-உண்டாகு' என்ற எல்லைப் கோட்டைக்குள் புகுந்ததும், பல துண்டுகளால் சேர்க்கப்பட்டதும், இந்த சேர்ப்பினால் **பாகமாகிறதையும்,** அதாவது:- சம்பந்தத்தால் பங்காகிறதையும், **இன்னும்** சம்பந்தத்தினாலல்லாமல் **துண்டாகிறதையும், இன்னும் உடைவதையும்,** அதாவது:- துண்டாவதற்காக பிளப்பதையும், **இன்னும் பொருந்திப் போவதையும் ஏந்துக் கொள்ளாததுமான மிருதுவான வஸ்துக்களுக்குச் சொல்லப்படும்.**

இன்னும் அதற்கு 'ஆலமுல் கியாலுல் முகையது-கட்டுப்பாடான கற்பனா உலகம்' என்றும் சொல்லப்படும்.

ஆகவே ஸாலிகானவன்-யோக நடை நடப்பவன் தன்னுடைய யாத்திரையில் தன்னுடைய 'கியாலுல் முகையதை'க் கடந்து, 'கியாலுல் முத்லக்கு'க்கு-கட்டுப்பாடில்லாத கற்பனா உலகிற்கு'(-ஆலமுல் அற்வாஹுக்கு)ப் போகி சேர்வானேயானால் அவன் காணுவது அனைத்திலும் நேரானவனாக ஆவான். கருமங்களை அது இருக்கிறபடியே பெற்றுக் கொள்வான்.

'ஏன் அது 'ளௌஹுல் மஹ்பூளில்' இருக்கிற 'அகல்லிய்யத்தான' சூரத்துகளுக்கு நேர்பாடாக இருப்பதினால்.

அ(ந்த லௌஹுல் மஹ்பூளாகிற)து அல்லாஹ தஆலாவின் இல்முக்கு மள்ஹராக-வெளியாகுந்தானமாக இருக்கும்.

இங்கிருந்துதான் மனிதனுக்கு அவனுடைய 'ஐனுதாபிதா' அளவிலும் அதன் நிலைமைகளளவிலும் காட்சியாக உதயமாகி பார்ப்பது உண்டாகும். ஏன் அவன் நிழலிலிருந்து ஹகீகத்தின் ஒளிகளளவில் திரும்பிப் போகிறானே. ம்ஃனவிய்யான திரும்புதலினால் அது அளவில் உதயமாகிப் பார்ப்பதைப் போல்.

**அறிந்து கொள்! ஆலமுல் மிதாலியாகிறது:- மாதிரி உலகமாகிறது:- ஜிஸ்மானிய்யான ஆலத்திலுள்ள-ஸ்தூல உலகத்திலுள்ள சூறத்துகளின் பேரில் பொதிந்ததாக இருக்கும்.**

**அது** வஹ்தத்தை போல் மொத்தமானதும், இன்னும் வாஹிதிய்யத்தைப் போல் விபரமானதுவுமான **இல்முடைய ஹளரத்திலுள்ளதற்கு, சூறத்தான முதலாவது மிதாலாகும்-மாதிரியாகும்.**

**இதனால் தான் அதற்கு ஆலமுல் மிதாலி-மாதிரி உலகம் என்று பெயர் சொல்லப்பட்டது.**

இன்னும் 'கிதாபுல் முபீன்' என்றும் சொல்லப்பட்டது. இல்முடைய சமூகத்திலுள்ளதற்கு 'உம்முல் கிதாபு' என்று சொல்லப்பட்டதைப் போல்.

**ஆகையினால் பொருள்களில் நின்றும் ஒரு பொருளானாலும் ரூஹுகளில் நின்றும் ஒரு ரூஹுவானாலும் சரி சடங்களில் நின்றும் ஒரு சடமானாலும் சரி** அதில் பொதிந்த

**அதனுடைய கமாலாத்துகளுக்கு-தத்துவங்களுக்கு** அவை புகழப்பட்டதானாலும் சரியே, அல்லது இகழப்பட்டதானாலும் சரியே, நற்குணங்கள் அழகான சூரத்திலும், கெட்ட குணங்கள், கெட்ட சூறத்திலும் வெளியாவதைப் போல, அவைகளுக்கு **நேர்மையான ஒரு மிதாலிய்யான சூரத்து அதற்கு இருந்தேயல்லாதில்லை.**

**ஆகவே அறுஷும், குற்ஸிய்யும், ஏழு வானங்களும், நான்கு பூதங்களும், அதிலுள்ளவைகளும் அவைகளின் பேரில் 'ஆலமுல் மிதாலானது' பொதிந்துக் கொள்ளும்.**

**இன்னும்** உஜூது தாத்திய்யிக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

6) ஆறாவது மற்தபாவாகிறது:- ஆலமுல் அஜ்ஸாமுடைய-ஸ்தூல உலகுடைய மற்தபாவாக இருக்கும். இதற்கு 'ஆலமுஷ் ஷஹாதத்து' என்றும், 'ஆலமுல்-முல்கு' என்றும் சொல்லப்படும்.

**அது** அஹ்லுல் இஷாராக்காரர்களுடைய பரிபாஷையில், ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா உஜூபிய்யத்தான மற்தபாக்களில் நின்றும் 'கெளனிய்யத்'தான மற்தபாக்களளவில், முதலாவதாக 'துற்றத்துல் பைளா'வின் உடையிலும், அதற்குப் பின்னால் தகப்பன்மார்களின் ஸ்தானத்திலிருக்கிற ஏழு வானங்களின் உடையிலும், தாய்மார்களின் ஸ்தானத்திலிருக்கிற நான்கு பூதங்களின் உடையிலும், இன்னும் நிரச் பொருள், தாவரப் பொருள், ஜீவப்பொருள்களாகிய மூன்று பிள்ளைகளின் உடையிலும் கிரமப்படி இறங்கிய தாத்திய்யான இறக்கங்களில் நின்றும் மூன்றாவது இறக்கத்திற்குச் சொல்லப்படும்.

அது அஹ்லுல் இபாறத்துடையவர்களின் பரிபாஷையில் **திண்ணமான சேர்க்கப்பட்ட** அதாவது:- அதில் சிலது சடமாகிய பாகங்களாலும் இன்னும் அதில் சிலது அர்வாஹுகளான மிருதுவான பாகத்தினாலும் சேர்க்கப்பட்டதும் அந்த சேர்மானத்தின் காரணத்தினால் **பாகமாக்கலையும், துண்டாக்கலையும் ஒப்புக் கொள்ளும்படியான கெளனிய்யான வஸ்துக்களுக்கு சொல்லப்படும்;**. முந்திய மற்தபாவில் நடந்ததற்கு மாற்றமாக.

பின்னர் அறிந்துகொள்! இந்த மற்தபாவாகிறது இதுதான் தாத்துக்கு, இறக்கங்களில் கடைசியானதாகும்.

இதற்குப் பின்னால் தாத்துக்கு அதனளவில் பொதுவாக இறங்கக்கூடிய ஒரு அலம் இல்லை.

எனினும் அதற்கு மீளுவதுதான் உண்டு. அதற்குத்தான் (சூபிய்யாக்களிடத்தில்) உரூஜு-ஏற்றம் என்று சொல்லப்படும்.

நூலாசிரியர் அவர்கள் அதை விபரிப்பதில் தொடுத்துச் சொல்கிறார்கள்.

**இன்னும்** உஜூது தாத்திய்யிக்கு ஏழு மற்தபாக்களில் நின்றும்,

**7) ஏழாவது மற்தபாவாகிறது:-**

இலாஹிய்யத்தான ஹகாயிக்குகளையும், அது அஸ்மாக்களாக இருக்கும். இன்னும் கௌனிய்யத்தான ஹகாயிகுகளையும், அது அஃயானு தாபிதாவாக இருக்கும். விபரத்தில் முந்திய **கூறப்பட்ட ஜிஸ்மானிய்யத்தான மற்தபாக்கள் அடங்கலையும்** அது ஆலமுஷ் ஷஹாதத்தாகும்-சாக்கிர உலகமாகும். **இன்னும் நூறானிய்யத்தானதையும்** அது ஆலமுல் மிதாலையும். ஆலமுல் அர்வாஹையும் பொதிந்து கொண்ட ஆலமுல் கைபு- மறைவான உலகமாகும். **இன்னும் வஹ்தத்தையும்** அது சிபாத்துடைய மற்தபாவாகும்.

இன்னும் வாஹிதிய்யத்தையும், அது அஸ்மாக்களுடைய மற்தபாவாகும். இன்ஸான் காமிலாக-சம்பூரண மனிதனாக இருந்தால் தற்சமயத்திலும், இன்ஸான் நாகிஸாக-சம்பூரணமில்லாத மனிதனாக இருந்தால் அமைப்பிலும் **சேகரித்துக் கொண்ட** இன்ஸானிய்யத்தான **மற்தபாவாகும்.**

**இதுதான்** தாத்துக்கு **கடைசியான தஜல்லியும், இன்னும்** இது மள்ஹறுகளில் வெளியாகிற புறத்தில் **கடைசியான உடையுமாகும். இதுதான் இன்ஸானாகும்**. **இவைகள்** தாத்துக்குப் பொதுப்படையான வித்தில் **ஏழு மற்தபாக்களாகும்.**

அதில் முந்தினதாகிறது:- அஹதிய்யத்தான தாத்தின் ஒளிகள் பிரகாசித்துக் கொண்டிருப்பதினால் 'மற்தபத்துல்-லாளுஹூறு'-வெளியாகத மற்தபாவாகும்;.

**அதில் நின்றும் எஞ்சிய ஆறும்** தாத்து தன்னால் தனக்கு வெளியான புறத்தினாலும், இன்னும் அது அதனுடைய குறிப்புகளினால் வெளியான புறத்தினாலும், இன்னும் அது அதனால் அறியப்பட்டவைகளில் வெளியான புறத்தினாலும் பூரணமாக வெளியான மற்தபாக்களாகும்.

**இன்னும் அதில் நின்றும் கடைசியான இந்த மற்தபாவாகிறது, அதாவது:- இன்ஸானாகிறவன்.**

அறிந்து கொள்! அல்லாஹுதஆலா நமக்கும் உனக்கும் நல்லுதவி செய்வானாக! ஹக்கு ஜல்லஷஹ்னஹு வதஆலாவாகிறவன் அவனுடைய பூர்வீகமான தாத்தும், அவனுடைய அடைய வளைந்த சிபத்துகளும், ஹகாயிக்குகளை-சிருஷ்டிகளின் அஃயானு தாபிதாக்களை வெளிப்படுத்துவது கொண்டும், அவைகளை வசப்படுத்துவது கொண்டும், கருமங்களை செல்லுபடியாக்கி அவைகளை பரிபாலிப்பது கொண்டும், உஜூதுடைய மற்தபாக்களை இறக்குவது கொண்டும், ஷ{ஹூதுடைய பதவிகளை ஏற்றுவது கொண்டும், தெய்வீகத் தன்மையையும் போஷகத்தன்மையின் இரகசியத்தையும் வெளியாகத் தேடினபோது,

அதற்கு இக்காரியங்கள் சிருஷ்டிகளை சிருஷ்டிப்பதைக் கொண்டேயல்லாது உண்டாகாது.

ஆகையினால் பூர்வீகமான அல்லாஹுதஅலாவின் பெருமைக்கும், கேவலமான சிருஷ்டியின் சிறுமைக்குமிடையில் நேர் சம்பந்தம் தூரப்பட்டிருந்ததினால், சிருஷ்டிகள் மலிகுல் ஹக்கான அல்லாஹுதஆலாவுடன் அண்டுவது சாத்தியமாகாததாக ஆனபோது, ஹக்குதஆலா தனக்கு அந்த காரியங்களில் பிரதிநிதியாக இருக்கக் கூடிய ஒரு கலீபாவை ஏற்டுத்தினான்.

அவருக்கு இரு முகங்களுண்டு. ஒரு முகம் பூர்வீகுத்தை நோக்கி அதைக் கொண்டு ஹக்குதஆலாவிடமிருந்து அருளை ஏற்பார். மற்றொரு முகம் சிருஷ்டியின் பக்கம், அதைக் கொண்டு அவைகளுக்கு அருளை ஈவார்.

இன்னுமந்த கலீபா கீழ் உலகத்திலும், மேல் உலகத்திலும் ஆட்சி செய்ய இடம் பெறுவதற்காக அவரை தன்னுடைய சூரத்தின் பேரில் ஆக்கினான். அவர் பேரில் தன்னுடைய இஸ்மாக்களையும், அவனுடைய சிபாத்துகளையும் பரிவட்டமாக போர்த்தினான்.

இன்னும் தனக்கும் சிருஷ்டிகளுக்குமிடையில் 'உன்ஸத்து-கலந்துறவாடல்' உண்டாக இடம்பாடாகிறதற்காக அவருக்கு 'இன்ஸான்' என்று பெயர் வைத்தான்.

அவரை உஜூதுக்கும், அதமுக்குமிடையில்-உள்ளமைக்கும், இல்லாமைக்குமிடையில் வாஸிதாவாக-மத்திபமாகவும், புதுமை, பூர்வீகத்தோடுக் கொழுக, றாபிதாவாக-இணைப்பாகவும் ஆக்கினான்.

இன்னும் அவர் மேலுலகமாகிய உயர்ந்த, தாழ்ந்த மலக்கூத்திலும், கீழ் உலகமாகிய தூல உலகிலும் ஆட்சி செய்ய இடம் பெறுவதற்காக வேண்டி தன்னுடைய 'ளாஹிறு' 'பாத்தினு' என்னும் இரண்டு திருநாமங்களின் விதியினால் அவருக்கு பாதினான ஹகீகத்து என்னும் ஆன்மாவையும், ளாஹிரான சூரத்து என்னும் ஒரு உடம்பையும் ஆக்கினான்.

அவருடைய பாதினான ஹகீகத்தென்றது:- நாயகம் ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாக்கில்,

مَاخَلَقَ اللهُ خَلْقًا اَعْظَمَ مِنَ الرُّوْحِ

'அல்லாஹு தஆலா ரூஹைவிடவும் வலுப்பமான ஒரு சிருஷ்டியை படைக்கவில்லை' என்று அருளிய அல்லாஹ்வின் வலுப்பமான பெரிய கலீபாவான ரூஹுல் அஃளமாக இருக்கும்.

அவருடைய ளாஹிரான சூரத்தென்றது:- அது அற்ஷிலிருந்து பஹ்ஷ{ வரையிலும் அவை இரண்டிற்குமிடையிலுள்ள விரிந்த பூதங்கள், சேர்க்கப்பட்ட பௌதீகங்களான உலகத்தின் சூரத்தாக இருக்கும்.

இதுதான் முஹக்கிகீன்கள்- தத்துவ ஞானிகள்,

اَلْعَالَمُ اِنْسَانٌ كَبِيْرٌ

'உலகம் பெரிய இன்ஸான்' என்று சொன்னதைக் கொண்டு இதனளவில் சயிக்கினை செய்யப்பட்ட பெரிய இன்ஸானாக இருக்கும்.

அவர்கள்,

اَلْاِنْسَانُ عَالَمٌ صَغِيْرٌ

'மனிதன் சின்ன உலகம்' என்று சொன்னதைக் கொண்டு அவர்கள் கருதியது மனித இனத்தையேயாகும். அவன் பூமியில் அல்லாஹுதஆலாவின் கலீபாவாகும்.

பெரிய இன்ஸானோ, வானத்திலும், பூமியிலும் அல்லாஹுதஆலாவின் கலீபாவாகும்.

அறிந்து கொள்! சின்ன இன்ஸானாகிறவன் தகப்பனுக்கு பிள்ளையைப் போல். பெரிய உலகத்தில் நின்றும் பிள்ளையாக வந்த ஒரு பிரதியாக இருக்கும். அவனுக்கு பாத்தினான ஒரு ஹகீகத்தும், ளாஹிரான ஒரு சூரத்தும் இருக்கிறது.

அவனுடைய பாதினான ஹகீகத்தென்பது:- ரூஹுல் அஃளமில் நின்றும் அதில் ஊதப்பட்ட வியட்டியான ஒரு ரூஹும், வியட்டியான அக்லும், வியட்டியான நபுஸும் தபீஅத்துமாகும்.

அவனின் ளாஹிரான சூரத்தென்பது:- ஆலமுல் கபீறில் நின்றும் வந்த ஒரு பிரதியும் பலனுமாகும். அதில் ஆலத்தினுடைய மிருதுவான, திண்ணமான பாகங்களில் நின்றும் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் ஏதோ கொஞ்சம் பங்கும் பாகமும் உண்டு.

ஆஹா! உலகத்தின் ஒரு சிறிய பாகத்தில் சர்வத்தையும் அமைத்துப் படைத்த ஆண்டவன் மிக வலுப்பமானவன்.

இன்னும் அறிந்து கொள்! மானிட வர்க்கம் ஒவ்வொருவரும் ஆதம், ஹவ்வா அலைஹிமிஸ்ஸலாம் அவர்களுடைய சூரத்தின் பலனும் பிரதியுமாகும்.

மனிதன் என்பதற்குப் பொருளான அந்தரங்கமாகிறது:- ரூஹுல் அஃளமில் நின்றும் நபுஸுல் குல்லிய்யாவில் நின்றும் உண்டான பலனாக இருக்கும்.

பெரிய இன்ஸானாகிறது:- ஹக்குல் முபீனான அல்லாஹுதஆலாவிற்கு மற்ஹறாக இருக்கும்.

சின்ன இன்ஸான் (ஆவி ஆக்கையின் உணர்வு எனும்) அவனுடைய குறிப்புகள் மடிவது கொண்டும், அவனுடைய கட்டுப்பாடுகளை அழிப்பது கொண்டும் திடனாக பெரிய இன்ஸானளவில் சேர்வான். அப்போது பெரிய இன்ஸானைத் தொட்டும் அவன் ஹிகாயத்து செய்தவனாக ஐக்கியத்துடைய நாவைக் கொண்டு, கேட்கிறவர்களில் சிலருக்கு புரியாத வாசகங்களைச் சொல்வது அவனுக்குச் சரியாகும். ஆகுமாகும்.

இதனளவில் தான் ஷெய்குல் ஆரிபீன் உமறு இபுனுல் பாரிள், கததஸல்லாஹு ரூஹஹு வனவ்வர ளரீஹஹு அவர்கள்,

وَاِنِّيْ وَاِنْ كُنْتُ ابْنَ اٰدَمَ صُوْرَةً فَلِيْ فِيْهِ مَعْنًى شَاهِدٌ بِاُبُوَّتِيْ

'நான் சூரத்தில் ஆதமுடைய மகனாக இருந்தபோதிலும் எனக்கு அவர்களில் நான் தகப்பன் என்று சாட்சியம் கூறும்படியான ஒரு அந்தரங்கம் உண்டு' என சயிக்கினை செய்தார்கள்.

இதை விளங்கிக் கொள்! இது பெரியதொரு அடிப்படையாகும். இதன்பேரில் ஹகாயிக்குகளின் மிகுந்த விளக்கங்கள் பனராக கிறம்பும். இதுதான் 'காஷp' ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 'நள்முத்-துறறு' எனும் நூலின் விரிவுரையில் கூறியதின் சாராம்சமாகும்.

**உயர்வானேயானால்** அதாவது:- அவனுடைய நபுஸு என்னும் பூமியிலிருந்து அவனுடைய புலன்களுக்கு மறைவான (மனம், புத்திகளான அந்தக் கரணம் எனும்) வானத்தளவிலும், அதில் நின்றும் அவனுடைய பரிசுத்த 'மலக்கூத்துடைய ஆலத்'தளவிலும் ஏறுவானேயானால்,

**இன்னும்** அவனுக்கு **அதில்** அதாவது:- அவன் தன்னுடைய ரூஹைக் கொண்டு, அதன் த்துவங்களுடன் ஏறுவதில், 'அஹதிய்யத்'தை; தவிர கூறப்பட்ட **மற்தபா**களிலுள்ளது **அடங்கலும், அவைகளின் விசாலிப்புடன்-** அவனில் அவை விசாலிப்பதுடன் **வெளியாகுமானால் அவனுக்கு அல் இன்ஸானுல் காமில்-சம்பூரண மனிதன்** எல்லாக் கருத்துக்களையும் பொதிந்தவன், தாத்திய்யத்தான அஸ்மாக்களுக்கும், இலாஹிய்யத்தான கமாலாத்துக்களுக்கும், பாத்திபமானவன் **என்று சொல்லப்படும்.**

அவனுக்கு சடப் பொருள்களிலுள்ள 'காஸியத்து'களை களைந்து விட்டு வேறு 'காஸியத்'தைத் தரிபடுத்தி 'மலக்கூத்து அத்னா'வில் -தாழ்ந்த மலக்கூத்தில் ஆட்சி செய்வதைக் கொடுக்கப்படும். இதுதான் 'கவாரிக்குல்-ஆதாத்'திற்கும், முஃஜிஸாத்திற்கும்- வழக்கத்திற்கு மாற்றமான செயல்களுக்கும், அற்புதங்களுக்கும் அடிப்படையாகும்.

அவரை பூமியிலும், வானத்திலும் கலீபாவாக ஆக்கி, அவரை கலீபாவாக ஆக்கின ஹக்குதஆலா அவர் பேரில் தன்னுடைய அஸ்மாக்களென்னும் உடுமானத்தில் நின்றும் போர்த்துவான்.

பிரதிநிதியை ஏற்படுத்துபவர்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு தாங்கள் அணிந்திருந்தில் நின்றும் அணிவிப்பது வழக்கமாக இருப்பதைப் போல.

ஆகவே இவருடைய ரூஹுக்கு இந்த ரப்பானிய்யான தத்துவம் வெளியாகுமானால், இன்னும் தன்னுடைய தாத்தை இலாஹிய்யத்தான அஸ்மாக்களென்னும் உடைகளை அணிந்ததாக பெற்றுக் கொண்டாரேயானால் அவனை கலீபாவாக ஆக்கிய ஹக்குதஆலாவின் கலீபா என்று தன்னை அறிந்து கொள்வான்.

எனவே ஹக்குதஆலாவைக் கொண்டு அவனுடைய முல்கிலும் மலக்கூத்திலும்-கீழ் உலகிலும், மேலுலகிலும் ஆட்சி செய்வான்.

எனினும் ஆட்சி ஏவலின் வீதப்படிக்கும், ஏவப்பட்டதின் வீதப்படிக்குமே தான் விளங்கிக் கொள்!

இன்னும் அறிந்து கொள்! கவாரிக்குல் ஆதாத்து, முஃஜிஸாத்துகளாகிய இந்த அட்சி அதிகாரத்தையுடையவர்கள் ஆட்சி செய்வதில் பல பதவிகளிலுமிருக்கிறார்கள்.

எனவே அவர்களில் பூதங்களின் மலக்கூத்தில் ஆட்சியை கொடுக்கப்பட்டவர்களுமுண்டு. நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நெருப்புடைய மலக்கூத்தில் அதை அணைத்துப்போடுவது கொண்டு அட்சி செய்ததைப் போலும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தண்ணீரிலும் மண்ணிலும் அதை பிளந்தும், தண்ணீரை ஒட்டியும் ஆட்சி செய்ததைப் போலும், இன்னும் சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காற்றின் மலக்கூத்தில் அதை வசப்படுத்தி ஆட்சி செய்ததைப் போலும்.

இன்னும் அவர்களில் வானத்தின் மலக்கூத்திலுங் கூட ஆட்சியைக் கொடுக்கப்பட்டவர்களுமுண்டு. நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சந்திரனுடைய மலக்கூத்தில் சந்திரனை பிளந்து ஆட்சி செய்ததைப் போல.

**அறிந்து கொள்! அவனில் உலூஹிய்யத்தின் -தெய்வீகத் தன்மையின் மற்தபா, அதன் விசாலிப்புடன் வெளியாவது எப்படி என்றால் அவனுடைய தாத்தும் சிபாத்தும் அல்லாஹ் உடைய தாத்தும் சிபாத்தும் போல் வியாபிப்பதாகும்.**

**அதாவது:- அவன் தன்னுடைய தாத்தை அளவிலடங்காத ஓர் பேரொளியாக காண்பதும், கண், காது கொண்டு மட்டுமல்லாமல் தன் திரேகமடங்கலைக் கொண்டும் பார்ப்பதும், கேட்பதுமாகும்.**

இங்குதான் சொன்னவர் சொன்னார்:-

اِذَا مَاتَجَلَّتْ لِيْ فَكُلِّيْ نَوَاظِرٌ ، وَاِنْ هِيَ نَاجَتْنِيْ فَكُلِّيْ سَوَامِعُ

'அது எனக்கு வெளியாகுமானால் என் திரேகமடங்கலும் பார்க்கக் கூடியதாக இருக்கும். அது என்னோடு பேசுமானால் என் திரேகமடங்கலும் கேட்கக் கூடியதாக இருக்கும்'.

**இன்னும் தூரத்திலிருந்து சப்தங்களை கேட்பதும், தூரத்திலிருந்து ரூபங்களை பார்ப்பதுமாம். இதேபோல் அவனுடைய மற்ற சிபத்துகளும் வியாபித்ததாக ஆகும்.**

**இன்னும் மலக்குகளுடைய மற்தபா அதன் விசாலிப்புடன் அவனில் வெளியாவதாகிறது:- (அவனில்) மலக்குகளுடைய காஸியத்தும்-தத்துவமும், அவர்களின் வியாபகத்தன்மையும் அவனில் உண்டாவதாகும்.**

**அதாவது:- அவர்கள் ஒரு வீட்டுக்குள் அதன் வாசல் வழியாக பிரவேசிப்பதைப்போல் அதன் சுவர்களின் பக்கமாகவும் பிரவேசிப்பார்கள். அவ்விரண்டிற்குமிடையில் யாதொரு வித்தியாசமுமிராது. இன்னும் அவர்கள் உலகின் திறந்த வெளியில் வசிப்பதைப் போல் அழுத்தமான கல்லினுள்ளும் வசிப்பார்கள். இன்னும் அவர்கள் எரிகின்ற நெருப்பிலும் நுழைவார்கள். அது அவர்களை அறவே சுடமாட்டாது.**

**அவனில் நெருப்புடைய மற்தபா அதன் விசாலிப்புடன் வெளியாவதாகிறது:-**

**அவனில் நெருப்பின் குணமும், அதன் வியாபகத் தன்மையும் அவனில் உண்டாவதாகும்.**

**அதாவது:- அவன் இமைப் பொழுதில் மஷ்ரிக்கிலிருந்து மக்ரிபுக்கு-உதயகிரியில் இருந்து அஸ்தகிரிக்குச் செல்வதாகும்.**

**ஏனெனில் நெருப்பின் ஹகீகத்து-அந்தரங்கம் என்பது அதன் உஷ்ணமாகும். கண்ணுக்குத் தென்படுகிற பிரகாசம் அதன் ரூபமாகும். சூரியன் மஷ்ரிக்கில்-உதயகிரியில் உதயமானால் அதன் உஷ்ணமான பிரகாசம் சந்தேகமில்லாமல் இமைப் பொழுதில் மஷ்ரிக்கிலிருந்து மக்ரிபளவில்- உதயகரியிலிருந்து அஸ்தகிரி அளவில் சென்று விடும்.**

**அவனில் காற்றின் மற்தபா அதன் விசாலிப்புடன் வெளியாவதாகிறது:- அவனில் காற்றின் குணமும் அதன் வியாபகத்தன்மையும் உண்டாவதாகும்.**

**அதாவது:- மற்றவர்கள் ஒரு மாதத்தில் அல்லது இரண்டு மாதத்தில் நடந்து தீர்க்க முடியாத தொலைப்பட்ட தூரத்தை அவன் ஒரு மணி நேரத்தில் அல்லது அதினும் குறைந்த நேரத்தில் கடந்து விடுவான்.**

**இதைப்போல் அவனில் வெளியாகிற ஒவ்வொரு மற்தபாவின் குணமும் அவனில் உண்டாகும்.**

இன்னும் இதனாலேதான் இந்த ஏற்றமும் வியாபகமும் நமது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் அவர்களிலுள்ள சம்பூரண வகையின்படி ஆனது.

அவர்களல்லாத நபிமார்கள், விசஷெமான ஒலிமார்களில் நின்றும் ஒவ்வொருவருடைய ஹக்கிலும் ஏற்றமும் வியாபகமும், அவர்களில் ஒவ்வொருவரிலும் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களல்லாதவர்களில் உள்ள பூரண வகையாகவேயல்லாது ஆகவில்லை.

எனவே நிச்சயமாக அது நபி நாயகம் அவர்களில் சமபூரணமான விதத்திலேயே ஆனது. முன் சொல்லி வந்தது போல்.

இன்னும் அறிந்துக் கொள்! அல்லாஹ் நமக்கும், உனக்கும் நல்லுதவி செய்வானாக! ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து நம்முடைய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரையிலுமுள்ள ஒவ்வொரு நபிமார்களும், ரூஹுல் நுபுவ்வத்தின் மள்ஹறுகளில் நின்றும் ஒரு மள்ஹறாகவே இருக்கும்.

அந்த நபிமார்கள் போகிவிடுவதுக் கொண்டு, அந்த நுபுவ்வத்தின் மள்ஹறும் போகிவிடும். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நுபுவ்வத்தைத் தவிர, அது தாத்தியானதும், நேமமானதும், முடிந்து போகாத்ததுமாகும்.

ஏனென்றால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஹகீகத்தாகிறது:- அது ரூஹுல் அஃளமின் ஹகீகத்தாகும். அவர்களுடைய தூரத்தாகிறது, அதில் ஹகீகத்து தாத்திய்யா, தனது சகல அஸ்மா சிபாத்துகளையும் கொண்டு வெளியானதுவாகும்.

அவர்களல்லாத மற்ற நபிமார்களோ, அவர்களில் ஹகீகத்து (தாத்திய்யா) தனது சில அஸ்மா சிபாத்துகளைக் கொண்டேயல்லாது வெளியாகவில்லை. அது அவர்களுக்கு ஒவ்வொரு மள்ஹறிலும் தனது சிபத்துகளில் நின்றும் ஒரு சிபத்தைக் கொண்டும் அஸ்மாக்களில் நின்றும் ஒரு இஸ்மைக் கொண்டும் வெளியாகிக் கொண்டே வந்து முஹம்மதிய்யாவான மள்ஹறில், தனது தாத்தைக் கொண்டும், தனது சகல சிபத்துகளையும் கொண்டும் சம்கு10ரணமான விதத்தின் பேரில் ஆகிற வரையிலும் நீங்காமலிருந்தது.

**இதனாலேயே நாயகம்** ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் **அவர்கள்** அக்மலுல் காமலீனாக- பூரணமானவர்களிலும் சம்பூரணமானவர்களாக ஆனார்கள். ஏன் அவர்கள் அதற்கு மேலே போகக் கூடிய ஒரு மள்ஹறுமில்லாத இந்த 'அஹதிய்யுல்-ஜம்யிய்யான-சகலத்தையும் சேர்த்துக் கொண்ட ஒன்றான' மள்ஹறைக் கொண்டு பாக்கியம் பெற்றிருக்கிறார்களே.

இன்னும் அவர்கள் 'பாத்திஹுல் உஜூதாக'-உலகுக்கு ஆரம்பமானவர்களாக இருப்பதைப் போல் **காத்தமுன்னபிய்யீனா**கவும்-**நபிமார்களிலெல்லாம் கடைசியானவர்களாக**வும் ஆனார்கள்.

**இன்னும்** மேலே சொல்லி வந்ததிலிருந்து இந்த மற்தபாக்களெல்லாம் ஒரே உஜூதின் மற்தபாக்களேதான். வேறல்ல. ஆனால் அவைகளில் சிலது உலூஹிய்யத்தின்-தெய்வீகத் தன்மையின் மற்தபாக்கள்-வஹ்தத்து, வாஹிதிய்யத்தைப் போல், இன்னும் அவைகளில் சிலது உபூதிய்யத்தின்-அடிமைத்தனத்தின் மற்தபாக்கள்-ஆலமுல் அற்வாஹும் அதற்கு கீழுள்ளவைகளையும் போல், என்று வெயியாயிற்று.

கருமம் இப்படியானால் அவைகள் எப்படி இருந்தாலும், பொதுவாக அவைகள் உஜூதின் மற்தபாக்களாக இருக்கிற புறத்தில் அவைகளில் சிலதின், பெயரை சிலதின் பேரில் நடத்தாட்டலாமா? ன்று வினாவை கேட்கிறவர் கேட்கக் கூடுமென்பதை உணர்;ந்த நூலாசிரியர் அவர்கள் தங்களின் வார்த்தையைக் கொண்டு அதற்கு விடை பகர்ந்தார்கள்:-

**உலூஹிய்யத்தின் மற்தபாக்களுடைய பெயர்களாகிறது:- அவைகளை ஆக்கப்பட்ட சிருஷ்டிக்கப்பட்டதின் மற்தபாக்களின் பேரில்;** அவைகளும் ஒரே உஜூதின் மற்தபாக்களாகவே இருந்த போதிலும் **நடத்தாட்டுவது கூடாது.**

**நூலாசிரியர் அதைக் கொண்டு (உல}ஹிய்யத்துடைய மற்தபாவின் அஸ்மாக்கள் என்றதைக் கொண்டு) அல்லாஹ், ரஹ்மான், காலிகு என்ற பெயர்களைப் போல் அல்லாஹுக்கே சொந்தமான பெயர்களையே நாடிக் கொண்டார்கள்.**

**பொதுவாக அவனுடைய பெயர்களை அல்ல. ஏனெனில் அவனுடைய பெயர்களில் அவனுக்கே சொந்தமாக இல்லாதவைகளுமுண்டு.**

**எனினும் அவனுடைய வேதமான குர்ஆனில் ஒரு சிருஷ்டியை கண்ணியப்படுத்துவதற்காகவும், மேன்மைபடுத்துவதற்காகவும் அந்த நாமங்களை அதன் பேரிலும் நடத்தாட்டுதல் வந்துள்ளது.**

**நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேல் வந்த றஊபு,றஹீம்,நூறு,ஹாதீ,ஹக்குல் முபீனு; இன்னும் இவையல்லாதவைகளையும் போலும், இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரில் 'சாதிகல் வஃதி' என்றதையும், இஸ்ஹாக்கு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரில் 'அலீம்' என்றதையும், இபுறாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரில் 'ஹலீம்' என்றதையும், நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரில் 'ஷகூறு' என்றதையும், இன்னும் நபிமார்கள் சலவாத்துல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் அவர்கள் பேரில் நடத்தாட்டப்பட்ட இவையல்லாத அவனுடைய அஸ்மாக்களையும் போல்.**

**அப்படியே,** மாற்றமும் அதாவது:- **ஆக்கப்பட்ட சிருஷ்டிக்கப்பட்டதின் மற்தபாக்களுடைய பெயர்களை உலூஹிய்யத்துடைய மற்தபாவின் பேரில் நடத்துவதும் கூடாது.**

ஏன் இவைகளின் அஸ்மாக்களுடைய முஸம்மாக்கள் பூர்வீகமாகவும், அவைகளின் முஸம்மா புதிதாகவுமிருப்பதற்காக,

**இன்னும்** ஹக்குஸுபுஹானஹு வதஆலா அவனுடைய தாத்து, சிபத்து, அஸ்மாக்களின் புறத்தினால் நிறைந்த இலட்சணங்களைக் கொண்டு இலட்சணம் பூண்டவனாகவும், உஜூபிய்யத்தான மற்தபாக்களிலுள்ளதைக் கொண்டு தனித்தவனாகவுமிருக்க, அவன் அந்த மற்தபாக்களில் நின்றும், இம்கானிய்யத்தான மற்தபாக்களளவில்-சிருஷ்டிகளின் மற்தபாக்களளவில், அவை குறைவுக்கும், புதுமைக்கும், அழிவுக்கும் இடமாக இருக்க, அதில் இறங்குவது எப்படி? சரியாகுமென்ற வினாவை கேட்கிறவர் கேட்கக் கூடுமென்பதை நூலாசிரியர் அவர்கள் உணர்ந்தபோது, தங்களுடைய வார்த்தையைக் கொண்டு அதற்கு விடையளிக்கிறார்கள்:-

**நிச்சயமாக அந்த** தாத்திய்யான **உஜூதுக்கு** கவனிப்பினாலான **இரண்டு கமால்-வல்லமைகள் உண்டு.**

அவை இரண்டில் நின்றும் ஒவ்வொன்றும் அது தன்னிலேயே பூரணமான வல்லமையாகும். அதற்கு எல்லையும் முடிவுமில்லை.

**அவை இரண்டில் ஒன்று:- தாத்திய்யான கமாலாகும்.** அது உஜூதுக்கு அது தானாகவேயாகும்.

**அவை இரண்டில் இரண்டாவதாகிறது:- அஸ்மாயிய்யான கமாலாகயிருக்கும்.** அது உஜூதுக்கு அதன் குறிப்பாகும்.

**தாத்திய்யான கமாலாகிறது:- அல்லாஹு தஆலா அவன் தன் நபுஸின் பேரில்** அவனல்லாத **சிருஷ்டியின் பேரிலல்ல. ஏன் அங்கு சிருஷ்டியில்லையே. தன் நபுஸைக் கொண்டு அவனல்லாத்ததைக் கொண்டல்ல.**

அதாவது:- அவனுடைய தாத்தைக் காண மேலதிகமானதொன்றைக் கொண்டல்ல. உவமையில் இல்மைப் போல்.

**நாம் நம் நபுஸையும், நம்மல்லாதவற்றையும், நம்மல்லாதவற்றைக் கொண்டு உவமையில் சூரியனுடைய ஒளியைக் கொண்டு பார்ப்பதைப் போல்.**

**தன் நபுஸில் அஸ்மாயிய்யான கமாலின் த:ஃரீபில் (பின்) வருவதைப் போல் புறம்பான குறிப்புகளான அவன் அல்லாத்ததில் அல்ல.**

**தன் நப்ஸுக்காக அவனல்லாததற்காக இல்லை. நாம் நம் நபுஸையும், நம்மல்லாத்ததையும், நம்மல்லாத காரணங்களுக்காக, நோக்கங்களுக்காக பார்ப்பதை போல்.**

வெளியானவனில் அவன் **வேறு என்று கவனிக்காமலும்,** எதன்பேரில், எதைக் கொண்டு, எதில், எதற்காக வெளியானானோ அவைகளில் அவை **வேறாக இருப்பதையும் கவனிக்காமல் வெளியாவதற்கு**-தோன்றுவதற்கு **சொல்லப்படும்.**

தேவையில்லாதிருப்பதை அறிவிக்கும்படியான எவ்வித கட்டுப்பாட்டையும் விட்டும் நீங்கிய கினல் முத்லக்காகிறது- பொதுவான நிறைவாகிறது, உஜூது தானாகவேயிருக்கிற இந்த கமாலு தாத்திய்யிக்கு-தாத்திய்யான இந்த தத்துவத்திற்கு அவசியமானதாகும். ஏன் அல்லாஹு தஆலா இந்த ளுஹூரில்-வெளிப்பாட்டில் ஆலமடங்கலையும் விட்டும் தேவையற்றவனாகும்.

கினல் முத்லக்கு என்பதற்கு பொருளாகிறது:- அல்லாஹுதஆலா, தன் நபுஸில் தாத்தில், வஹ்தத்தில் பாத்தினான-உள்ளானதாக இருந்த சகல ஷ{ஊன்களையும், இன்னும் வாஹிதிய்யத்தில் அவனுக்கு ளாஹிறானதாக-வெளியானதாக இருந்த சனல இலாஹிய்யத்தான அவை அஸ்மாக்களுடைய சூரத்துகளும், செய்யக் கூடிய சிபத்துகளின் சூரத்துகளுமாம். இன்னும் கியானிய்யத்தான கவனிப்புகளையும் அவைகள் செயல்களை ஏந்துக் கொள்ளும்படியான அ:ஃயானு தாபித்தாவாகும். அவைகளின் இஸ்தி:ஃதாதுகளைப் போல் பின்னால் உண்டாகக் கூடிய **அவைகளின் அஹ்காமுகள், இன்னும்** அவைகளுக்கு துன்யாவில் உண்டாகக் கூடிய அமல்களைப் போல் பின்னால் உண்டாகக் கூடிய அமல்களைப் போல் **அவைகளுக்கு அவசியமானவைகள், இன்னும்** ஆகிறத்தில் கூலிகளைப் போல் **அவைகளுடைய தேட்டறவுக**ளின் காட்சி**களுடன் பொதுவாக மொத்தமான விதத்தில் காண்பதாகும். வெளியிலுள்ள விபரமான விதத்தின் படிக்கல்ல. மெய்தான் இந்த காட்சி வாஹிதிய்யத்தி**(ன் மற்தபாவி)**ல் இல்மில் வகுப்பானதாகவும், வஹ்தத்தி**(ன் மற்தபாவி)**ல் தொகுப்பானதாகவுமாகும்;.**

**ஏன் சகலதும் தாத்தின் உள்ளிலும்** அதுவாகிறது:- முத்லக்கான அஹதிய்யத்தாகும். **இன்னும் அதின் வஹ்தத்திலும், சகல எண்களும்,** அவைகளில் நின்றுமுள்ள **'ஒன்று' எனும் எண்ணில் மறைந்திருப்பதைப் போல் மறைந்திருக்கிறதே.**

ஏன் வெளியிலிருக்கிற 'ஒன்று' என்னும் எண்ணாகிறது உள்ளில் அவைகளின் ஒன்றேயாகும். வேறல்ல. ஏன் அது அல்லாத அசலிய்யத்தான, பறயிய்யத்தான எண்களின் சகல ஸ்தானங்களின் பேரிலும் விஷயமாகும்.

இதற்கு **'கினல் முத்லக்கு' என்று பெயர் சொல்லப்பட்டதெல்லாம், அல்லாஹுதஆலா இந்தக் காட்சியைக் கொண்டு ஆலம் வெளியிலிருக்கிற வகுப்பான விதத்தில் வெளியாவதை விட்டும்** அதாவது:- அதை அவன் உண்டாக்குவதை விட்டும் அவன் தேவையற்றவனான இருப்பதினால் ஆகும்.

ஏன் காட்சி உண்டாகிறதில் அவனுக்கு ஆலத்தளவிலும், அதிலுள்ளவைகளளவிலும் தேவையில்லையே.

ஏன் சகல சிருஷ்டிகளுடைய காட்சியும் அவையடங்கலும் அவனுடைய வஹ்தத்தினுள்ளில் மறைந்திருந்தவிடத்தில் உண்டாகி விட்டதே.

இந்தக் காட்சியானது மறைவான, அறிவினாலான காட்சியாகும். உலகத்தில் வெளியில் பிரசன்னமான, கண்ணால் பார்க்கப்பட்ட காட்சியாக அல்ல.

வகுப்பானதை தொகுப்பானதிலும், பலதை ஒன்றிலும், விருச்சத்தை அதன் கிளைகள், இலைகள், பூக்கள், காய்களுடன் ஒரு விதத்திலும் காட்சி காண்பதைப்போல்.

அஸ்மாயிய்யான கமாலாகிறது:- அது அல்லாஹுதஅலா தன் நபுஸின் பேரில் வெளியாவதற்கும்- தோன்றுவதற்கும், இன்னும் அவனுடைய தாத்தை வெளியிலுள்ள குறிப்புகளில், அவை அடங்கலையும் சேகரித்துக் கொண்ட ஒரு ஷஃனில் காண்பதற்கும் சொல்லப்படும்.

அவை அடங்கலையும் சேகரித்துக் கொண்ட இந்த ஷஃனு என்பது கொண்டு பெரிய **ஆலத்தையும்,** அதுதான் இன்ஸான் காமிலாகும். **இன்னும்** அற்வாஹுகளில் நின்றும், சடங்களில் நின்றும், **அதிலுள்ளவைகளையும் நாடுகிறேன்.** இது தொகுப்பின் படிக்காகும்.

வகுப்பின் படிக்கோ, வெளியிலுள்ள குறிப்புகள் என்பதைக் கொண்டு கருத்தாவது:-

உலகத்தில் பரந்து கிடக்கின்றவைகள் அடங்கலுமாகும்.

ஹக்குதஆலாவின் **இந்தக் காட்சியாகிறது:-** கண்ணுக்கு **வெளியான** குறிப்பினால் **குறிப்பான** இன்மையில் நின்றும் **உளதான காட்சியாகும்.**

அதுவாகிறது:- உவமையில் **தொகுப்பானதை வகுப்பானதிலும் ஒன்றை பலதிலும், வித்தை விருச்சத்திலும் அதன் சார்புகளிலும் காட்சி காண்பது போலாம்.**

கவனிப்பிலான வேற்றுமையை தரிபடுத்துகிற **அஸ்மாயிய்யான இந்த கமாலாகிறது:- பூரணமாகிறது:- அது தரிபடுகிற, வெளியாகிற புறத்தில் ஆலமும், அதிலுள்ளவைகளும் உண்டாகிறதைப் பொருத்தாயிருக்கிறது.**

**ஏன் முந்திய அந்தக் கருத்து அதாவது:-** ஹக்குதஆலா அவன் தன் நபுஸின் பேரில் வெளியாவதுமும், அவனுடைய தாத்தை வெளியிலுள்ள குறிப்புகளில் காட்சி காண்பதும் **ஆலம் வகுப்பான விதத்தில் வெளியாவதன்றி உண்டாகாது.** முடிவாக உஜூதாகிய ஹக்குத்தஆலா இந்த இரண்டு கவனிப்புகளில் நின்றும் ஒவ்வொரு கவனிப்பின் படிக்கும் அவன் வானம் பூமியின் போஷகனேயாம்.

அறிந்துக் கொள்! நூலாசிரியர் அவர்கள் 'தொகுப்பானதைக் காண்பது' என்பதிலிருந்து கடைசி வரையிலும் சொன்ன வார்த்தையில் 'காண்பது; என்றதை, அல்லாஹ்வில். அல்லாஹ்வுக்காக பனாவாகி அவனல்லாதவற்றையெல்லாம் அழித்துவிட்டு அல்லாஹ்வில் நின்றும் அல்லாஹ்வுக்காக தரிபாடான அடியானுடைய காட்சியளவிலும் சேர்த்துப் பார்க்கலாம்.

அவன்(அந்த அடியான்) பார்த்தானேயானால் அல்லாஹ்வின் பார்வையைக் கொண்டே பார்ப்பான். கேட்டால் அல்லாஹ்வின் கேள்வியைக் கொண்டே கேட்பான். அவனை அந்நேரம் வகுப்பைப் பார்ப்பது தொகுப்பை விட்டும், தொகுப்பைப் பார்ப்பது வகுப்பை விட்டும் தடுக்காது.

அவன் வாஹிதிய்த்து குறிப்பானதை வஹ்தத்திலும், வஹ்தத்து குறிப்பானதை வாஹிதிய்யத்திலும் பார்;ப்பான்.

அது ஹக்குதஆலா அவன் பேரில் தன்னுடைய 'ளாஹிர், பாதினு' என்ற இரண்டு இஸ்முக்களையும் கொண்டு ஒன்றாக வெளியாகி இருப்பதினாலாகும் ஆகையினால் (அங்கு அவர்களுடைய பேச்சை) விளங்கிக் கொள்!

**(கேள்வி) இதனால் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா தனக்கு தானல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுதல் ஏற்படுகிறது இது அசம்பாவிதமாகும் என்று சொல்வாயானால்**

**(பதில்) சொல்கிறேன்:- ஹக்குஸுபுஹானஹுவதஆலா உடைய தாத்து அவனல்லாத மள்ஹறுகள், கட்டுப்பாடுகளைக் கவனிக்காமல் அது தன்னிலேயே பூரணமானதாகும். ஆதலால் அவனுடைய தாத்துடைய பூரணம் கட்டுப்பாடுகள் உண்டாவதற்கு முந்தியே நிச்சயமானதாகும்.**

**இன்னும் அஸ்மாயிய்யான பூரணமாகிறது:- அது மள்ஹறுகளுடைய பூரணத்துவத்திற்காகவும், அஸ்மாக்கள், ஷுஊன்களுடைய பூரணத்துவத்திற்காகவும், அஸ்மாக்கள், ஷுஊன்களுடைய பூரணத்துவத்திற்காகவுமேயாகும்.**

**(கேள்வி) ஹக்கு தஆலாவின் தாத்து அவனல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுதல் ஏற்படாத போதிலும், அஸ்மாயிய்யான கமால், உலகம் உண்டாகிறதின் பேரில் தரிப்பட்டதாக ஆகும்போது அதனால் ஹக்குதஆலாவின் அஸ்மாக்கள் அவனல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுவது ஏற்படுகிறதே இதுவும் அசம்பாவிதம்தானே என்று கேட்பாயானால்,**

**(பதில்) சொல்கிறேன்:- ஹக்கு தஆலாவின் அஸ்மாக்கள் அவனல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுதல் ஏற்படுவதெல்லாம், அஸ்மாக்களுடைய பூரணத்துவம் ஆலம் உண்டாகிறதின் பேரில் தரிப்பட்டதாயிருந்தால் தான். அஸ்மாக்களின் பூரணத்துவம் உலகம் உண்டாவதைப் பொறுத்தல்ல.**

**ஏன் ஹக்குதஆலாவின் தாத்து, அவனல்லாத கட்டுப்பாடுகளளவில் கவனிக்காமல், அது தன்னிலேயே பூரணமானதாக இருப்பதைப் போலவே அவனுடைய அஸ்மாக்களும் அவை தன்னில் அவனல்லாத கட்டுப்பாடுகளை கவனிக்காமலே பூரணமானதாகும்.**

**எனவே அஸ்மாக்களுடைய பூரணமும் கட்டுப்பாடுக் உண்டாவதற்கு முன்னாலேயே உள்ளதாயிருக்கும்.**

**உலகம் உற்பத்தியாவதின் பேரில் தரிபட்டதுவெல்லாம் அஸ்மாக்களுடைய பூரணத்துவம் சிருஷ்டிகளுக்கு வெளியாவதுவேயாகும். அது ஹக்குதஆலாவின் அஸ்மாக்கள் அவனல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுகிறதென்ற கருத்தைக் கொடுக்காதென்பது மறைந்ததல்ல.**

**எனவே ஹக்குதஆலாவின் அஸ்மாக்குளம் அவனல்லாத்ததைக் கொண்டு பூரணம் தேடுவது அவசியமாகாது.**

**(கேள்வி) இந்த விளக்கம் நூலாசிரியர் அவர்கள் 'அஸ்மாயிய்யான இந்த கமாலாகிறது- பூரணமாகிறது:- அது தரிபடுகிற, வெளியாகிற புறுத்தில் ஆலம் உண்டாகிறதைப் பொருத்தாயிருக்கிறது' என்று தெளிவாகச் சொன்ன வார்த்தைக்கு முரணாகிறதே என்று சொல்வாயானால்,**

**(பதில்) சொல்கிறேன்:- அதற்கு முரணாகாது. ஏனென்றால் அஸ்மாயிய்hன பூரணமாகிறது அதற்கு இரண்டு பொருள்களுண்டு.**

**அதிலொன்று:- நூலாசிரியர் அவர்கள் சொன்ன பரிபாஷைப் பொருளாகும்.**

**இரண்டாவது:- அகராதிப் பொருளாகும். அதுவாகிறது:- 'அஸ்மாக்கள் குறைவானதாக இல்லாமல் நிறப்பமானதாக இருப்பதுவாம்'**

**எனவே நூலாசிரியர் அவர்கள் அதன் பரிபாஷைப் பொருளை** அதாவது:- அல்லாஹு தஆலா அவன்தன் நபுஸின் பேரில் வெளியாவதும் வெளியிலுள்ள குறிப்புகளில் தன் தாத்தைப்

பார்ப்பதும்' என்றதை **அது தரிபடுவது**, உண்டாவது **என்ற புறத்தில் உலகம் உண்டாவதின் பேரில் தரிபட்டதாக இருக்குமென்று ஆக்கினார்கள்.**

**அதன் அகராதிப் பொருளை** அதாவது:- 'அஸ்மாக்கள் குறைவானதாக இல்லாமல் நிறப்பமானதாக இருப்பது' என்றதை **அது** சிருஷ்டிகளுக்கு **வெளியாகிற புறத்தினால் அது தரிபடுவது உண்டாவது என்ற புறத்தினால் அல்ல. உலகம் உண்டாவதின் பேரில் தரிபட்டதாக இருக்கும் என்று ஆக்கினார்கள்.**

**ஆகையினால்** நூலாசிரியரின் வாசகத்திற்கிடையிலும், அதைக் கொண்டு கருதப்பட்டது இன்னதுதான் என்பதற்கிடையிலும் **முரண்பாடில்லை. கவனித்துக் கொள்!**

ஈஸாயிய்யீன்கள், ஹக்குதஆலாவின் லாஹூதிய்த்தானது-குறிப்புகளொன்றுமில்லாத்ததானது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் நாஸூத்திய்யத்தில்-தூலதேகத்தில் விடுதிவிட்டிருக்கிறது என்று சொன்னதை போன்று ஹுலூலையும், இத்திஹாதையஉம் விடுதி விடுவதையும், ஒன்றாய் போவதையும் நம்பக் கூடியவர்களும் நிராகரிப்பவர்களில் உண்டான போது, நூலாசிரியர் அவர்கள் தங்களின் வார்த்தையைக் கொண்டு அக் கொள்கையை மறுக்கிறார்கள்:-

**இன்னும்** அறிந்துக் கொள்ளுங்கள் தாத்திய்யான **அந்த உஜூது சிருஷ்டிகளில் விடுதி விட்டிருக்கவுமில்லை**. ஏன் விடுதி விடுதல் உடந்தையாகவும், பலவாகிறதையும் தேடும்.

**இன்னும் அவைகளோடு ஒன்றாகவுமில்லை.** ஏன் ஒன்றாய் போகுதல் கலந்து போகுவதை, அதாவது:- பூர்வீகமானது புதிதானதுடன் ஒன்றாவதை தேடும்.

**அறிந்துக் கொள்! ஒன்றாய் போகுதலாகிறது:- ஒருக்கால் சகல விதத்திலும் தானாக ஆகிறது என்ற கருத்துப்படிக்காகும்.** உவமையில் ஹக்கும், சிருஷ்டியும், ஹகீகத்து, பொதுவாகுதல் என்ற விதத்திலும், இன்னும் கட்டுப்பாடு, குறிப்பு என்ற விதத்திலும் ஒன்றானது என்று சொல்வது போல்.

**அல்லது குறிப்பைக் கொண்டு வேறாவதுடன் பொதுவான ஹகீகத்தில் ஒன்றாகிறது என்ற கருத்துப்படிக்காகும்.**

**அல்லது இரண்டு வஸ்துவுக்கும் ஒரு வஸ்துவாக ஆகிவிடுகிறது என்ற கருத்துப்படிக்காகும்.**

**இந்த கூடாத மூன்று கருத்துக்கள் அனைத்தின் படிக்கும் ஒன்றாய் போகுதலாகிறது:- சிருஷ்டியளவில் கவனிப்பதுக் கொண்டு அந்த உஜூதில் இல்லாத்ததாகும்.**

ஆனால் நான்காவது கருத்தின்படி அதாவது:- சிருஷ்டி ஹக்குதஆலாவுடன் அது அவனுடைய தோற்றங்களில் நின்றுமொரு தோற்றம் என்ற புறத்தில் ஒன்றானதாகும்.

அது அவனுக்கு எல்லா விதங்களிலும் வேறானதாக இல்லை, எனினும் ஹகீகத்தின் புறத்தில் அது அவன் தானாக இருக்கும், குறிப்பின் புறத்தில் அவனுக்கு வேறானதாகும் என்றதின்படி அரு சிருஷ்டியளவில் சேர்த்து பார்ப்பது கொண்டு தரிபட்டிருக்கிறது.

**அறிந்து கொள்! முந்தின கருத்துப்படி அது இல்லை என்பது பகிரங்கமானதாகும். அதனாலேயே நூலாசிரியர் அதற்கு ஆதாரம் கூறவில்லை.**

**ஆனால் இரண்டாவது, மூன்றாவது கருத்துப்படி அது இல்லை என்பதாகிறது:- சிந்தித்து விளங்க வேண்டியதுவாகும். அதனால் தான் நூலாசிரியர் அவர்கள் அதற்கு ஆதாரம் கூறி சொல்கிறார்கள்:-**

ஏனென்றால் விடுதிவிடும் ஸ்தலத்தில் விடுதி விட்டதில் நின்றும் விடுதி விடுதலும், எதனுடன் ஒன்றாய் சேர்ந்ததோ அதில் **ஒன்றாய் சேர்ந்ததில் நின்றும் ஒன்றாய் சேர்தலும் அவை இரண்டிலொன்று மற்றதில் விடுதி விடுவதற்கும் அல்லது இரண்டிலொன்று மற்றதுடன் ஒன்றாவதற்கும் அவை இரண்டிற்கும்** அவை இரண்டில் நின்றும் ஒவ்வொன்றி;ற்கும் வெள;வேறான **இரண்டு பொருள்களிருப்பது அவசியமாகும்.**

**விடுதிவிடுதலுக்கு இரண்டு பொருள் அவசியமென்றது எப்படிப் போலென்றால்:- தண்ணீரும் குடமும் அவ்விரண்டின் உஜூதுகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று வேற்றுமை வெளியாகிருப்பதுடன் குடத்தில் தண்ணீர் விடுதி விட்டிருப்பது போலாவாகும்.**

**இன்னும் ஒன்றாய் போவதற்கு இரண்டு பொருள் அவசியமென்பது எப்படிப் போலென்றால்:- ஜெயிது என்பவனும், அம்று என்பவனும் இருவர்களின் உருவங்களுக்கிடையில் வேற்றுமை வெளியாகி இருப்பதுடன், ஹகீகத்திலும். மாஹிய்யத்திலும்- உணர்வியல்விலும், புருடத்துவத்திலும் இருவரும் ஒன்றாய் இருப்பது போலவாம். உஜூதில் பன்மை எப்படி ரூபகரமாகும்?**

**ஆரிபீன்களின் 'தவுக்கும்' அவர்களுடைய 'விஜ்தானும்' சாட்சியம் கூறியபடி உஜூது** தாத்திலும் **ஒன்றே** சிபத்திலும் **ஒன்றேயாகும். அதற்கு அறவே எண்ணில்லை.**

அந்த உஜூதில் உண்டான **எண்களெல்லாம்** அது அஸ்மாவில் **சிபத்துகளில்** செயல்களில் குறிப்பான வகையினாலேயே **தான்.**

அது அந்த குறிப்புகளை விட்டும் பொதுப்படையானதாயிருக்கிற புறத்தினாலில்லை. ஏன் அது ஒன்றேயாகும். ஒன்றாயிருப்பது அதில் அறவே எண்ணில்லை. ஏன் அது பங்காகாது. அதைக் கொண்டு அதல்லாததற்கு ஒப்பிடவும் படாது.

இதன்படி வெளிரங்கமான சிருஷ்டிகளில் அந்த உஜூது தோன்றிக் கொண்டிருப்பதாகிறது, அது அவைகளின் அ∴யானுதாபிதாவில் ஹக்குதஆலாவின் தாத்து அவனுடைய அஸ்மா சிபத்துகளைக் கொண்டு வெளியான தோற்றங்களின் நிழல்களேயாகும்.

அவைகள் தன்னில் பல உஜூதுகளில்லை. ஏன் அவர்களிடத்தில் நிச்சயமாக உஜூது வாஜிபுல் உஜூதான ஹக்குதஆலா ஒருவனுக்கு மட்டுமேயல்லாதில்லை.

அறிந்துக் கொள்! அல்லாஹ் நமக்கும் உனக்கும் நல்லுதவி செய்வானாக! மேலே சயிக்கினை செய்யப்பட்ட ஆரிபீன்களின் 'தவுக்கு' என்றதாகிறது:-

அது அவர்களிடத்தில் ஓர் அபூர்வமான வஸ்துவாகும். அது அவர்களிடத்தில் வேற்றுமையை நீக்கி விடும்படியான ஐக்கியத்திற்குச் சொல்லப்படும்.

சுவையறியும் சக்தியானது ஒரு உணவின் ருசியை அது உள்ளபடி எட்டிக் கொள்வதற்கு மற்ற உணவின் ருசியை ருசிப்பதை விட்டும் பராக்கொழிவது Nhபல் ஹக்கல்லாத்ததை விட்டும் மனம் பராக்கொழிந்தாலல்லாமல் அந்த ஐக்கியத்தை பெற்றுக் கொள்ளப்படாது.

ஏனென்றால் 'மில்அபா' என்னும் கருவியிலிருந்து சுரக்கின்ற அமுதமான திரவம், மற்ற ருசிகளை இழந்ததாக ஆகாதிருக்கும் காலமெல்லாம் குறித்த உணவை உள்ளபடி எட்எக் கொள்வது அதில் நின்றும் ரூபகரமாகாது.

நோயாளிகளுக்கு வாத, பித்த சிலேட்டுமங்களான தாதுக்கலவையில் மிகைப்பானதின் கோலத்தைக் கொண்டு அவர்களின் சுவையறியும் சக்தி, கோலம் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

அதைப்போல் தான் இலாஹிய்யான ஹகாயிகுக்களை-தெய்வீக அகமியங்களை எட்டிக் கொள்கிற விஷயத்தில் ஸாலிகு எனும் யோகியினிடத்து சுரக்கின்ற சக்தியின் நிலையுமாகும்.

ஏனென்றால் தடைகள், கொளுக்குகள் இன்னும் அதில் உறைந்திருக்கிற கொள்கை கோட்பாடுகளினால் கோலங்கொள்வதை விட்டு அது காலியாகாதிருக்கும் வரையிலும் அந்த அகமியங்களை அவை இருக்கிற விதமாக ஏற்பதும், இன்னும் ஹக்கை கல்பில் காட்சி காண்பதற்காக அவைகளை அதனளவில் அருள்வதும், அதனால் சாத்தியமாகாது. விளங்கிக் கொள்!

பின்னர் அறிந்துக்கொள்!

மேலே சயிக்கினை செய்ப்பட்ட 'விஜ்தான' என்பதாகிறது:-

وُجُوْدِيْ اَنْ اَغِيْبَ عَنِ الْوُجُوْدِ

بِمَا يَبْدُوْ عَلَيَّ مِنَ الشُّهُوْدِ

அது ஹக்குதஆலாவின் காட்சியைக் கொண்டு மனதில் கவலையையோ அல்லது சந்தோஷத்தையோ உண்டாக்கி அதை அதன் கோலத்தை விட்டும் மறைக்கிற இறையருளோடு மனம் மோதுவதற்குச் சொல்லப்படும்.

செய்யிதுனல் ஜுனைது கத்தஸல்லாஹு ஸிற்றஹு அவர்கள் சொல்கிறார்கள்:-

'என்னுடைய உஜூதாகிறது-என்னுடைய வஜ்தாகிறது என்பேரில் வெளியாகிற காட்சியினால் உலகை விட்டும் நான் மறைவதாகும்.'

ஆகவே 'வஜ்து'-காட்சி என்பது வாஜதை-காண்பனைக் கொண்டு நிற்கக் கூடியதாகும். அவன் அழிவது கொண்டு அதுவும் அழிந்து விடும்.

'விஜ்தான்;'-காட்சிப் பொருளாகிறது:-

மவுஜூதான ஹக்குதஆலாவைக் கொண்டு நிற்கிறதாகும். அவனுடைய நிலைப்பாட்டைக் கொண்டு அதுவும் நேமமாக இருக்கும்.

(கேள்வி) உஜூதானது தாத்தாலும் ஒன்றே. சிபத்துகளாலும் ஒன்றே. அதற்கு அறவே எண்ணில்லை என்றும், சரியான ஆதாரங்களைக் கொண்டு தரிபட்டிருக்க, ஏன் விதி விலக்குகளைக் கொண்டு வருத்தப்படுத்த வேண்டும்?

அவ்விதி விலக்குகளுக்கு கட்டுப்பட்டு நடந்தால் சுகம் கிடைக்குமென்று வார்த்தைப்பாடு செய்வானேன்?

அவற்றிற்கு விரோதம் செய்தால் வேதனை வருமென அச்சமூட்டுவானேன்?

இவ்வுலக மறு உலக சம்பந்தமான பல வகையான நோய் நொம்பலங்களைக் கொண்டு சோதிப்பானேன்?

ஒருவன் கஷ்டமான கருமங்களைக் கொண்டு தன் நபுஸை தானே வருத்தப்படுத்துவதும், வழிப்பட்டால் அதற்கு சுகத்தை- கொடுக்கிறதும், விரோதம் செய்தால் அதை வேதனைபடுத்துவதும், மனதில் அமையாத ஒரு விஷயமாக இருக்கிறதே என்றும் கேட்கிறவனுடைய வினாவை நூலாசிரியர் அவர்கள் அறிந்ததும் அதற்கு பின் வரும் தங்கள் வார்த்தையைக் கொண்டு விடையளிக்கிறார்கள்:-

அறிந்து கொள்ளுங்கள்! 'ஜின்களையும், மனுக்களையும் வணங்கிறதற்காகவேயல்லாது நாதன் படைக்கவில்லை' என்று அல்லாஹுதஆலா சொல்லியது போல்:-

**இன்னும் அவனுக்கு வணக்கம் புரிவதும்** அவன் தன் அடியார்கள் பேரில் செய்யும்படியாகவும் விட்டுவிடும்படியாகவும் கடமையாக்கிய வருத்தமான கருமங்களைக் கொண்டும் நிலை நிற்பதுவாகிய **வருத்தங்களும், இன்னும்** அவர்களை வருத்தப்படுத்தியதைக் கொண்டு அவர்கள் நிறை செலுத்தியதற்காக அவர்களுக்கு ஆகிறத்தில் வார்த்தைப்பாடு செய்த **சுகமும்** ஏவல், விலக்கல்களுக்கு மாறு செய்கிறதற்கு வரக்கூடிய **வேதனைகளும், துன்பங்களும் இவை அடங்கலும் (சிருஷ்டிகளான) குறிப்புகளளவில் மீளுவதுவாகும்.**

**இன்னும் அந்த உஜூதானது:- தனது இத்லாக்குடைய மற்தபாவை** (-கண்டிப்பு அகண்டிப்பு இரண்டையும் விட்டும் பொதுவான மற்தபாவை) **கவனிப்பது கொண்ட இந்த வஸ்துக்களடங்கலையும் விட்டும் தூய்தானாகயிருக்கும்.**

**இன்னும் அந்த உஜூதானது** அதாவது அதன் வெளிப்பாடானது சிருஷ்டி **பொருள்க**ளில் சின்னதோ பெரியதோ அவைகளின் அணுக்களில் நின்றும் ஒவ்வொரு **அணுக்களடங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கிறது.**

**மல்ஸூமு-அவசியமாக்கப்பட்டது** உவமையில் மனிதனைப் போல் **லாஸிமை**யும்-**அவசியமானதை**யும் அதில் நின்றுமுள்ளதுதான் உவமையில் 'வாக்கு'

ஆகவே அவசியமாக்கப்பட்ட மனிதனாகிறவன் அவனுக்கு அவசியமாகிய 'வாக்கு' சூவதானது-பூரணமானதும், எதார்த்தமானதுமான சூழ்தலாகும். எனினும் அவசியமான 'வாக்கு' இல்லாமல் போனாலும் அவசியமாக்கப்பட்டவனாகிய இன்ஸானிய்யத்து-மனுஷத்துவம் இல்லாமல் போவது பூணாது.

இதேபோல் தான் சகல சிருஷ்டிகளிலும் அவனுடைய உஜூது வெளியாகி இருக்கிற மூலாதரமான தாத்திய்யான உஜூதுமாம் (அதாவது:-சிருஷ்டிகள் அழிந்து போவதினால் அது அழியாது)

ஏனென்றால் சிருஷ்டியானது சிருஷ்டி கருத்தாவாலுண்டான ஓர் பிரிவு என்பதும், சிருஷ்டி அழிவதினால் சிருஷ்டி கருத்தா அழிவது பூணாது உன்பது தெரிந்த விஷயமே.

**இன்னும் குணத்தை, குணியும் சூழ்வதைப் போலுமாம்.**

**பாத்திரம் பாத்திரத்தினுள்ளிலானதை சூழ்வது போலவும், வியட்டியை சமட்டி சூழ்வது போலவுமில்லை.**

ஏனென்றால் முந்தினது விடுதிவிடதலையம், இரண்டாவது சமமாவதையும் ஒன்றாகுவதையும் தேடும்.

**அல்லாஹுதஆலா அதை விட்டும் மிக உயர்வாக உயர்ந்து விட்டான்- பரிசுத்தனாகி விட்டான்.**

**இன்னும் அந்த** தாத்திய்யான **உஜூதானது அது சுத்த பொதுவாக இருக்கிற** மற்தபாவின்' கவனிப்பைக் கொண்டு **அதாவது:- பொதுவாக இருப்பதுடன்** 'குன்' என்ற உத்திரவைக் கொண்டுண்டான **சகல சிருஷ்டிகளின் தாத்துகளிலும், அந்த உஜூது அந்த தாத்துகளில் அவைகள் தானாக ஆகிறவிதமாக** அதாவது:- அவைகளுக்கு ஹகீகத்தாக ஆகிற விதமாக ஊடுருவியிருக்கிறது. **அதாவது:-வெளியாகி அதில் தோன்றியிருக்கிறது.**

அதாவது:- அந்த உஜூதின் ஹுக்மு வெளியாகியிருக்கிறது. ஏன் அஹதிய்த்தில் அது உடந்தையாக இருப்பதை மறுப்பதை தேடினது தெரிந்த சங்கதிதானே.

**நூலாசிரியர் அவர்கள் 'உஜூதும் அதன் சிபத்துகளும்** சகல சிருஷ்டிகளின் தாத்துக்கள் அவைகளின் சிபத்துகள் **தானாக ஆகும்' என்றதைக் கொண்டு உஜூதின் சுத்த ஹகீகத்தின் புறத்தினால் அது அவைகள் தானாக ஆகிறதையே நாடிக் கொண்டார்கள்.**

**உஜூதும் அதனுடைய சிபத்துகளும் கட்டுப்பாட்டில்லாத்ததாகவும், சிருஷ்டிகளின் தாத்துகளும், அவைகளின் சிபத்துகளும் கட்டப்பாடானதாகவுமிருக்கிற விதத்தினாலில்லை.**

**ஏன் இந்த விதத்தினால் உஜூதும் அதனுடைய சிபத்துகளும் சிருஷ்டிகளின் தாத்துகளுக்கும் அவைகளின் சிபத்துகளுக்கும் வேறானதுவாகும்.**

கௌனிய்யத்தான **அந்த தாத்துகள் வெளியாவதற்கு முன்னால் அந்த உஜூதி**னுள்ளில் அவை ஷுஊனாகவும், அஃயானு தாபித்தாவாகவும் இருந்த சமயத்தில் **அந்த** தாத்திய்யான உஜூது தானானதாகயிருந்ததைப் போல், அதைப் போலவே அந்த தாத்திய்யான பொதுவான **உஜூதுக்குள்ள பூரணமான சிபத்துகளும் அவை சமட்டியாக இருப்பதையும், பொதுவாக இருப்பதையும் கவனிப்பது கொண்டும், கௌனிய்யத்தான சிருஷ்டிகளின் சகல சிபத்துகளிலும், அந்த பூரணமான சிபத்துகள் சிருஷ்டிகளின் சிபத்துகளினுள்ளில் அந்த சிருஷ்டிகளின் சிபத்துகள் தானாக ஆகிற விதத்தில் ஊடுருவினதாக இருக்கும்.**

கௌனிய்யத்தான **சிருஷ்டிகளின் சிபத்துகள் அவை வெளியாக முன்னால் அந்த பூரணமான சிபத்துகளினுள்ளில் அந்த பூரணமான சிபத்துகுள் தானாகவே இருந்ததைப் போல்.**

ஆகவே தாத்திய்யான உஜூதுக்கடையிலும், சிருஷ்டிகளின் உஜூதுகளுக்கிடையிலும், இன்னும் அந்த உஜூதுடைய பூரணமான சிபத்துகளுக்கிடையிலும், சிருஷ்டிகளின் குறைவான சிபத்துகளுக்கிடையிலும், கட்டுப்பாடின்மையைக் கொண்டும், கட்டுப்பாட்டைக் கொண்டுமேயல்லாது வித்தியாசமில்லை.

ஆலமாகிறது அஷ்ஷரிய்யாக்கள் எல்லோர்களும் ஒற்றோர்மித்தது போல், ஆதாரங்களும், ஆதேயங்களுமா? அல்லது சூபிய்யாக்கள் எல்லோர்களும் சொல்வதுபோல் ஆதேயங்கள் மட்டும்தானா? என்பதில் பல அபிப்பிராயங்கள் உண்டானதும் நூலாசிரியர் அவர்கள் தங்களிடத்தில் நேர்மையானதும் சரியானதுமாகிறது:- சூபிய்யாக்கள் எல்லோர்களும் சொன்னதுவே தான் என்பதளவில் தங்களின் வார்த்தையைக் கொண்டு சயிக்கினை செய்கிறார்கள்:-

**இன்னும்** அறிந்துக் கொள்ளுங்கள்! **ஆலமாகிறது அதன் சகல பாகங்களுடனும் ஆதேயங்களாகும். ஆதாரமாகிறது** அதாவது:- ஆலமாகிய இந்த ஆதேயப் பொருள்களெல்லாம் எதைக் கொண்டு நிலைத்திருக்கிறதோ அந்த நிலைக்களமாகிறது **அது அந்த உஜூதேயாகும்.**

ஏன் அவர்கள் (பொருள்களுக்கு இலக்கணம் கூறும் போது) இன்ஸானுக்கு-மனிதனுக்கு 'ஹயவானுன் நாதிகுன்'-வசனிக்கும் ஜீவன்' என்றும், 'ஹயவானுக்கு-ஜீவனுக்கு' 'ஜிஸ்முன்-ஹஸ்ஸஸாஸுன்-முதஹர்ரிகுன் பில் இறாதத்தி-நாட்டங் கொண்டு அசைகின்ற உணர்வுள்ள சடம்' என்றும்,

ஜிஸ்முக்கு-சடத்திற்கு 'ஜவ்ஹருன்-காபிலுன்-லில்-அப்ஆதித்-தலாதா'(நீளும், அகலம், கணம் என்னும்) 'முப்பண்புகளை ஏற்கின்ற ஆதாரப் பொருள்' என்றும்,

ஜவ்ஹருக்கு-ஆதாரப் பொருளுக்கு 'மவ்ஜூதுன்-லா-பீ-மவ்ளூயின்'-இருப்பிடமொன்றிமில்லாமல் (தன்னால் நிலைக்கக் கூடிய)மவ்ஜூது'என்றும்,

'மவ்ஜுது'க்கு- உண்மையானதுக்கு 'தூஉஜூதின்-உண்மையை உடையது' என்றும் இலக்கணம் கூறுகிறார்கள்.

ஆகவே பேச்சும், உணர்வும், நாட்டங் கொண்டசைதலும், முப்பண்புகளை ஏற்றலும், இருப்பிடத்திலில்லாதிருப்பதும், உண்மையளவில் சேர்தலும் எல்லாமுமே, 'தூஉஜூதின்-உண்மையை உடையது' என்ற வார்த்தை அறிவிக்கும்படியான உஜூதை-உண்மைப் பொருளை ஒன்றன் பின் ஒன்றாக அண்டி நிற்கின்ற ஆதேயங்களாகும்.

இதனால் ஆலமாகிறது ஒன்றாக கூடியிருக்கின்ற ஆதேயங்களுக்குத்தான் சொல்லப்படும். வேறில்லை என்று வெளியாகிவிட்டது. விளங்கிக் கொள்!

இனி ஆதேயமானது பிரிதொன்றில் அது கற்பிதமாயிருந்தாலுமோ, எதார்த்தமாக இருந்தாலுமோ அதில் அதற்கு இடம் அவசியத்தை தேடினபோது, அது ஹக்குதஆலாவின் ஷுஊனாகவும், அவனுடைய குறிப்புகுளாவுமிருந்ததிலிருந்து அவை உற்பத்தியாகிக் கொண்டிருந்த இடங்களை நூலாசிரியர் விபரிக்க தொடங்கி சொல்கிறார்கள்:-

**இன்னும்** ஆதேயமாகிய **ஆலமுக்கு மூன்று இடங்கள் உண்டு.**

**அவற்றிலொன்று தஅய்யுனுல் அவ்வலாகும்-முதல் குறிப்பாகும்.** அதாவது:- 'வஹ்தத்து' என்று சொல்லப்பட்ட மற்தபாவாகும்.

**அதில்** ஆலத்திற்கு ஹக்குதஆலாவின் **ஷுஊனு** தாத்திய்யா**வென்று சொல்லப்படும்**. அது ஹக்குதஅலா உடைய சிபத்துகளின் சம்பந்தங்களும் கவனிப்புகளுமாகும். (சிபத்துகளுக்குள்ள நிருமிப்புகளும் கற்பனையுமாம்.)

**அதில் இரண்டாவது:- தஅய்யுனுதானியாகும்-இரண்டாவது குறிப்பாகும்.**

அதாவது 'வாஹிதிய்யத்து' என்று சொல்லப்பட்ட மற்தபாவாகும்.

**அதில்** ஆலத்திற்கு **அ:யானு தாபித்தாவென்று சொல்லப்படும்.** அது ஹக்குதஆலாவின் அறிவில் வஸ்துக்கள் அறியப்பட்டவைகளாகயிருந்த நிலைமையாகும். அதுதான் சிருஷ்டி பொருள்களின் ஹகாயிகுகளாகும்-மூலங்களாகும்.

ஆராய்ச்சியாளர்களிடத்தில் அவைகளில் சமட்டிகளுக்கு மாஹிய்யத்துகள் என்றும் அவைகளில் வியட்டிகளுக்கு ஹுவிய்யத்துகள் என்றும் சொல்லப்படும்.

அது அல்லாஹுதஆலாவின் தாத்தின் உகப்பினாலும், இன்னும் அல்லாஹ்வேயல்'லாது வேறெவரும் அறியாத 'மபாதீஹுல் கைய்பு'கள் அவைகள் வெளியாவதையும், அவைகளின் கமாலாத்துகள்-தத்துவங்கள் வெளியாவதையும் தேடினதினாலும் 'பைளுல் அக்தஸை'க் கொண்டும், 'தஜல்லியுல் அவ்வலைக்' கொண்டும் அல்லாஹ்வின் தாத்திலிருந்து ஒலித்து அல்லாஹ்வின் இல்முடைய சமூகத்தில் குறிப்பான சூரத்துக்களாகும்.

பின்னர் அறிந்துக் கொள்! அஃயானு தாபிதாவாகிறது:- அதற்கு இரண்டு கவனிப்புகளென்ற புறங்களுண்டு.

அதிலொன்று:- அதை 'முஃம்கினான அதம்' அளவில்-'சிருஷ்டியான இன்மை'யளவில் சேர்ப்பதுவாகும்.

அதனளவில்தான்

هَلْ اَتٰى عَلَى الْاِنْسَانِ حِيْنٌ مِّنَ الدَّهْرِ لَمْ يَكُنْ شَيْئًا مَّذْكُوْرًا

'மனிதன் மீது ஒரு காலம் வந்தது அதில் அவன் கூறப்பட்ட ஒரு வஸ்துவுhயுமில்லை' என்ற அல்லாஹ்வின் திருவசனத்தைக் கொண்டு சயிக்கினையாகும்.

அதில் இரண்டாவதாகிறது:- அதை'உஜூது இஃதிபாரி-கற்பனா உண்மை'யளவில் சேர்ப்பதுவாம்.

அதனளவில் தான்

اِنَّمَا قَوْلُنَا لِشَيْءٍ اِذَا اَرَدْنَاهُ اَنْ نَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ

'ஒரு வஸ்துவுக்கு நம்முடைய சொல்லென்பதெல்லாம் அதை நாம் நாடினபோது அதற்கு 'ஆகு' என்று சொல்வது தான். அது உண்டாகிவிடும். என்ற அல்லர்வின் திருவுசனத்தின் சயிக்கினையாகும்.

ஆகவே அதன் இல்லாமையைக் கவனிக்கிற விதமானது அதுவே தான் அதன் பேரில் உஜூது ஒலித்ததை ஏற்றுக் கொண்டதுவாகும். ஏன் அதனால் உண்டானதை உண்டாக்குவது (என்ற தோஷம்) ஏற்படாதிருப்பதற்காக.

இன்னும் அதன் 'உஜூது இஃதிபாரி'-அது உண்மையாயிருப்பதாக கற்பிதமாக்குகிற விதமானது அதுவேதான் 'குன்-ஆகு' என்ற அவனுடைய சொல்லால் விளிக்கப்பட்டதும், ஹக்குதஅலா அதை விளித்து பேசினதை கேட்க ஆயத்தமானதும், கேட்க வழிப்பட்டதுவுமாகும். ஏன் விளித்து பேசுவது சரியாவதற்காக.

இஃது அல்லாஹ் தஆலாவின் ஹிக்மத்தாகும்.

ஆகையினால் தீர்ந்த விசாரணையுள்ள ஆரிபு இடத்தில் அஃயானு தாபிதாவாகிறது:- அதன் வர்ணிப்பில் ஒரு கவனிப்பைக் கொண்டு அது கதீம்-அனாதி என்றும், ஒரு கவனிப்பைக் கொண்டு அது hதிது-புதிது என்றும், ஒரு கவனிப்பைக் கொண்டு அது மவ்ஜூது-உளது என்றும். ஒரு கவனிப்பைக் கொண்டு அது மஃதூமு-இலது என்றும்,(ஒரு கவனிப்பைக் கொண்டு அது கதீம் அல்ல-அனாதியல்ல என்றும், ஒரு கவனிப்பைக் கொண்டு அது ஹாதிது அல்ல-புதிது அல்ல என்றும், ஒரு கவனிப்பைக் கொண்டு அது உளது அல்ல என்றும், ஒரு கவனிப்பைக் கொண்டு அது இலது அல்ல என்றும்) சொல்லலாமென்பதற்கான இடம்பாடுண்டு.

ஆதலால் கூறப்பட்ட சகல கவனிப்புகளின் விதங்களையும் விளங்கிக் கொள்! நீனு; தத்துவ ஞானமுடையவர்களில் நின்றுமாவாய். இன்னும் தத்துவஞானிகளான பூரணத்துவமுடைய அஹ்லுல்லாக்களிலொருவனாக ஆவாய். அல்லாஹ் ஜுபுஹான ஹுவதஆலா நேர்மையை மிக அறிந்தவன்.

<u>அதில் மூன்றாவது:- </u>சிருஷ்டியான <u>வெளியி</u>லான உஜூதி<u>லாம்.</u>

அதில் ஆலத்திற்கு அஃயானு காரிஜிய்யா என்று பெயர் சொல்லப்படும்.

ஏனென்றால் அது அறிவின் உஜூதில் நின்றும் 'குன்' எனும் உத்திரவினால் புறப்பட்டு, கண்ணுக்குத் தோன்றும் சிருஷ்டி உலகில் வந்ததினாலாம்.

<u>இன்னும் அஃயானு தாபிதாவாகிறது:-</u>

அதாவது:- சிருஷ்டிகளின் ஹகாயிக்குகளாகிய அறிவின் சமூகத்திலுள்ளவைகளாகிறது:-

வெளிப்படையான <u>உஜூதின் வாடையையும் நுகரவில்லை</u>. அதை அவைகளளவில் சேர்ப்பதற்கு அவை தகுதியற்றவையாகும். ஏன் வாஜிபுல் உஜூதாகிய ஹக்குதஅலா உஜூதைக் கொண்டு தனித்தவனாகயிருப்பதற்காக.

<u>இன்னும்</u> அறிவிலான வெளியாகுந் தானங்களில் நின்றும், கண்ணுக்குத் தோற்றமாகும் வெளியாகுந்தானங்களளவில் வெளியானதாக அதைக் கொண்டு ஹக்குதஆலா தோன்றினவிடத்தில் <u>வெளியிலிருப்பதுவெல்லாம் அதனுடைய ஹுக்முகளும் அதன் குணபாடுகளுமே தான்.</u>

<u>இன்னும் சகல வஸ்துகளிலும் முதலாவதாக </u>அஸ்மா சிபத்துகளின் புறத்தினால் <u>எட்டிக் கொள்ளப்பட்டதானது</u> குன்ஹின் புறத்தினாலல்ல. <u>அது</u> தாத்திய்யான <u>உஜூதேயாகும்.</u>

<u>இன்னும் சகல பொருட்டினாலேயே</u> தேடப்பட்ட <u>அந்த வஸ்துவை எட்டிக் கொள்ளப்படுகிறது.</u>

அதற்கு உவமானமாகிறது:- <u>உவமையில் சகல நிறங்கள், கோலங்கள்</u> இவைகளை எட்டிக் கொள்வதள<u>வில் கவனிப்பது கொண்டு</u> சூரியனின் அல்லது மற்றவையின் <u>ஒளியைப் போலோம்.</u>

**வெளிப்பாடு நேமமாகயிருப்பதினாலும், அதாவது:- உஜூதின் வெளிப்பாடும். அதை எட்டிக் கொள்வதும், அது மறையாதிருப்பதும் நேமமாதகயிருப்பதினாலும், இன்னும் அது கடுமையானதினாலும் அதாவது:- அதன் வெளிப்பாடு அதிகரித்திருப்பதினாலும், அதை எட்டிக் கொண்டதைப் பற்றி, விசேஷமானவர்களேயல்லாது அறிய மாட்டார்கள்.**

அறிந்துக் கொள்! காட்சி என்னும் ஷுஹூதாகிறது:- இரு வகையான ஷுஹூதாகும்.

அதிலொன்று:- ஐம்ஐயுடையவர்களுடைய ஷுஹூதாகும். அதாவது:- அவர்கள் யாதாகிலுமொரு வஸ்துவை பார்த்தார்களேயானால், இது ஹக்குதஆலா தனது அஸ்மாக்களைப் பூண்டவனாக அஃயானு தாபிதாவெனும் கண்ணாடியில் அதைக் கொண்டு வெளியான வெளிப்பாடாகும் என்று தங்களது கல்பினால் தரிசிப்பார்கள்.

ஆகவே இக்காட்சிகாரரிடத்தில் ஹக்குதஆலா, ளாஹிறாகும்-வெளியானவனாகும், ஆலம் பாதினாகும்-உள்ளானதாகும்.

இதனால் தான் நூலாசிரியர் அவர்கள் 'சகல வஸ்துகளிலும் முதலாவது எட்டிக் கொள்ளப்பட்டது அந்த உஜூதாயிருக்கும்' என்று சொன்னார்கள்.

இரண்டாவது:- பற்க்கை உடையவர்களுடைய ஷுஹூதாயிருக்கும். அதாவது:- அவர்கள் யாதாகிலுமொரு வஸ்துவை பார்த்தார்களேயானால், இந்த வஸ்துவாகிறது, அஃயானு தாபிதாவின் நிழல்களில் நின்றுமொரு நிழலாகும். அதை ஹக்குதஆலா தனது உஜூதென்னும் கண்ணாடியில் வெளியாக்கியிருக்கிறான் என்று தங்கள் கல்பினால் தரிசிப்பார்கள்.

ஆகவே இக்காட்சிக்காரரிடத்தில் ஹக்குதஆலா பாதினாகும். ஆலம் ளாஹிராகும்.

ஆகையினால் இவ்விரண்டு காட்சிகளையும் நீ அறிந்துக் கொண்டாயானால் நீ மறதியாளர்களில் நின்றுமாகாதிருப்பதற்காக வேண்டி. இவை இரண்டையும் அல்லது இதில் ஒன்றையாவது பற்றிப் பிடித்துக் கொள்!

**சாமானியர்களல்ல. ஏனென்றால் அது ஒளியைப் போன்று மறைந்து போகிறதாக இருந்தால் அது மறைவதின் காரணத்தினால் சாமானியர்களுக்கும் கூட அதை எட்டிக் கொண்டதைப் பற்றிய அறிவு உண்டாகும். எனினும் அவன் மறைவதை விட்டும் பரிசுத்தமானவனாகயிருக்கும்.**

**ஆகையினால் இந்த எட்டிக் கொண்வதைப் பற்றிய அறிவு விசேஷமானவர்களுக்கேயல்லாதில்லை.**

**அதாவது:- வௌவாலானது இரவில் பார்க்கும். பகலில் பார்க்காது. பகல் மறைந்திருந்ததினாலும், அது மூடவாக இருந்ததினாலும் அல்ல. எனினும் அதன் வெளிப்பாடு அதிகரித்ததாகயிருப்பதினாலேயேயாம்.**

ஏனென்றால் வௌவாலின் பார்வையானது பலஹீனமானதாகும். சூரியன் பிரகாசிக்குமானால் அதன் ஒளியானது அதன் பார்வையை மிகைத்து விடுகிறது.

ஆகவே வௌவாலின் பார்வை பலஹீனமாகயிருப்பதுடன் பகலின் வெளிப்பாடு பலமாக இருப்பது தான் அது பார்ப்பாமலிருப்பதற்கு காரணமாகும்.

அதேபோல் சாமானிய மக்களுடைய ஹிருதயமானது பலஹீனமானதாகவும், வஹ்தத்துல்-உஜூதுடைய பேரழகானது பிரகாசம், வெளிப்பாட்டின் தீர்மானத்திலும்அதன் வெளிப்பாட்டை விட்டும் சிருஷ்டிகளின் ஒரு அணுவும் கூட தப்பிப்போகாத விதமாக பூரணமான அடையவளைத்தலிலும் சூழ்தலிலுமிருக்கிறது.

ஆகவே அவனுடைய வெளிப்பாட்டின் கடுமையானது அது அவர்கள் பேரில் மறைவதற்கு காரணமாகிவிட்டது.

அதாவது:- அவர்கள் அவனை மள்ஹறுகளில் பார்க்காதிருப்பதற்கு காரணமாகவும், மேலும் அவன் இந்த மள்ஹறுகளில் வெளியாகியிருக்கிறான் என்பதை அவர்கள் அறியாமலிருப்பதற்கும் காரணமாக ஆகிவிட்டது.

ஆகவே சகல வஸ்துகளிலும் முதலாவதாக எட்டிக் கொள்ளப்பட்டதானது அது ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவின் உஜூதே தான் என்ற அறிவும் அவர்களுக்கு கிடையாது.

விசேஷமானவர்களுக்கு மாற்றமாக அவர்களுடைய கல்பாகிறது சக்தியானதாகும். வஹ்தத்துல் உஜூதின் பேரழகானது இந்த மள்ஹறுகளில் வெளியாகியிருக்கிறது என்று அவர்கள் அறிவார்கள். மேலும் அதில் அவனை காண்பார்கள். அதை எட்டிக் கொண்டதை பற்றிய அறிவும் அவர்களுக்கு உண்டாகும். உணர்ந்துக்கொள்!

நூலாசிரியர் அவர்கள் உஜூதையும், தாத்து, சிபத்து, அஸ்மாக்களின் புறத்தினால் அதன் உலூஹிய்யத்துடைய மற்தபாக்களையும், அப்ஆல்களின் புறத்தினால் அதன் சிருஷ்டியான மற்தபாக்களையும், இன்னும் அத்Nஆதாடு கூறியவைகளையும் விபரித்து முடிந்த பின்னர்,

அல்லாஹு தஆலாவின் ஹபீபு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

لَايَزَالُ عَبْدِيْ يَتَقَرَّبُ اِلَيَّ بِالنَّوَافِلِ حَتّٰي اُحِبَّهُ

'என்னுடைய அடியான் ஸுன்னத்தான அமல்களைக் கொண்டு, என்னளவில் முடுகுதலாகிறவனாக நீங்காமலாவான். நான் அவனை உகக்கிறவரையிலும்' எனும் ஹதீது கடைசிவரையிலுமுள்ள தங்களுடைய வார்த்தையைக் கொண்டும்,

இன்னும்,

مَا تَقَرَّبَ اِلَيَّ مُتَقَرِّبٌ اِلَّا بِمِثْلِ مَا افْتَرَضْتُ عَلَيْهِ

'முடுகுதலாகிறவர் ஒருவருமே என்னளவில் முடுகுதலாகிறதில்லை நான் அவர் பேரில் கடமையாக்கியதை செய்வது போன்றதைக் கொண்டேயல்லாமல்' எனும் ஹதீதிலுள்ள அவர்களுடைய வார்த்தையைக் கொண்டும் அல்லாஹ்வை தொட்டுமத் ஹிகாயத்து செய்ததை போல் அவனுக்கு உகப்பான அமல்களைக் கொண்டு அவளவில் முடுகுதலாவதைப் பற்றி விபரிக்கத் தொடங்கி சொல்கிறார்கள்:-

**இன்னும்** அறிந்துக் கொள்ளுங்கள்! அஹ்லுல்லாகளிடத்தில் அடியானுக்கு தன் நாயனில் நின்றுமுண்டான **முடுகுதலாகிறது:- இரு** (வகையான) **முடுகுதலாகும்.**

அதிலொன்றாவது:- அதற்கு குற்புன்னவாபில் என்று சொல்லப்படும்.

இன்னும் இரண்டாவதாகிறது:- அதற்கு **குற்புல் பறாயிள்** என்று சொல்லப்படும்.

**அறிந்துக் கொள்! குற்புன்னவாபிலாகிறது:-** அது கடைசி முடிவு, பயன் என்ற புறத்தில் ஹக்குதஆலாவில் நின்றும் இரவலாக கிடைத்த கட்டுப்பாடான **அவனுடைய மானுஷீகத்துவ இலட்சணங்கள்** அவைகளின் கட்டுப்பாடுகுள் அழிவது கொண்டு **நீங்கிப்போவதும்,** அடியானின், அழிந்து இல்லாது போன இலட்சணங்களுக்கு பகரமாக **ஹக்குதஆலாவின் இலட்சணங்கள் அவன் பேரில் வெளியாவதுமாகும்.**

அது ஹக்குதஆலா தனது கட்டுப்பாடில்லாது பொதுவான இலட்சணங்களைக் கொண்டு அவன் பேரில் வெளியாகி அவனுக்கு உத்திரவு கொடுப்பதைக் கொண்டுமேயல்லாமல் உண்டாகாது.

**அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டு அவன்** (மவுத்தானவர்களை) **ஹயாத்தாக்குவான்** (ஹயாத்தானவர்களை) **மவுத்தாக்குவான். இன்னும் அவனுடைய காது, கண்ணைக் கொண்டு மட்டுமில்லாமல் அவனுடைய சடலம் முழுவதையும் கொண்டு கேட்பான். பார்ப்பான். இதைபோல் கேட்பவைகளை தூரத்திலிருந்து கேட்பான். பார்ப்பவைகளை தூரத்திலிருந்து**ம் பார்ப்பான்.

**மற்ற சிபத்துகளையும் இதன்மேல் ஊகிக்கப்படும். இது தான்** சொன்னவர்கள் தங்கள் பரிபாஷையில் **மனித சிபத்துகள் அல்லாஹுதஆலாவின்** பூர்வீகமான அனாதியான **சிபத்துகளில் பனாவாகிற**து என்று சொன்னவர்கள் சொன்னதின் **கருத்தாகும்.**

இது நப்லான இபாதத்துகளை நிறைவேற்றி வந்ததின் பயனாகும்.

**இனி குற்புல் பறாயிளு என்பதாகிறது:- அது** அடியான் ஆன்மாக்களானாதும், சூக்குமமானதும் சடமானதுமாகிய **சகல சிருஷ்டிகளின் உணர்வையும், தன் நப்ஸையும்** உணர்வதை **விட்டும் கூட ஹக்குதஆலாவின் உஜூது ஒன்று தவிர** மற்றவை ஒன்றும் **அவன் பார்வையில்**-அவன் ஷுஹூதில் மவுஜூதாக **தரிபடவில்லை என்ற விதமாக** தன்னுடைய சகல பாகங்களில் நின்று ஒவ்வொரு பாகத்தையும் பொதிந்த **முழு ஐக்கியமாய்** அல்லாஹ்விலே **பனாவாய் விடுவதாம்.**

இதுதான் அடியான் உடைய தாத்து அல்லாஹுதஆலாவின் தாத்தில் பனாவாகிறது என்று சொன்னவாகள் சொன்னதின் கருத்தாகும்.

இது பர்லான அமல்களை நிறைவேற்றி வந்ததின் பயனாகும்.

அறிந்துக் கொள்! அடியான் தன் நபுஜை விட்டும் இல்லாமலாகி, அவனை விட்டும் அவனுடைய மானுஷீக உஜூது உரியப்பட்டுப் போகி, அவனை விட்டும் அவனுடைய அடிமைத்தனத்தின் ஒளி நூர்ந்து போகி அவனுடைய சிருஷ்டியான ரூஹு பனாவாகிப்போய் விடுமானால் அப்போது அவன் அல்லாஹுதஆலாவின் தாத்திய்யான தஜல்லிக்கும். சிபாத்திய்யான தஜல்லிக்கும் தகுதியானவனாக ஆகி விடுகிறான்.

பின்னர் ஹக்குதஆலா இந்த அடியானின் பேரில் தாத்தைக் கொண்டோ அல்லது சிபத்துகளைக் கொண்N;hத தஜல்லியாக நாடினானேயானால், இந்த அடியானை விட்டும் உரிந்தெடுக்கப்பட்டதற்கு பகரமாக தன்னுடைய தாத்தில் நின்றும் ஒரு 'லதீபா'வை. அது தன்னுடைய தாத்தை விட்டும் பிரியாத்ததாகவும், அடியானடன் ஒன்றாய் சேராத்ததாகவுமான நிலையில் இந்த அடியானின் ஹைக்கலில்-சூறத்தில் வைக்கிறான். அதற்குத்தான் 'ரூஹுல் குத்ஸு' என்று பெயர் சொல்லப்படும்.

ஆகவே ஹக்குதஆலா இந்த அடியானின் பேரில் தன்னுடைய தாத்தைக் கொண்டோ அல்லது தனது கிபத்துபுளில் ஒரு சிபத்தைக் கொண்N;டா தஜல்லியானானேயானால் அது எதார்த்ததில் அவனும் அவனுடைய சிபத்தும் அவன் தன் பேரிலேயே வெளியானதாகும். அடியான் பேரிலல்ல.

இன்னும் வஹ்தத்துல் உஜீது –உஜூது ஒன்றே தான் அது வாஜிபு, மும்கினு என இருவகை இல்லை என்று சொல்கிறவர்களில் நின்றுமுள்ளவர் தான் ஏன் அவாகள் அப்படி சொல்கிறார்களென்றால், அவர்களிடத்தில் ஹக்குதஆலா அல்லாத சகல சிருஷ்டிகளும், அதன் ஹகீகத்தைக் கொண்டேயல்லாது அது நிலைக்காது. அவர்களிடத்தில் அதனுடைய ஹகீகத்தோ ஷுஊனு தாத்திய்யாவாக இருக்கும், அல்லது இல்மில் அறியப்பட்டவைகளாக-அஃயானு தாபிதாவாக இருக்கும். இவை ஒவ்வொன்றும் ஹக்குதஆலாவின் தாத்தைவிட மேலதிகமானதொன்றில்லை. இதனாலேயே உஜூது ஒன்றேதான் என்று அவர்கள் சொன்னார்கள். விளங்கிக் கொள்!

இன்னும் அறிந்துக் கொள்! அந்த உஜூதை எட்டிக் கொள்கிறவர்களின் நிலைமைகள் அவர்களின் அனுபவங்களை பொருத்து அவர்கள் மூன்று கூட்டங்களாக ஆனார்கள்.

ஒரு கூட்டத்தார், யுக்திப் பிரமாணங்களைக் கொண்டும், சுருதிப் பிரமாணங்களைக் கொண்டும். தாத்திய்யான உஜூதான ஹக்கு ஸுபுஹானஹு வதஅலா அவன் தான் சிருஷ்டிகளான சகல வஸ்துக்களுக்கும் ஹகீகத்தாகும்-அசலாகும். அதில் நின்று தான் அவைகள் உண்டானதாகும் என்று அறிகிறார்கள்.

ஏன் அவர்களிடத்தில் யுக்திப் பிரமாணமாகிறது:- சிருஷ்டிகள் அடங்கலும் அவனின் இல்மில் சமூகத்தில் அறியப்பட்டவைகளான ஹகாயிகுகளில் வெளியான ஒரே உஜூதுடைய நிழல்களும், குணபாடுகளுமேயாகும்.

ளாஹிர் உலமாக்கள் அவைகள் மும்கிhன-சிருஷ்டிகளான பல உஜூதுகள் என்று சொல்வது போல் அவைகள் தன்னில் பல உஜூதுகள் அல்ல.

**இன்னும்** அப்படியே மேலே கூறியது போல் ஹக்குதஆலா **அவைகளின் பாதினுக்கும் ஹகீகுத்தாக இருக்கும் என்றும் யகீனாக அறிகிறவர்கள்.** ஏன் சிருஷ்டிகளின் பாதினாகிறது அறிவின் சமூகத்தில் குறிப்பானவைகள்-அஃயானு தாபிதாக்கள் தான். பரிசுத்த தாத்து அல்ல என்பது தெரிந்தது தானே.

ஆகவே இந்த கவனிப்பின்படி தாத்தானது சகல சிருஷ்டிகளுக்கும் ஹகீகத்தாகும். இன்னும் அவைகளின் ஹகீகத்துக்களுக்கும் ஹகீகத்தாகும். (அதாவது:-பாதினுக்கும் பாதினாகும்)

அல்லது ந்த சிருஷ்டிகளாகிறது:- உஜூது எனும் கண்ணாடியில் வெளியான அஃயானு தாபிதாவின் நிழல்களாபம் என்று சொல்கிறவர்களிடத்திலுள்ள கருத்துப்படி ஹக்கு ஸுபுஹானஹுவதஆலா சகல சிருஷ்டிகளுக்கும் பாத்தினாவான் ன்று; அறிகிறவர்கள், விளங்கிக் கொள்!

எனினும் அவர்கள், மள்ஹறுகளென்னும் சிருஷ்டிகளில் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவை ஷுஹூது செய்ய மாட்டார்கள்.

**இன்னும் அவர்களில் நின்றுமுள்ளவர் தான்** அதாவது:- உஜூது ஒன்றேதான் என்று சொல்கிறவர்களில் இரண்டாவது கூட்டத்தார்களாகிறவர்கள், அவர்கள் 'இல்முல் யகீன்' உடைய மற்தபாவை விட்டும் 'ஐனுல் யகீன்' உடைய மற்தபாவில் கடந்து, **ஹக்கு தஆலாவை** மொத்தமான **சிருஷ்டியில் ஹாலிய்யான** நிலையில்லாத காட்சியாக ஏன் ஹால் அதை தேடினதற்காக அது ஆரம்ப திசையானதினாலாம். ஏன் இங்கு அடியானுக்கு அவனுடைய ஆரம்ப நிலையில் அவனில் 'ஜம்வு' உடைய நிலைமையும், 'பற்கு' உடைய நிலைமையும் மாறி மாறிக் கொண்டிருக்கும்.

எனவே ஒளித்தோற்றம். அவனில் ஸ்திரமாக தரிபடுகுpற வரையிலும் அது அவனுக்கு வெளியாகிக் கொண்டும், அவனை விட்டும் அது மறைந்துக் கொண்டுமே நீங்காமலிருகு;கும்.

அது அவனில் ஸ்திரமாக நிலைத்து விடுமானால் பின் ஒரு போதும் அவனை விட்டும் அது பிரியாது நிலைத்தப் பின்னர் அவனை விட்டும் 'ஜம்வு'வை உரியவும் படாது அவன் 'பற்கு'டைய பார்வையைக் கொண்டு 'கைறு' அளவில் பார்த்தாலும் சரியே.

**கல்பைக் கொண்டு காட்சி காண்பவரும்,** அதாவது:- அவனை விட்டும் சிதை நீங்கினபோது அவன் தனது கல்பைக் கொண்டு பார்ப்பான். அப்போது அவன், கருமங்களின் வெளிரங்கங்களை

முன்பு அவனுடைய தலைக் கண்ணால் பார்த்ததைப் போல் அவைகளின் அந்தரங்கங்களை அவனுடைய கல்பைக் கொண்டு பார்ப்பான், விளங்கிக் கொள்!

இன்னும் 'ஐனுல் யகீன்' என்று ஒரு சமயமும், 'ஜம்வு' என்று மற்றொரு சமயமும் பெயர் சொல்லப்பட்ட **இந்த மற்தபாவாகிறது:- முந்தின மற்தபாவை விடவும் மேலானதும், உயர்வானதுமாகும்**.

**இன்னும் அவர்களில் நின்றுமுள்ளவர் தான்** அதாவது:- உஜூது ஒன்றேதான் என்று சொன்னவர்களில் நின்றும் மூன்றாவது கூட்டமாவது:- அவர்களிடத்தில் முந்தின இரண்டு மற்தபாக்களின் நிலைமைகளும் சரி சமமானவர்கள்.

ஆகவே ஒரு நேரத்தில் அவர்களுடைய நிலைமை முந்தின கூட்டத்தார்களைப் போன்றிருக்கும். இன்னுமொரு நேரத்தில் இரண்டாவது கூட்டத்தார்களபை; போன்றிருக்கும்.

அதற்கு காரணமென்னவென்றால் அவர்களை விட்டும் திரைகள் பூராவுமே நீங்கி விட்டது தான், ஆகவே அந்நேரத்தில்; வெளியான உஜூதை –சிருஷ்டியை பார்ப்பதானது அவரை விட்டும் தாத்தை மறைக்காது.

மாற்றமுமாகாது. (அதாவது:-தாத்தை பார்ப்பது அவரை விட்டும் வெளி உஜூதை மறைக்காது)

எனினும் **ஹக்கை கல்கிலும், கல்கை ஹக்கிலும், இவை இரண்டிலொன்று மற்றதை விட்டும் விலக்கக் கூடியதாக ஆகாத விதத்தில் காட்சி காண்பவர்.**

அதாவது:- அவருடைய அகக் கண்ணைக் கொண்டு 'பாதின்' எனும் இஸ்மைக் கொண்டு இலட்சணம் பூண்ட அவனின் தாத்தின் பேரழகை அதன் மள்ஹறுகளான சிருஷ்டிகள் பூராவிலும் பார்ப்பார், இன்னும் ஹக்குதஆலாவின் தாத்தின் பேரழகில் சிருஷ்டிகளையும் பார்ப்பார்.

அதாவது:- அவர்களின் வெளியான உஜூதை உறுதி பெறுகிற வித்தில் சிந்திப்பார். அவர்களை பார்க்கிறவர் பார்ப்பதைப் போல் பார்க்க மாட்டார்.

அவ்விரண்டில் ஒன்று, அதாவது:- அவ்விரண்டு காட்சிகளிலொன்று மற்றதை காட்சி காணுவதை விட்டும் விலக்கக் கூடியதாக ஆகாத விதத்தில், **அதாவது:- ஹக்கையும் ஒருமையும் ஷுஹூது செய்வதானது சிருஷ்டியையும் பன்மையையும் ஷுஹூது செய்வதை விட்டும் விலக்கிறதாக ஆகாத விதத்திலும்,**

**இன்னும் சிருஷ்டியையும் பன்மையையும் ஷுஹூது செய்வது ஹக்கையும் ஒருமையையும் ஷுஹூது செய்வதை விட்டும் விலக்கிறதாக ஆகாத விதத்திலும்,**

**ஒரே உஜூது தன்னையே 'இத்லாக்'கின்-கட்டுப்பாடில்லாமையின் புறத்தினால் ஹக்காகவும், 'தக்யீது'-கட்டுப்பாட்டின் புறுத்தினால் சிருஷ்டியாகவும் கல்பில் காட்சி காண்பவரும் அவர்களில் நின்றுமுள்ளவர்தான்.**

**இதுதான் 'றுபாயிய்யாத்து' எனும் நூலின் விரிவுரையினால் விளங்கப்பட்ட கருத்தாகும்.**

**இன்னும் நூலாசிரியர் அவர்களின் வாசகத்திற்கு 'ஹக்கை சிருஷ்டியில் கல்பைக் கொண்டும், சிருஷ்டியை ஹக்கில் தலைக் கண்ணைக் கொண்டும் இவை இரண்டிலொன்று மற்றதை விட்டும் விலக்கக் கூடியதாக ஆகாத விதத்தில் ஷுஹூது செய்கிறவரும் அவர்களில் நின்றுமுள்ளவர்தான்' என்றும் கருத்துக் கொள்ளலாம்.**

**இதுதான் நஸீறுல்-ஹக்கி-வஷ்ஷறயிவத்தீன் மஹ்மூதுபுனு பூசுபு ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ரிஸாலா- நூலிலுள்ள கருத்தாகும்.**

**ஏன் அதில் இப்படி**

غَيْبُ بَغَيْبُ وَشَاهِدُ بَشَاهِدً مَشْغُوْل كَرْدَنْ چُنَانكه نَه غَيْبُ رَا خَبَرْزْ شَاهِدُ وَنَه شَاهِدُ رَا خَبَرْاَزْ غَيْبُ

அதாவது- 'மறைவான கல்பை மறைவான ஹக்கைக் கொண்டும், வெளியான கண்ணை வெளியான சிருஷ்டியைக் கொண்டும் பராக்காக்க வேண்டும், மறைவானதிற்கு வெளியானதைப் பற்றிய அறிவும், வெளியானதிற்கு மறைவானதைப் பற்றிய அறிவுமில்லாத வித்தில்' என்று இருக்கிறது.

**இந்த கடைசியான** மூன்றாவது **மற்தபாவாகிறது:- முந்திய இரண்டு மற்தபாக்களை விடவும் மேலானதும்,** இன்னும் நேர் முரணானவைகள் இரண்டும் சேர்ந்திருப்பதினால் பதவியால் உயர்வானதுவுமாகும்.

**இதுதான் நபிமார்களுடையவும், இன்னும் அவர்களைப் பின் தொடர்ந்து நடந்ததினால் குத்புமார்களுடையவும் மகாமாக இருக்கும்.**

அறிந்துக் கொள்ளுங்கள்! ஹக்கு ஸுபுஹாஹு வதஆலாவை அவனுடைய சிருஷ்டிகளாகிய மள்ஹறுகளில்-வெளியாகும் ஸ்தானங்களில் காட்சி காண்பதளவில் சேர்த்து வைக்கும்படியான பாதைகளாகிறது அனந்தமுண்டு.

அவைகளில் நின்றும் ஆரிபீன்கள் மூன்று பாதைகளை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலொன்று:- அல்லாஹ் தஆலாவின்

قُلِ اللّٰهُ ثُمَّ ذَرْهُمْ

'அல்லாஹ் என்று சொல்லும். பின்னர் அவர்களைவிட்டு விடுங்கள்' என்ற திருவசனத்திற்கிணங்க, நீ ஜாமிஆன இஸ்மாகிய 'அல்லாஹ்' எனும் இஸ்மை எடுத்துக் கொண்டு அதன் அச்சரங்களை 'சிந்தனை' எனும் பேனாவைக் கொண்டு, ஹிருதயமெனும் பலகையில் சூரிய ஒளியான சாயத்தைக் கொண்டு எழுத வேண்டும்.

(அதாவது அப்படி ஒளியா மனதில் எழுதப்பட்டிருப்பதாக சிந்திக்க வேண்டும்)

பின்னர் அந்த சூறத்தாகிறது அல்லாஹுதஆலாவின் வெளியாகும் ஸ்தானங்களில் நின்றுமொரு வெளியாகும் ஸ்தானமாகும். அதில் ஹக்குதஆலா ஹுலூல், இத்திஹாது-விடுதி விடுதல், ஒன்றாக சேர்தல் இன்றியே வெளியாகியிருக்கிறான் என்று நீ நிர்ணயம் கொள்வதாகும்.

(அதாவது:- பாத்திரத்தில் தண்ணீர் இருப்பது போல் ஒன்று ஒன்றில் விடுதி விடுவதற்கும், அல்லது தண்ணீரும் சர்க்கரையும் ஒன்றாய் சேர்ந்து சர்பத்தாக ஆகிறது போல் ஒன்று மற்றதுடன் சேர்வதற்கும் இரண்டு பொருள்கள் வேண்டும். இங்கு இரண்ட பொருளில்லை. இஹ்கு ஹக்குதஆலாவும் அவனுடைய தோற்றங்களுமே அல்லாது வேறொன்றுமில்லை.

நீ உன் மனதில் 'அல்லாஹ்' என்று ஒளியால் எழுதப்பட்டிருப்பதாக சிந்தனை செய்ததுவும் ஹக்கு தஅலாவின் ஒரு தோற்றமேயாகும். அதில் அவன் 'ஐஸில்' தண்ணீர் வெளியானது போலவும். தங்க நகைகளில் தங்கம் வெளியானது போலவும் வெளியாகியிருக்கிறான் என்று நிர்ணம் கொள்வதாகும்.)

இரண்டாவதாகிறுது:- அல்லாஹுதஅலாவின்

اِقْرَأْ كِتَابَكَ كَفٰى بِنَفْسِكَ الْيَوْمَ عَلَيْكَ حَسِيْبًا

'உன்னுடைய கிதாபை ஓது, இன்று நீனே உன் பேரில் கேள்வி கேட்கிறவனாக போதும்' என்ற திருவாக்கியத்திற்கிணங்க, உன்னுடைய 'ஐனுதாபிதா'வையும், உன்னுடைய 'ஐனுகாரிஜா'வையும் திடப்படுத்திக் கொண்டு, பின்னர் அவை இரண்டையும் ஒன்றாக ஆக்கிக் கொண்டு உன்னுடைய 'ஐனுதாபிதா'வோடு ஒன்றாக சேர்ந்த உன்னுடைய 'ஐனுகாரிஜா' வாகிறது அது அல்லாஹ்வின் வெளியாகும் தானங்களில் நின்றுமொரு வெளியாகும் தானமாகும். அதில் ஹக்குதஆலா 'ஹுலூல், இத்திஹாது' இல்லாமல் வெளியாகி இருக்கிறான் என்று நீ நிர்ணயம் கொள்வதாகும்.

(அதாவது:- வாஹிதிய்யத்தின் மற்தபாவில் அல்லாஹுதஆலா உன்னை விபரமாக அறிந்தும் உனக்கு உன்னையும் மற்றதையும் அல்லாஹ்வையும் பற்றிய அறிவுயில்லாமல் இருந்த உன் 'ஐனுதாபிதா'வும், உனக்கு உன்னைப் பற்றியும், மற்றவை பற்றியும் அறிவைக் கொடுத்த, அதாவது:- ஹக்குதஆலா அப்படி வெளியான சிருஷ்டியான உன்னுடைய 'ஐனுகாரிஜா'வான 'நீ'என்பதுவும் ஒன்றாக சேர்ந்து இப்படி சேர்ந்த 'நீ' என்பதும் ஹக்குதஆலாவின் மள்ஹறுகளில் நின்றும் ஒரு மள்ஹறாகும். அவனுடைய குறிப்புகளில் நின்றுமொரு குறிப்பாகும். அவனுக்கு வேறான ஒரு பொருளல்ல.

ஆகையினால் அதில் ஹக்குதஆலா 'ஹுலூல், இத்திஹாது' இல்லாமல் 'ஐஸில்' தண்ணீர் வெளியானது போலவும் தங்க நகைகளில் தங்கம் வெளியானது போலவும் வெளியாகியிருக்கிறான் என்று உறுதி கொள்வதாகும்.

மூன்றாவதாகிறது:-

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ

'நீங்கள் அல்லாஹ்வை உகந்தவர்களாக இருப்பீர்களேயானால் என்னை துயர்ந்துக் கொள்ளுங்கள் என்று (நபியே) சொல்லும்'என்ற அல்லாஹ்வின் திருவசனத்திற்கிணங்க,

(முழு சிருஷ்டிகளுமாகிய) ஆலம் கபீறையும்-பெரிய ஆலத்தையும், இன்னும் (அவை அத்துணையில் நின்றும் அதி நுட்பமான ஒவ்வொரு பாகத்தையும் ஒன்றாக சேர்த்து அமைக்கப்பட்ட) ஆலமுஸ்ஸகீறையும்-சிறிய உலகமான இன்ஸான் ஆகிய உன்னையும் நிச்சயித்துக் கொண்டு, பின் அவை இரண்டில் நின்றும் பெரிய ஆலத்தை எடுத்துக் கொண்டு அதுவாகிறது அல்லாஹு தஆலாவின் மள்ஹறுகளில் நின்றும் சம்பூரணமான மள்ஹறாகும்.

(அதுவும் அவனுடைய குறிப்புகளில் நின்றும் ஒரு குறிப்பாகும் அவனுக்கு வேறான ஒரு பொருளல்ல. ஆகையினால் முன் சொன்னதுபோல்) அதில் ஹக்குதஆலா 'ஹுலூல், இத்திஹாது' இல்லாமல் வெளியாகியிருக்கிறான் என்று உறுதி கொண்டு அதை நீ முஷாஹதா செய்வதாகும்.

ஆகையினால் இந்த மூன்று வழிகளையும் அறிந்துக் கொண்டாயானால் உன்னுடைய காமிலான ஷெய்குடைய உத்திரவின்படி இவைகளில் நின்றும் ஒன்றை பற்றிப்பிடித்துக் கொண்டு உன்னுடைய அகக் கண்ணைக் கொண்டு அதை முஷாஹதா செய்துக் கொண்டு- தியானித்துக் கொண்டு இரு. அல்லாஹு தஆலாவின் அருள் உன்னை இரண்டாவது பனாவின் ஸ்தானத்தளவில் சேர்த்து வைக்கிற வரையிலும், அங்கு உனக்கு உண்டாவதாகிறது அதுவே நாடப்பட்டதுவாகும்.

குளிப்பாட்டுகிறவனிடத்தில் மையித்தைப் போல் நீ உன் நபுஸை ஒரு காமிலான ஷெய்கிடத்தில் ஒப்படைத்து அவருக்கு நீ தொண்டு செய்வதைக் கொண்டேயல்லாது உனக்கு அது எளிதாகாது. விளங்கிக் கொள்!

**ஷரீஅத்துக்கு விரோதம் செய்தவனுக்கும்,** அதாவது:- ஹக்குதஆலாவிடமிருந்து வந்து, சிருஷ்டிகளை ஏவல், விலக்கலைக் கொண்டு கட்டளை செய்யும்படியான சுருதிப் பிரமாணங்களுக்கு விரோதம் செய்தவனுக்கும், **இன்னும் தரீகத்திற்கு விரோதம் செய்தவனுக்கும்**அதாவது:- மனதை சுத்தப்படுத்தி தெளிவாக்குவது, இன்னும் ஹக்கல்லாத சிருஷ்டிகளின் உகப்பை விட்டும் மனதை ஒழிப்பது போன்ற ஹக்குதஆலா அளவில் சேர்த்து வைக்கும்படியான வழிகளின் புகழப்பட்ட கட்டளைகளுக்கு விரோதம் செய்தவனுக்கும், **அந்த மூன்று மற்தபாக்களில் நின்றும்** 'ஐனுல் யகீன்' என்றும் 'ஜம்வு' என்றும் சொல்லப்பட்ட **மத்திபமான மற்தபா உண்டாவது அசம்பாவிதங்களில் நின்றுமுள்ளதென்றால் மேற்கொண்டு முந்திய இரண்டு மற்தபாக்களையும் விட மிக்க மேலான கடைசி மற்தபா அவனுக்கு வாய்ப்பது அசாத்தியமேயாகும்.**

நூலாசிரியர் அவர்கள் உஜூதைப் பற்றி சொன்ன வாசகமானது உஜூது ஒன்றுதான் என்று சொன்னவர்களிடத்தில் அது வாஜிபு. மும்கினு என பங்குகளாகாது என்பதான விளக்கத்தைக் கொடுத்தபோது, அது பின் வரக்கூடிய இரண்டு கவனிப்பின்படி அவ்விரண்டளவிலும் பங்காகுமென்பதை விபரிக்கத் தொடுத்து முந்தின கவனிப்பின்படி சொல்கிறார்கள்:-

அறிந்துக் கொள்ளுங்கள்! **இன்னும் நிச்சயமாக சகல சிருஷ்டிகளும் உஜூது என்ற புறத்தில் அதாவது:- ஹக்கு தஆலாவின் உஜூது என்ற புறத்தில் ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலா தானாவேயாகும்.**

ஏனென்றால் அவைகள், 'உஜூதுல் முத்லக்கு-கண்டிப்பு, அகண்டிப்பு என்ற இரண்டையும் விட்டும் பொதுவான உஜூது' என்று சொல்லப்பட்ட 'வஹ்தத்து தாத்திய்யா' வின் புறத்தில் அவை ஹக்குதஆலாவின் 'ஷுஊனு'ம், அவனுடைய தாத்திய்யான கவனிப்புகளாகவுமேயாகும்.

தாத்து ஒன்று என்ற புறத்தில் அது அல்லாத்ததிற்கு அறவே உஜூது இல்லை.

பின்பு இரண்டாவது கவனிப்பின்படி சொல்கிறார்கள்:-

**இன்னும் குறிப்பு என்ற புறத்தில் அதாவது:- சிருஷ்டிகளென்ற குறிப்புகளின் புறத்தில் அவை ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலாவுக்கு வேறானதுவாகும்.**

அதுவாகிறது:- நிச்சயமாக சிருஷ்டிகளாகிறது:- ஹக்குதஆலாவின் வெளித் தோற்றமென்ற புறத்தினாலாகும். அவன் தனது பூர்வீகமான அறிவின் சமூகத்தலி; அவைகளின் அஃயானு தாபிதாவில் வெளியானான். சிருஷ்டிகளின் மற்தபாக்களைக் கொண்ட கொழுகிய ஆதேயங்களும், கட்டளைகளுமான அந்த அஃயானு தாபிதாவுக்கு அவசியமானவை. உஜூது ஐனியில்-அஃயானு காரிஜாவில் வெளியானது. ஆகவே இந்த கவனிப்பைக் கொண்டு சிருஷ்டிகளாகிறது ஹக்குதஆலாவிற்கு வேறானதாக ஆகிவிட்டது.

மற்தபாவின் புறத்தினாலான **வேற்றுமையாகிறது:-** அதுவெல்லாம் **இஃதிபாரிய்யான-கவனிப்பினாலான வேற்றுமையேயாகும்.** அதை கவனிப்பதற்கு உற்பத்தியிடமாகிறது, ஹக்குதஆலா அவைகளின் அஃயானு தாபிதாவில் வெளியானதுவேயாகும்.

**ஆனால் ஹகீகத்தின் புறத்தினாலோ அதாவது:- அந்த உஜூதின் கலப்பற்ற அந்தரங்கத்தின் புறத்தினாலோ சகலமும்** (அறிவின் சமூகத்திலுள்ளவைகளும் வெளியிலுள்ளவைகளும்) **ஹக்கு ஸுபுஹானஹுவுதஆலா அவனாகவேயாகும்.**

ஏனென்றால் அவைகள், ஷுஊன தாத்திய்யாகவோ, அல்லது அறிவின் சமூகத்திலுள்ள அஃயானு தாபிதாகவோ, அல்லது அவைகளின் நிழல்களாகவோ ஆகிறதை விட்டும் ஒழியாதே.

**(கேள்வி) இதனால்** (அதாவது:- சகலமும் ஹக்குதஆலாவே என்றதினால்) **ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா அவன் தன் தாத்தாகிய தத் சொரூபத்துடன் நஜீஸான-**

**அசுத்தமான ஸ்தலங்களிலும் இருக்கிறான் என்பது பூணுகிறதே! இது மிக்க கெட்டதும் அசிங்கமாகவும் இருக்கிறதே என்று சொன்னால்?**

**(பதில்) ஹக்குதஅலாவின் உஜூதானது நல்ல மள்ஹறுகளில் வெளியாகிறதினால் அதற்கு நன்மையில் அதிகமும் ஏற்பட்டுவிடாது. கெட்ட மள்ஹறுகளில் வெளியாவதினால் அதற்கு யாதொரு குறையும், விண்ணமும் உண்டாகி விடாது.**

**அதற்கு இரண்டு திருஷ்டானங்களுண்டு அவற்றில் ஒன்று:-**

**சூரியனுடைய ஒளியானது தூய்மையான வஸ்துவின் பேரிலும், அசுத்தமான வஸ்துவின் பேரிலும் பிரகாசிக்கின்றது. அது தூய்மையான வஸ்துவின் பேரில் விழுவதினால் அதற்கு அதிக தூய்மை உண்டாகிறதுமில்லை. கஸ்தூரி, அம்பறினால் அது மணமான வாடையை எடுத்துக் கொள்கிறதுமில்லை.**

**இன்னும் நஜீஸான-அசுத்தமான வஸ்துவின் பேரில் விழுவதினால் அசுத்தத்தில் அது உழன்று புறளவுமில்லை.**

**இரண்டாவது திருஷ்டானந்தம்:- மானிட உடம்பில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற ஆன்மாவானது, அவ்வுடம்பின் சகல அணுக்களோடுமிருந்து அதை சூழ்ந்துக் கொண்டுமிருக்கிறது. அப்படியிருப்பதுடன் அவ்வுடம்பின் நஜாஸத்தான அசுத்தத்தில் நின்றும் யாதொரு குணமும் அடையாளமும் அதை தீண்டவி;ல்லை. எனினும் அவ்வான்மா உடம்புடன் சம்பந்தப்படுவதற்கு முன் எப்படி பரிசுத்தமாகயிருந்ததோ அப்படியே அதனுடன் சம்பந்தப்பட்ட பிறகும் பரிசுத்தமாகவே இருக்கிறது.**

அதற்கு உவமானமாகிறது:- அதாவது:- சர்வ சிருஷ்டிகளும் ஒரு விதத்தில் ஹக்குதானாகவும். மறுவிதத்தில் ஹக்குக்கு வேறாகவும் இருக்கின்றன என்பதற்கு உவமானமாகிறது:- குமுழியும், அலையும் உறைந்த பனியினால் உண்டாக்கப்பட்ட பனிக் கூஜாவும் போலவாம்.

இவையாவும் ஹகீகத்தின் புறத்தினால்-சுயார்த்த பொருளின் புறத்தினால் தண்ணீர்தானாகவும், இவற்றின் (நாம ரூபங்களான) குறிப்புகளின்படி தண்ணீரின் வேறாயும் இருக்கின்றன. இங்கே உள்ள வேற்றுமையானது அங்கே உள்ள வேற்றுமையை போலவாகும்.

இன்னும் அதேபோல் கால் ஜலமும், ஹகீகத்தின் புறத்தில் ஆகாயம் தானாயும், குறிப்பின் புறத்தில் ஆகாயத்தின் வேறாயுமிருக்கிறது. கானல் ஜலமானது எதார்த்தத்தில் ஆகாயமேயாம். அது வெளியில் ஜலத்தின் ரூபமாய்-அதன் கோலத்தில் தோன்றுகிறது.

அறிந்துக் கொள்! இப்பொழுது சொல்லி வந்ததின் சாராம்சமானது:- ஒவ்வொரு வஸ்துவும் அதற்கு கவனிப்பினாலான இரண்டு உஜூதுகள் அவசியமாகும்.

அதிலொன்று:-ஹக்கான உஜூதாகும். அதுவாகிறது:- அது ஷுஊன தாத்திய்யாவாகவோ, அல்லது பரிசுத்த தாத்தின் அறிவில் அது அஃயான தாபிதாவாகவோ இருப்பதை கவனிப்பதாகும்.

இரண்டாவதாகிறது:- சிருஷ்டிhய உஜூதாகயிருக்கும், அதாவது:- பூர்வீகுமான அறிவின் சமூகத்தில் அஃயான தாபிதாவில் வெளியான தாத்தின் ஒளிகளின் நிழலாகும். அதனுடைய (அஃயான தாபிதா உடைய) கட்டளைகளும் குணபாடுகளும் சிருஷ்டியான மற்தபாக்களில் வெளியாகிருக்கின்றன.

பின்னர் நூலாசிரியர் அவர்கள் வஹ்தத்துல் உஜூதையும், அது சம்பந்தமானவைகளையும் விபரித்து முடித்த பின் வஹ்தத்துல் உஜூதுக்கு மாற்றமாக சொல்கிறவர்களுக்கு மறுப்பாக, அதன் பேரில் அறிவிக்கிற தலீல்களாகிய பிரமாணங்களை விபரிக்கத் தொடங்கி சொல்கிறார்கள்:-

**இன்னும் வஹ்தத்துல் உஜூதின் பேரில் அறிவிக்கக் கூடிய** சுருதிப் **பிரமாணங்களாகிறது:- அனேகமிருக்கின்றன.**

**ஆனால்,** சங்கையான **குர்ஆனி**ன் ஆயத்துகளி**ல்** நின்றும் விளங்கப்பட்ட அதன் பேரில் அறிவிக்கக் கூடிய பிரமாணங்களாகிறது:- அதில் **நின்றுமுள்ள**து.

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

வாகும். 'மஷ்ரிக்கும், மக்ரிபும் அல்லாஹுக்கே உடையது ஆதலால் நீங்கள் எப்பக்கம் திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் தாத்து இருக்கிறது' என்ற அல்லாஹ்தஆலாவின் திருவசனமும்.

அதாவது:- அல்லாஹ் எனும் ஜாமிஆன இஸ்முக்கு அதனுடைய தாத்திய்யான தன்ஸீஹு-ஒப்புவமையில்லாமை தரிபாடாக இருப்பதோடு-ஒப்புவமையின் சூரத்துகளில் வெளியாவது உண்டு. அதில் நின்றுமுள்ளது தான் மஷ்ரிக்குடைய சூரத்தும், மக்ரிபுடைய சூரத்தும்.

ஆதலால் நீங்கள் புலனிலான, அல்லது புத்தியினாலான முக நோக்கத்தை எப்பக்கம் செய்தாலும் அங்கு சகல வஸ்துக்களும் அதைக் கொண்டு நிற்கும்படியான ஹக்குதஆலாவின் உயர்த்தியான தாத்தின் தஜல்லியிலிருக்கிறது.

இன்னும் அதில் நின்றுமுள்ளது

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

**'நாம் அவனளவில் அவனுடைய பிராண நரம்பை விடவும் அதிகமாக நெருங்கியிருக்கிறோம்'** என்ற அல்லாஹ்வின் திருவசனமும்,

அதாவது, மனிதனளவில் அவன் யாரானாலும் சரியே நாம் அவனுடைய உறுப்புகள், இன்னும் அவனுடைய சக்திகளின் அந்தரங்கமாக இருக்கிற விதத்தில் அவனுடைய உறுப்புகளில் நின்றுமொரு உறுப்புகளாயிருக்கிற பிராண நரம்பை விடவும் அவனளவில் நெருங்கினவர்களாக இருக்கிறோம். அவன் அப்படியாகாமல் எப்படியிருப்பான்? 'அவன் கேட்கிற கேள்வியாகவும், அவன் பார்க்கிற பார்வையாகவும், அவன் பேசக்கூடிய நாவாகவும், அவன் பிடிக்கக் கூடிய கையாகவும், அவன் நடக்கக் கூடிய காலாகவும் நான் ஆகிவிட்டேன்' என்று அவன் சொல்லியிருக்கிறான்.

இன்னும் அதில் நின்றுமுள்ளதுதான்

وَهُوَ مَعَكُمْ اَيْنَمَا كُنْتُمْ

'**நீங்கள் எங்கேயிருந்தாலும் அவன் உங்களோடிருக்கிறான்'** என்ற அவனுடைய திருவசனமும்,

அதாவது:- ஹக்கு ஸுபுஹானஹு தஆலா அவனுடைய ஹுவிய்யத்துஸ்ஸாரிய்hவின் படி- சகலத்ததிலும் ஊடுருவியிருக்கிற அவனுடைய தாத்தின்படி நீங்கள் எங்கேயிருந்தாலும் அவன் உங்களோடிருக்கிறான். நீங்கள் ஷுஊனாகயிருந்தாலம் சரி அல்லது சிருஷ்டிகளான குணபாடுகளாகயிருந்தாலும் சரி அவனுடைய அறிவு உங்களைவிட்டும் பிரியாதிருப்பது போல் அவனுடைய ஹுவிய்யத்தும்-தாத்தும் உங்களைவிட்டும் பிரியாத விதமாயிருக்கிறான்.

இன்னும் அதில் நின்றுமுள்ளதுதான்

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْكُمْ وَلٰكِنْ لَّا تُبْصِرُوْنَ

'**(மரண தருவாயிலிருக்கிற) அவனிடம் நாம் உங்களைக் காண அதிக முடுகுதலாக இருக்கிறோம். ஆனால் நீங்கள் அதைப் பார்ப்பதில்லை'** என்ற திருவசனமும்.

அதாவது:- நம்முடைய ஹுவிய்யத்தின்படி அந்த மரண தருவாயிலிருப்பவனளவில் நாம் அவனுடைய உறுப்புகளாகவும், அவனுடைய சக்திகளாகவுமிருக்கிற விதத்தில் நீங்கள் அவனுடைய ஹகீகத்தில் ஒற்றுமையானவர்களாகவே இருந்தபோதிலும் நீங்கள் அவனளவில் முடுகுதலாகயிருப்பதை விடவும் நாம் அவனளவில் அதிக முடுகுதலானவர்களாகயிருக்கிறோம் ஆனால் நீங்கள் அதன் அந்தரங்கத்தைப் பார்க்க மாட்டீர்கள். ஏன் ஹுவிய்யத்தைக் கொண்டு முடுகுதலாகயிருப்பது, தொலை தூரத்தைக் கொண்டு முடுகுதலாகயிருப்பதை போன்றல்லவே.

இன்னும் அதில் நின்றுமுள்ளது ஹக்குதஆலாவின்

اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ

(முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே!) <u>**உம்மிடத்தில் (கை கொடுத்து) பைஅத்து செய்கிறவர்கள் அல்லாஹ்விடத்தில் தான் பைஅத்துச் செய்கிறார்கள். அல்லாஹ்வுடைய கையானது அவர்களுடைய கைகளின் மேலிருக்கிறது'**</u> என்ற திருவசனமும்.

அதாவது:- முஹம்மதே! ளாஹிரில் உம்மிடத்தில் பைஅத்து செய்கிறவர்கள் ஹகீகத்தில் அல்லாஹ்விடமே பைஅத்து செய்கிறார்கள் வேறல்ல. ஏன் உமக்கும் அல்லாஹுக்குமிடையில் வித்தியாசம் குறிப்பு, கண்டிப்பைக் கொணடேயல்லாதில்லையே, அல்லாஹ் உடைய கையானது, அதாவது:- 'அவன் பிடிக்கக் கூடிய கையாக ஆவேன்' என்ற அவனுடைய வசனத்தில் சைக்கினை செய்யப்பட்டதும், குறிப்புகளை விட்டும் பொதுவான அல்லாஹ்வின் கையானது அதனுடைய வெளிப்பாடுகளில் நின்றும் ஒரு வெளிப்பாடாகிய அவனின் குறிப்பான கைகளின் மேலிருக்கிறது.

இன்னும் அதில் நின்றுமுள்ளது ஹக்குதஆலாவின்

هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ

<u>**'அவன் முன்னவன், அவன் பின்னவன், அவன் வெளியானவன், அவன் உள்ளானவன், இன்னும் அவன் வஸ்துக்களடங்களையும் அறிந்தவன்'**</u> என்ற திருவசனமும்.

அதாவது:- அவன் சகல வஸ்துக்களைக் காண முந்தினவன், இன்னும் சிருஷ்டிகளான மள்ஹறுகளில் அவனுடைய வெளிப்பாடு பிந்தினவன். இன்னும் சிருஷ்டிகளெனும் உடுமானத்தை அணிந்துக் கொண்டு வெளியானவன். இன்னும் அவனுடைய சிருஷ்டிகளான மள்ஹறுகளை உண்டாக்கமுன் தனது 'பற்திய்யத்தைக் கொண்டு-ஒருமையைக் கொண்டு ஒன்றான உள்ளானவன், அவன் அந்தரங்கமான, பகிரங்கமான, வெளியான, மறைவான, பூர்வீகமான, புதிதான சகல வஸ்துக்களுக்கும் குறிப்பின் புறத்தினால் அவன் வேறாகயிருந்தாலும் ஹகீகத்தின் புறத்தினால் அவன் சகல வஸ்துவும் தானாகயிருக்கிற புறத்தில் அவன் சகல வஸ்துக்களையும் அறிந்தவனாகயிருக்கும்.

அறிந்துக்கொள்! இந்த ஆயத்தானது இரண்டு விதத்தில் தவ்ஹீதின் மேல் அறிவி;க்கின்ற பகிரங்கமான தலீலாகயிருக்கிறது.

ஒரு விதம்:- இந்த ஆயத்தின் அறபி மூல வாக்கியத்தில் 'அல்அவ்வலு' 'அல் ஆகிறு' 'அல்லாஹிறு' 'அல்பாதினு' என்று வந்திருக்கிற நான்கு இஸ்முகளிலும் 'அல்' என்னும் சொல்லை, 'சிபத்தின்' பேரில் புகுந்த 'மவ்சூலத்து' என்று ஆக்குவாயாகில் அப்போது அந்த ஆயத்திற்குப் பொருள்:- அவன் சர்வ சிருஷ்டிகளின் உஜூதுக்கும் அவனுடைய உஜூது முந்திவிட்ட முன்னவனாகும். இன்னும் அவனுடைய உஜூதானது ஆலத்தைப் போல் அவனால் உண்டாக்கப்பட்டதின் உஜூதை விட்டும் பிந்திவிட்ட பின்னவனாகும். இன்னும் அவன் ஆலமுஷ்ஷஹாதத்தும், ஆலமுல் முல்கும் போல் ஞானேந்திரியங்களுக்கு

புலப்படும்படி வெளியானவனாகும். இன்னும் பொதுவான, கட்டுப்பாடான சமட்டியான, வியட்டியான ஆன்ம, ஜீவலோகங்களென்னும் ஆலமுல் அற்வாஹுகள் போல் ஞானேந்திரியங்களுக்கு புலப்படாதபடி உள்ளானவனாகும் என்றும் ஆகிறது.

ஆகவே இந்தப் பொருள் உஜூது முத்லக்கான-கண்டிப்பு, அகண்டிப்பு இரண்டையம் விட்டும் பொதுவான உஜூது முத்லக்கான ஹக்கு ஜுபுஹானஹு வதஆலாவின் பேரில் அவன் சகல சிருஷ்டிகளின் ஹகீகத்தாயிருக்கிறான் என்ற புறத்தினாலன்றி வேறு விதத்தில் பொருந்தாது.

மற்றொரு விதம்:- இந்த 'அல்' என்ற சொல்லை மஃரிபாவாக்கிற ஹர்பு, ஹஸ்று உடைய நயத்திற்காக, கபறாகிய பயனிலையை மஃரிபாவக்குவதற்காக, கொண்டு வரப்பட்டது என்றாக்குவாயாகில் அப்பொழுது அதன் பொருள் 'அவனே முந்தினவன். அவனே பிந்தினவன். அவனே வெளியானவன். அவனே உள்ளானவன்' என்பதாம்.

அதாவது:- முந்தினவனாகயிருப்பதும், பிந்தினவனாகயிருப்பதும், வெளியானவனாகயிருப்பதும், உள்ளானவனாகயிருப்பதும் எல்லாமுமே உஜூது முத்லக்காகயி ஹக்கு தஆலாவை விட்டம் அவனல்லாதவற்றளவில் கடக்காத விதத்தில் அவனிலேயே கட்டுண்டதாகயிருக்கும். ஏன் அவனல்லாத்தது, அறவே மவுஜூதாக-உளதானதாகயில்லையே. நேர்மையாக விளங்கிக் கொள்!

இன்னும் அதில் நின்றுமுள்ளது

وَفِيْٓ اَنْفُسِكُمْ اَفَلَا تُبْصِرُوْنَ

**'உங்களுடைய நப்ஸுகளிலேயேயிருக்கிறது. நீங்கள் ஆராய்ந்தறிய வேண்டாமா?'**

என்ற ஹக்குதஆலாவின் திருவசனமும்

அதாவது:- வஹ்தத்ததுல் உஜூதின் பேரில் அறிவிக்கக் கூடிய தலீல்கள் உங்களுடைய நப்ஸுகளிலேயேயிருக்கிறது. நீங்கள் ஆராய்ந்தறிய வேண்டாமா?

இன்னும் அதில் நின்றுமுள்ளது அல்லாஹுதஆலாவின்

وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ

**'நபியே! என்னை குறித்து என்னுடைய அடியார்கள் உம்மை கேட்பார்களேயானால் நான்** அவர்களுக்கு அறிவைக் கொண்டு சமீபமாகயிருப்பதை போல் ஹுவிய்யத்தை-ஹகீகத்தை கொண்டு **சமீபமாகயிருக்கிறேன்** (என்று நீர் சொல்லும்.)என்ற திருவசனமும்.

இன்னும் ஹக்குதஆலாவின்

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى

'(நபியே! காபிரீன்கள் மீது மண்ணை) நீர் எறிந்தபோது-வெளியில் உம்மில் நின்றும் எறிகிற கோலம் உண்டானபோது நீர் எறியவில்லை. எனினும் உம்முடைய உள்ளாகவும், அந்தரங்கமாகவுமிருக்கிற அல்லாஹ் எறிந்தான்'என்ற திருவசனமும்.

இன்னும் அதில் நின்றுமுள்ளது ஹக்குதஆலாவின்

وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيْطًا

'அல்லாஹுதஆலா சகலத்திலும் ஊடுருவிய அவனுடைய ஹுவிய்யத்தின்-தாத்தின் புறத்தினால் அறிவிலுள்ள அல்லது வெளியிலுள்ள சகல வஸ்துக்களையும், அந்த ஹுவிய்யத்தை விட்டும் ஆலத்திலுள்ள அணுக்களில் நின்றும் ஒரு அணுவும் ஒழியாது என்ற விதத்தில் சூழ்ந்தவனாக ஆகி விட்டான்' என்ற திருவசனமும்.

இன்னும் இவையல்லாத மற்ற ஆயத்துகளும்.

இன்னும் அறிந்துக் கொள்! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய திருவாக்கியங்களில் கருத்துக்களில் நின்றும் விளங்கப்பட்ட வஹ்தத்துல் உஜூதின் பேரில் அறிவிக்கக் கூடிய தலீல்களாகிறது:- அதில் நின்றுமுள்ளது:- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்,

اَصْدَقُ كَلِمَةٍ قَالَتْهَا الْعَرَبُ كَلِمَةُ لُبَيْدٍ اَلَا كُلُّ شَيْءٍ مَا خَلَا اللّٰهِ بَاطِلٌ

அறபுகள் சொல்லிய வாக்கியங்களில் மிகவும் உண்மையான வாக்கியம் லுபைது கவிஞரின் அறிந்துக் கொள்! அல்லாஹ் அல்லாத வஸ்துகுள் அடங்கலும் பாதிலாகும்-பொய்யாகும் என்ற வாக்கியமாகும்' என்ற திருவசனம்.

அதாவது அல்லாஹ்வின் உஜூதும் அவனுடைய ஹுவிய்யத்தும் அதில் ஊடுருவுவதை விட்டும் ஒழிந்ததாக, வஸ்துக்கள் உள்ளதென கற்பித்துப் பார்க்கப்படுமானால் அது தரிபட்டதல்லாத்ததாகவும், நீங்கிப்போனதாகவுமேயாகும். மேலும் அது கலப்பற்ற இல்லாமையாகவேயாகும். அறிவிலும் உளதாக ஆகாது வெளியிலும் உளதாக ஆகாது ஏன்? மும்கினுக்கு-சிருஷ்டிக்கு ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலாவின் உஜூது ஒலிப்பதினாலெயே அல்லாது அதற்கு அறவே உஜூது இல்லை என்பது அஹ்லுல்லாஹ்களடத்தில் அறியப்பட்ட விஷயமாகும்.

فَمَاذَا بَعْدَ الْحَقِّ اِلَّا الضَّلَالُ

மெய்ப்பொருளுக்கு (அல்லாஹ்வின் உஜூதுக்கு) அப்பால் பொய்யே அல்லாதில்லை என்று அல்லாஹ் தஆலா சொல்லியது போல்.

**இன்னும்** அதில் நின்றுமுள்ளது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

اِنَّ اَحَدَكُمْ اِذَا قَامَ اِلَى الصَّلٰوةِ فَاِنَّمَا يُنَاجِيْ رَبَّهُ فَاِنَّ رَبَّهُ بَيْنَهُ وَبَيْنَ الْقِبْلَةِ

**உங்களில் ஒருவன் தொழுகைக்கு நின்றானாகில் அவன் தன் றப்பிடத்தில் வசனிக்கிறான். ஆகவே அவனுடைய றப்பு, அவனுக்கும் கிபுலாவுக்குமிடையிலிருக்கிறான் என்ற திருவாக்கியமும்.**

அதாவது:- உங்களில் ஒருவன் தொழுகைக்கு நின்றானாகில் அவன் நம்பி வணங்கக் கூடிய றப்பிடத்தில் வசனிக்கின்றான். அவன் நம்பிய றப்பானவன் ஹகீகத்தின் புறத்தில் இந்த கோலத்தையும் தலத்தையும் விட்டும் பரிசுத்தமானவனாகயிருக்கும்.

எனினும் தஜல்லியின்-வெளிப்பாட்டின் புறத்தினால் அவன் தொழுகிறவனுக்கும் கிப்லாவுக்குமடையிலிருக்கின்றான்.

**இன்னும்** அதில் **நின்றுமுள்ளது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்** சிபாத்து பஷரிய்யா-மனித இலட்சணங்கள், அல்லாஹுதஆலாவின் முத்லக்கான-பொதுப்படையான இலட்சணங்களில் பனாவாகிற-நாஸ்தியாகிற குற்புன்னவாபிலின் விபரத்தில் **அல்லாஹ் தஆலாவை தொட்டும் சொல்லிய ஹதீது குத்ஸியில்,**

لَايَزَالُ عَبْدِيْ يَتَقَرَّبُ اِلَيَّ بِالنَّوَافِلِ حَتّٰى اُحِبَّهُ فَاِذَا اَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِيْ يَسْمَعُ بِهِ وَبَصَرَهُ الَّذِيْ يَبْصُرُ بِهِ وَيَدَهُ الَّتِيْ يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِيْ يَمْشِيْ بِهَا

**'என்னுடைய அடியான் நபிலான இபாதத்துகளைக் கொண்டு என்னளவில் முடுகுதலாகிறவனாக நீங்காமலாகி விடுவான். நான் அவனை உகக்கிற வரையிலும், நான் அவனை உகந்து விட்டேனேயானால் அவன் கேட்கிற கேள்வியாகவும், அவன் பார்க்கிற பார்வையாகவும், அவன் பிடிக்கிற கையாகவும், அவன் நடக்கிற காலாகவும் நான் ஆகி விடுவேன்' என்ற வாக்கியமும்.**

அதாவது:- என்னுடைய அடியான் என்னளவில் ஏவப்பட்ட, அல்லது இப்திதாஇய்யத்தான-நூதமான சிந்தனைகளாகிய, அல்லது தியானங்களாகிய சுன்னத்தான அமல்களைக் கொண்டு முடுகுதலாகிறவனாக நீங்காமலாகி விடுவான், நேசித்த அடியானை விட்டும் நேசிக்கப்பட்டவனல்லாதவைகளை எல்லாம் கரித்து விடும்படியான தாத்திய்யான நேசமாக 'நான் அவனை நேசிக்கும் வரையிலும், அந்த விதமாக 'நான் அவனை நேசித்தேனேயானால் அவன் கேட்கிற கேள்வியாகவும், அவன் பார்க்கிற பார்வையாகவும், அவன் பிடிக்கிற கையாகவும், அவன் நடக்கிற காலாகவும், நான் 'பில் குவ்வத்தில்-அமைப்பில் இருந்ததைப் போல் பில் பிஃலில்-வெளியிலும் ஆகி விடுவேன்.

<u>இன்னும்</u> அதில் நின்றுமுள்ளது <u>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹதீது குத்ஸியில்</u>

إِنَّ اللهَ تَعَالٰى يَقُوْلُ مَرِضْتُ فَلَمْ تَعُدْنِيْ وَجُعْتُ فَلَمْ تَطْعِمُنِيْ وَسَلْتُكَ فَلَمْ تُعْطِنِيْ (الى آخره)

<u>நிச்சயமாக அல்லாஹுதஆலா சொல்வான்:- நான் வியாதிஸ்தனாகயிருந்தேன். என்னை சுகம் விசாரிக்க வந்தாயில்லை. நான் பசித்திருந்தேன். எனக்கு நீ உணவளித்தாயில்லை. நான் உன்னிடம் கேட்டேன். நீ எனக்கு கொடுத்தாயில்லை. ஹதீது கடைசி வரையிலும்' என்ற திருவசனமும்.</u>

அதாவது:- அல்லாஹுதஆலா 'கியாம நாளில் தன் அடியானிடத்தில் சொல்வான், 'நான் சிருஷ்டியான மற்தபாவில் இறங்கின புறத்தில் 'நான் வியாதியஸ்தனாக இருந்தேன் என்னை சுகம் விசாரிக்க வந்தாயில்லை. நான் பசித்திருந்தேன். எனக்கு உணவளித்தாயில்லை. நான் உன்னிடம் கேட்டேன் நீ எனக்கு கொடுத்தாயில்லை' ஹதீது கடைசி வரையிலும்.

<u>இன்னும்;</u> அதில் நின்றுமுள்ளது <u>திர்மிதி அவர்கள் ரிவாயத்து செய்த நீண்டதொரு ஹதீதில்</u>

وَالَّذِيْ نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَوْ اَنَّكُمْ تَدَلَّيْتُمْ بِحَبْلٍ اِلَي الْاَرْضِ لَهَبَطَ عَلَى اللهِ ثُمَّ قَرَاَ عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْئٍ عَلِيْمٌ

<u>'முஹம்மதுடைய ஆன்மா எவன் கைவசமிருக்கிறதோ அந்த ஆண்டவனின் பேரில் ஆணையாக, நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தைக் கயிற்றுடன் பூமியில் இறக்குவீர்களேயானால் அது அல்லாஹ்வின் மேல் விடும். பின்னர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'அவனே முன்னவன். அவனே பின்னவன். அவனே வெளியானவன். அவனே உள்ளானவன். அவன் சகல வஸ்துகளையும் அறிந்தவனாவாகும்' என்ற ஆயத்தை ஓதினார்கள் என்றதும்.</u>

<u>இன்னும் இவைகளல்லாத</u> வஹ்தத்துல் உஜூதின் பேரில் அறிவிக்கக் கூடிய <u>ஸஹீஹான ஹதீது</u>களில் வந்தவை<u>களும்.</u>

அறிந்துக் கொள்! <u>வஹ்தத்துல் உஜூதின்பேரில் அறிவிக்கக் கூடிய அல்லாஹ்வை அறிந்த ஆரிபீன்களுடைய வாசகங்களாகிறது:- அவை மட்டுப்படுத்தி எல்லைக்குள் கொண்டு வரமுடியாத விதத்தில் அனேகமனேகமாகயிருக்கிறது.</u>

**இந்த வார்த்தை மிகைப்படுத்தி பேசியதாகும். அது கொண்டு கருத்து:- அவை அனேகமிருக்கிறது என்பதுவேயாகும். அல்லது அவைகளை ஞாபகத்திலும் மனனத்திலும் கொண்டு வரமுடியாதென்பதை பற்றிய சயிக்கினையாகும்.**

**அல்லது வழக்கத்தில் மட்டுப்படுத்த முடியாது என்பதாகும்.**

**அப்படிக்கில்லையென்றால் ஆரிபீன்களான இமாம்கள் அனைவர்களுடைய வார்த்தைகளும், உலகத்தின் இனத்திலுள்ளதும். சிருஷ்டியும், தீர்மானதுவுமேயாகும்.**

**ஆகையினால் புத்தியில் எப்படி மட்டுத்திட்டத்தில் கொண்டு வர முடியாது?**

இதனாலேயே அவைகளை சொல்லிக் காட்டவில்லை. நீ விரும்பினால் அவர்களுடைய பிரதிகளை நோட்டமிட்டுப் பார். இன்ஷாஅல்லாஹ் பெற்றுக் கொள்வாய்.

**தேட்டமுள்ள தாலிபே!** குற்புன்னவாபிலிலும், குற்புல் பறாயிலிலும் முன் சொல்லப்பட்ட விதப்படி **அல்லாஹு தஆலா அளவில் சேர்வதை நீ நாடினாயானால் முதலாவதாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சொல்லாலும், செயலாலும், வெளிரங்கத்திலும், உள்ரங்கத்திலும் பின்பற்றி நடப்பதை பற்றிப் பிடித்துக்கொள்!**

அதாவது:- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டும் வந்த அவர்களின் சொல்லிலும் அவர்களின் செயலிலும் அவர்களை பின்பற்றி நடப்பதைக் கொண்டு உன் நப்ஸை கட்டுப்படுத்திக் கொள்! உன்னுடைய வெளிரங்கமான உறுப்புகளையும் உள்ரங்கமான உறுப்புகளையும் அதில் நின்றும் தேடப்பட்டதில் புழங்கிக் கொள்! உன்னுடைய வெளிரங்கம் உள்ரங்கத்திற்கு மாற்றமாகவும் உள்ரங்கம் வெளிரங்கத்திற்கு மாற்றமாகவும் ஆவதை பயந்துக் கொள்! நிச்சயமாக அது உன்னுடைய அமலை அழித்து விடக் கூடியதும், ஹக்குதஆலாவை விட்டும் தூரப்படுத்தக் கூடியதுமாகும்.

**இரண்டாவதாக கலிமத்துத் தய்யிபாவின் பொருள் தானாகவே இருக்கிற வஹ்தத்துல் உஜூதின் முறாக்கபாவை** (அதற்கு) **உழுவு இருக்க வேண்டுமென்ற விதியில்லாமல்** உழுவு **இருந்தால்** அது இல்லாமல் நீ செய்வதை விடவும் **உத்தமம் தான். இதர நேரமல்லாமல் இன்ன நேரத்தில் தான் செய்ய வேண்டுமென்றில்லாமலும், இன்னம் முறாக்கபாவில் மூச்சு புகுவதையும், புறப்படுவதையும் கவனிக்காமலும், கலிமத்துத் தய்யிபாவின் ஹருபுகளான அட்சரங்களை நோட்டமிடாமலம் செய்!**

**எனினும்** துவித்தை நீக்கி அத்வைதத்தை நிலை நிறுத்துவதாகிய **பொருளை மட்டுமேயல்லாது** (வேறொன்றையும்) **நீ நோட்டமிடக் கூடாது. நீ நின்றவனாய், அல்லது உட்கார்ந்தவனாய், நடக்கிறவனாய், அல்லது படுத்திருக்கிறவனாய், (தொழில்) உசும்பினவனாய், அல்லது** (சும்மா) **ஒடுங்கினவனாய், உண்ணுகிறவனாய் அல்லது குடிக்கிறவனாய்** நீ இருக்கக் கூடிய இன்னும் இவையல்லாத மட்டிட முடியாத உன்னுடைய **சகல நிலைமைகளிலும்,** இப்பொழுது சொன்னது அனைத்தைக் கொண்டும் கருத்தாவது:- கலிமத்துத் தய்யிபாவினுடைய பொருளை எல்லா நிலைமைகளிலும் கவனிப்பதின் பேரில் தூண்டுவதுவேயாகும். அதை சொல்வதின் பேரிலல்லை. ஏன் அது திண்பது, குடிப்பது போன்ற நேரங்களில் சாத்தியமாகாத்ததாகும்.

முறாக்கபா செய்யும் முறையாவது:- முதலாவதாக நீ உன்னுடைய 'அன்னிய்யத்' தை நீக்க வேண்டும். நேஸ்து அன்னிய்யதமா-லா அன்னிய்த்தீ-என்னுடைய அன்னிய்யத்து இல்லை என்று இப்படி நீ நினைப்பது போல்.

'அன்னிய்யத்து' என்பது:- உன்னுடைய ஹகீகத்தும், அந்தரங்கமும் ஹக்குதஅலாவுக்கு வேறாகயிருப்பதற்கு சொல்லப்படும்.

ஙைரிய்யத்தை உணர்த்தும்படியான இந்த அன்னிய்யத்தையே அல்லாது (வேறொன்றையும்) நீ நீக்க வேண்டாம். அதுதான் 'லாயிலாஹ' என்று நீ சொல்வதுவின் பொருளாகும்.

பின்னர், இரண்டாவதாக உன் அகத்தில்-கல்பில் ஹக்குஸுபுஹானஹுவதஆலாவை-அவனுடைய உஜூதை நீ தரிபடுத்துவதாகும்.

'மகற் ஹக்கஸ்து'-இல்லாஹு-எனினும் ஹக்காகயிருக்கும் என்று நீ நினைப்பது போல். அதுகொண்டு கருத்தாவது:- நீ உன்னுடைய நிலைமைகளில் நின்றும் எல்லா நிலைமைகளிலும் ஹகீகத்தின் புறத்தினால் நான் அல்லாஹுக்கு வேறு இல்லை, எனினும் நான் அவனு என்று நீ நினைத்துக் கொள்வதாகும்.

இன்னும் உன்னுடைய ஹகீகத்தும் அந்தரங்கமுமாகயிருக்கிற ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவின் ஹுக்மை உன்னுடைய சூரத்திலும் சகல உலகத்தின் சூரத்திலும் வெளியானதாக ஆக்கிக் கொள்வதாகும். அதுதான் 'இல்லல்லாஹ்' என்று நீ சொல்வதுவின் பொருள்தானாகும்.

(கேள்வி) எப்போது உஜூது ஒன்றேதான் அதன் வேறு என்பதில்லை என்று தீர்ந்து விட்டதோ பின்பு நீக்கிறபோது எந்த வஸ்துவை நீக்கப்படுகிறது? தரிபடுத்தும்போது எந்த வஸ்துவை தரிபடுத்துகிறது? என்று நீ கேட்பாயானால்,

(பதில்) நான் சொல்கிறுன்:- சிருஷ்டிக்கு ஜனித்த வேற்றமையின் சந்தேகத்தையும் நீக்கப்படுகிறது. இன்னும் துவித்தின் சந்தேகத்தையும் நீக்கப்படுகிறது.

இந்த சந்தேகமாகிறது பாதிலாகும்:- பொய்யாகும். இதற்கு யாதொரு ஊண்டுதலான சுயமுமில்லை.

ஆகவே தாலிபே! நீ முதலாவதாக இந்த பொய்யான வஹ்மை-சந்தேகத்தை உன்னை விட்டும் நீக்குவதும், பின் இரண்டாவதாக உன்னுடைய கல்பில் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவை தரிபடுத்துவதும் உனக்கு அவசியமாகும்.

தனது அன்னியத்தை நீக்கி தன் பன்மையை அழித்த தாலிபானவனே! உன் பேரில் அல்லாஹுதஆலாவின் அருளினால் ஹால்-பரவச நிலைமை மிகைத்து விடுமானால்,

அதாவது:- அல்லாஹுதஅலாவின் அருள் முதலாவதாக உன்னை உன்னை விட்டும், இன்னும் அவனல்லாத சகல சிருஷ்டிகளையும் விட்டு உரிந்து நீ ஹக்குதஆலாவை காட்சியாக

காண்கின்ற மட்டில் உன் கல்பின் பேரில் வஹபிய்யான வாரிது-நன் கொடையான அருள், மிகைத்து விடுமானால்,

**அதாவது:- சகல சிருஷ்டிகளின் உணர்வையும் விட்டும். உன் தன்னையும் கூடி விட்டும் உன்னை உரிந்து விடுகிற விதத்தில் உன் பேரில் ஹக்கு தஆலாவின் ஷுஹுது மிகைத்து விடுமானால்** அப்போது வேற்றுமையையும், துவிதத்தையும் தேடும்படியான **அல்லாஹ் அல்லாத வஸ்துக்களில் நின்றுமுள்ளதுவாகிய,**

**உன்னுடைய வஹ்மிய்யான-** சந்தேகாஸ்பதமான **அன்னிய்யத்தை நீக்குகிறதின் பேரில் நீ சக்தி பெற மாட்டாய்.**

அதுவாகிறது:- ஹக்குதஆலா உன் கல்பு கண்ணை விட்டும் பஷரிய்யத்தின் திரையை- மனித பண்பெனும் திரையை நீக்கிவிட்டானேயானால் சிருஷ்டிகளான வஸ்துகளின் வெளிரங்கங்களை முன்பு உன் ஊனக் கண்ணால் பார்க்கப்பட்டதாக கண்டதை போல் அவைகளின் உள்ரங்கங்களான ஷுஊனு தாத்திய்யாவையும், இன்னும் அறிவிலிருந்த அஃயானு தாபிதாவையும் ஹக்குதஆலாவின் தாத்தில் வெளியானதாக பார்ப்பாய் என்ற விதத்திலாகும்.

மேலும் நீ நீக்குவதைக் கொண்டு உன் நபுஸூம் நீங்கிவிடுமானால் அந்நேரத்தில் **உன்னில் ஹக்கு ஸுபுஹாஹுவதஆலாவை** மட்டும் **தரிபடுத்துவது அல்லாது (வேறொன்றும்) எஞ்சியிராது.**

**அ(ப்படிதரிபடுத்து)து குறிப்புகளில் நின்றுமொரு குறிப்பான தரிப்படுகிற ஹுக்மைக் கொண்டல்ல. ஏன் அதுவும் அல்லாஹ் அல்லாதவைகளில் நின்றுமுள்ளதாகும். எனினும் தரிபடுத்துவதினால் உண்டான ஹுக்மாகிறது:- அஃது ஹக்குதஆலாவை ஷுஹுது செய்வதுவாகும்.**

**ஏனென்றால் வஹ்மிய்யான வேற்றுமை, துவக்கத்தில் உன்னுடைய அறிவிலும், கொள்கையிலும் இல்லாதிருந்ததைப் போல் உன்னுடைய ஹாலிலும், காட்சியிலும், அநுபோகத்திலும் இல்லாமலாகிறதற்காகவும் இன்னும் ஹக்கு ஸுபுஹானஹுவதஅலா உன் கவனத்திலும், காட்சியிலும் தரிபடுவதற்காகவேயல்லாது நீ உன்னுடைய அன்னிய்யத்தை இல்லாமலாக்கவில்லை.**

**சந்தேகமில்லாமல் நிச்சயமாக ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலாவின் காட்சி உன் பேரில் மிகைத்து விடுமானால், எதார்த்தத்தில் தரிபாடாகயில்லா ஹகீகிய்யான மெய்யான வஹ்மிய்யான கைரிய்யத்து உன்னுடைய விஜ்தானிலும், அநுபோகத்திலும் இல்லாமலாகிவிடும். மேலும் உன் கவனத்தில் இஃதிபாரிய்யான-கவனிப்பினாலான வேற்றுமையும் கூட இல்லாமலாகி விடும். அது எதார்த்தத்தில் தரிபாடானதாகயிருந்தாலும் சரி.**

**இதற்கு பின்னால் உன்னுடைய அன்னிய்யத்தை நீ இல்லாமலாக்குவாயானால் தஹ்ஸீலுல் ஹாஸில்-உண்டானதை உண்டாக்குவது (அதாவது:-இல்லாமல் போன கைரிய்யத்தை திரும்ப இல்லாமலாக்குவது) பூணும். அது அசம்பாவிதமாகும்.**

**ஆகையினால் இதற்கு பின்னால் நீ உன்னுடைய வஹ்மிய்யான அன்னிய்யத்தை இல்லாமலாக்குவதற்கு சக்தி பெறாதிருப்பது அவசியமாயிற்று.**

**மேலும் அன்னிய்த்தை இல்லாமலாக்குவதானது ஸல்பிய்hன ஹுக்முகளில் நின்றுமொரு ஸல்பிய்யான ஹுக்குமாகவும்- இல்லாமலாக்குகிற கட்டளைகளில் நின்றுமொரு இல்லாமலாக்குகிற கட்டளையாகவும், இன்னும் சிருஷ்டியான குறிப்புகளில் நின்றுமொரு குறிப்பாகவுமிருக்கிறதே.**

**ஆகவே அது அல்லாஹ் அல்லாதவைகளில் நின்றுமுள்ளதாகும்.**

**சந்தேகமில்லாமல் ஹக்கு ஸுபுஹானஹுவதஅலாவின் காட்சி உன்பேரில் மிகைத்து விடுமானால் உன் கவனத்தில் அல்லாஹ் அல்லாத்தது தரிப்படாது.**

**ஆகவே அல்லாஹுதஆலா அல்லாத்ததுவாகயிருக்கிற உன்னுடைய அன்னிய்யத்தை இல்லாமலாக்க நீ சக்தி பெற மாட்டாய்.**

முவஹ்ஹிதீன்களே! அல்லாஹுதஆலா நபி அவர்களின் பெருமையின் பொருட்டினால் எமக்கும் உங்களுக்கும் நாடுகிறவனுக்கு அதற்கு பின்னால் ஒரு மகாமுமில்லையே அப்படியான இந்த மகாமை தந்தருள்வானாக!

**அல்லாஹுதஆலா அவர்கள் பேரில் இன்னும் அவர்களின் சங்கையான கிளைஞர்கள், தோழர்கள் பேரிலும் சலவாத்தும் ஸலாமும் சொல்வானாக!**

**அத்துஹ்பத்துல் முற்ஸலாவின் முடிவுரை.**

بَدَي الْحَقُّ وَتَجَلّٰى لِسِرِّ الْعَارِفِيْنَ وَسِرِّنَا

بِحَيْثُ لَمْ يَبْقَ شُعُوْرٌ بِكُلِّ مَاسِوَاهُ لَنَا

حَتّٰى نَفْسِنَا فَحَصَلَ الْفَنَاءُ وَفَنَاءُ فَنَائِنَا

هٰذَا السَّيْرُ فِي اللهِ تَمَّ بِرَسُوْلِ اللهِ لَا بِنَا

**ஹக்குதஆலா ஆரிபீன்களுடைய ஸிற்றிலும், எம்முடைய ஸிற்றிலும் தோன்றி வெளியானான்.**

இங்கு 'ஸிற்று' என்பது கொண்டு கருத்து:- றூஹுக்கு அகமாகிய 'றூஹுல் குத்ஸு' ஆகும்.

**எம்மில் அவனல்லாத்ததைப் பற்றிய உணர்வும் எம்முடைய நபுஸைப் பற்றிய உணர்வும் கூட எஞ்சியிருக்கவில்லை என்ற விதத்தில். 'ஆகையினால் பனா'**-சிபாத்தில் மாய்வதும், இன்னும் 'பனாவுல் பனா'தாத்தில் மாய்வது**வும் உண்டாகிவிட்டது.**

**இந்த ஸய்று குபில்லாஹ்-அல்லாஹ்வில் நடப்பதுவானது ரஸூலுல்லாஹி அவர்களி**(ன் பொருட்டி)**னாலே பூரணமானது. எம்மைக் கொண்டில்லை.**

அறிந்துக்கொள்! ஸய்றுல் பாதினாகிறது-அகமிய நடையாகிறது:- ஆறு வகைகளாகும்.

1.அதிலொன்று:- அஸ்ஸய்று லில்லாஹி-அல்லாஹ்வுக்காக நடப்பதாகும்.

அதுவாகிறது:- அறியாமையில் நின்றும் அறிவளவில் நடப்பதாகும்.

2. இரண்டாவது:- அஸ்ஸய்று இலல்லாஹி-அல்லாஹ் அளவில் நடப்பதாகும்.

அதுவாகிறது:- அறிவிலிருந்து அமலளவில் நடப்பதாகும்.

3. மூன்றாவது:- அஸ்ஸய்று குபில்லாஹி- அல்லாஹ்வில் நடப்பதாகும்.

அதுவாகிறது:- (அவனில்) பனாவாகிறதாகும்-மாய்வதாகும்.

4. நான்காவது:- அஸ்ஸய்று மினல்லாஹி- அல்லாஹ்வில் நின்றும் நடப்பதாகும்.

அதுவாகிறது:- மஹ்விலிருந்து ஸஹ்வளவில்-அழிவிலிருந்து தெளிவளவில் மீழ்வது கொண்டு பகாவாகும்-நிலைப்பதாகும்.

5. ஐந்தாவது:- அஸ்ஸய்று பில்லாஹி-அல்லாஹ்வைக் கொண்டு நடப்பதாகும்.

அதுவாகிறது:- அல்லாஹ் உடைய சிபத்துகளையும், அஸ்மாக்களையும் கொண்டு பூணுவதாகிய பகாவுல் பகாவாகும்-நிலைப்பிலும் நிலைப்பாகும்.

6. ஆறாவது:- அஸ்ஸய்று மஅல்லாஹி-அல்லாஹ் உடன் நடப்பதாகும்.

அதுவாகிறது:- மேலுலகத்திலும், கீழுலகத்திலும் ஆட்சி செய்வதாகும்.

اَيْضًا عَسَي اللهُ اَنْ يَجْعَلَنِيْ مُشْعِرًا بَعْدَ فَنَائِنَا

بِتَعَيُّنِيْ مَعَ شُعُوْدِ الْحَقِّ فَحَصَلَ بَقَائُنَا

ثُمَّ يَجْعَلُ جَوْلاَبًا فِيْ مَرَاتِبِ الشُّهُوْدِ لَنَا

بِغَيْرِ رَسُوْلِ اللهِ لَا اَتَوَسَّلُ فِى جَوْلَائِنَا

மேலும் அல்லாஹுதஆலா எம்முடைய பனாவிற்குப் பிறகு ஹக்குதஆலாவை ஷுஹுது செய்வதுடன் என்னுடைய குறிப்பை-நான் எனும் குறிப்பை உணர்ந்தவனாகவும், என்னை ஆக்கப்போதும் அப்போது எம்முடைய 'பகா' உண்டாகிவிட்டது-எமக்கு 'பகா' உண்டாகி விடும்.

பின்பு எமக்கு ஷுஹுதுடைய மற்தபாக்களில் (காட்சி நடையில்) வேகமான ஓட்டத்தை ஆக்கவும்-தரவும் போதும் எம்முடைய ஓட்டத்தில் நான் றஸூலுல்லாஹ் அல்லாதவரிடம் சிபாரிசு தேட மாட்டேன்.

اَيْضًا لِلْعَارِفِ سِرٌّ بَدٰى عَلٰى قَلْبِهِ وَقَلْبِنَا

فِيْهِ لَذَّةٌ عَظِيْمَةَ لاَيُمْكِنُ بَيَانُهَا لَنَا

اِنَّ عِرْفَانَ الْحَقِّ مُوْجِبٌ لِكَلَالِ لِسَانِنَا

لٰكِنْ وَاللهِ اِنَّهُ بِرَسُوْلِ اللهِ لَابِنَا

மேலும் ஆரிபுக்கு ஒரு இரகசியம் உண்டு. அது அவருடைய கல்பிலும், இன்னும் எம்முடைய கல்பிலும் வெளியாயிற்று. அதில் வலுப்பமான சுகானந்தமுண்டு. அதை விபரிக்க எம்மால் முடியாது. ஹக்குதஅலாவை அறிந்ததுதான் எம்முடைய நாவை(ஒன்றும் சொல்வதற்கில்லாமல்) மழுக்கி விட்டது.

ஆனால் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அது ரஸூலுல்லாஹ்வைக் கொண்டேயானது எம்மைக் கொண்டல்ல.

اَيْضًا لَقَدْ كَانَتِ الْوَحْدَةُ غَايَةَ الْعُرُوْجِ لِنَبِيْنَا

بِهَا ظَهَرَ الْحَقُّ فِى الْعَالَمِ كُلِّهِ وَفِيْنَا بُطُوْنُهَا

مَرْتَبَةُ اَحَدِيَّةٌ لَا فِيْهَا تَعَيُّنَنَا

فِيْهَا تَحَيَّرَتْ عُقُوْلُ الْبَرِيَّةِ وَكَشْفُنَا

மேலும் வஹ்தத்தின் மர்தபாவானது, எம்முடைய நபி அவர்களின் மிஃறாஜின்-ஏற்றத்தின் கடைசி முடிவாக ஆனது. அதைக் கொண்டுதான் ஹக்குதஆலா உலகமடங்களிலும் வெளியானான். எம்மில் அதன் அகமியமுண்டு. அஹதிய்யத்துடைய மர்தபாவாகிற அதில் எம்முடைய குறிப்புகளில்லை. அதில் சிருஷ்டிகளின் புத்திகளும், எம்முடைய ஷுஹூதும் தட்டழிந்து விட்டது.

اَيْضًا لَقَدْ تَجَلّٰى صِفَاتُ الْحَقِّ عَلٰى نَبِيِّنَا

كُلٌّ مِنْهَا بِوَصْفِ الْمَجْمُوْعِ بِلَا شَكِنَا

مَقَامُ اَوْ اَدْنٰى اِخْتِفَاءُ شُعُوْرِ نَبِيِّنَا

فِيْ سَطْوَةِ وُجُوْدِ الْحَقِّ هٰذَا تَحْقِيْقُنَا

மேலும் சந்தேகமில்லாமல் ஹக்குதஆலா உடைய சிபாத்துகள் ஒவ்வொன்றும் சம்பூரணமான விதத்தில் எம்முடைய நபி அவர்களில் வெளியானது. 'அவ் அத்னா' என்ற மகாம் நம்முடைய நபி அவர்களின் உணர்வு, ஹக்குதஆலாவின் உஜூதின் அதிகாரத்தின் கீழ் மறைந்து போகும் தானமாகும். இதுதான் எம்முடைய திடமான நம்பிக்கையுமாகும்.

اَيْضًا لَقَدْ جعَلَ اللّٰهُ جَوْلَانًا لِقَلْبِ نَبِيِّنَا

فِيْ مَرَاتِبِ الشُّهُوْدِ لَاكَمِثْلِهٖ جَوْلَانِنَا

وَاللّٰهِ لَوْ اُعْطِيَ مِثْلُ ذَالِكَ لِاَحَدٍ مِنَّا

لَمَاتَ بِالْفَوْرِ لِعَدَمِ الْاِسْتِعْدَادِ عَنَّا

அமலும் அல்லாஹுதஆலா நம்முடைய நாயகத்தின் கல்புக்கு ஷுஹூதுடைய மர்தபாக்களில் ஓட்டத்தைக் கொடுத்தான். ஆனால் நம்முடைய ஓட்டம் அவர்களுடைய ஓட்டத்தைப் போன்றில்லை. அல்லாஹ்வின் ஆணையாக அதைப்போன்று எம்மில் யாருக்காவது கொடுக்கப்பட்டால் (அதை ஏந்துக் கொள்ள) அருகதையில்லாததினால் உடனே அவர் மவ்த்தாகி விடுவார்.

هٰذَا مَاجَرٰي عَلٰى لِسَانِيْ فِيْ عِلْمِ الْحَقَائِقِ مِنَ الْكَلِمَاتِ الّتِيْ هِيَ كَالشِّعْرِ

**இதுதான் ஹகாயிகுடைய இல்மில் என் நாவில் நடந்த கவிகளைப் போன்ற வசனங்களாகும்.**

وَاَمَّا مَا رَأَيْتُهُ فِيْ كِتَابِ بَعْضِ الْمُحَقِّقِيْنَ مِنْ عَقَائِدِ الصُّوْفِيَّةِ فَهٰذِهٖ

**அறிந்துக் கொள்! முஹக்கிகீன்களில் சிலருடைய நூல்களில் நான் பார்த்த சூபிய்யாக்களின் கொள்கைகளாகிறது இதுவாகும்:-**

صوفیاں را با عقائد علماء ظاہر ہیچ مخالفت
نیست مگر در ربط عالم با حق

சூபிய்யாக்களுக்கு ளாஹிற் உலமாக்களுடைய அகீதாக்களுடன் அறவே விதர்ப்பமில்லை. ஆனால் ஆலத்திற்கு ஹக்குதஆலா உடனான சம்பந்தத்திலேயல்லாது.

چنانکه علماء ظاہر ربط ذات حق باعالم
ربط ایجاد مید هندبه تباین حقیقتین

ளாஹிறு உலமாக்கள் ஹக்குதஆலாவின் ஹகீகத்து, ஆலத்துடைய ஹகீகத்து ஆகிய இரண்டு ஹகீகத்துகளுக்கிடையில் வேற்றுமை இருப்பதுடன் ஹக்குதஆலாவின் தாத்தை ஆலத்துடன் 'படைக்கிற' சம்பந்தமாகவே கட்டுப்படுத்துகிறார்கள்.

وصوفیاں ربط ذات حق به عالم میدهند
بے تباینو اتحادوبے انقسام وتجزی
وتبعیض پس نزدیک ایشاں یکه حقیقت آمد

சூபிய்யாக்கள் ஹக்குதஆலாவின் தாத்தை ஆலத்துடன் ஹகீகத்தில் இரண்டிற்குமிடையில் வேற்றுமையில்லாமலும். இரண்டும் ஒன்றாக சேர்ந்ததாக இல்லாமலும், பங்காகாமலும், துண்டாகாமலும், சிலதாகாமலுமான விதத்தில் கட்டுப்படுத்துகிறார்கள்.

எனவே அவர்களிடத்தில் ஒரே ஹகீகத்துதான் என்றாகியது.

امادر ثبوت مرتبۂ حق مرتبۂ عالم
وترتیب احکام مراتب برآں ہردوہیچ
مخالفت نیست

எனினும் ஹக்குடைய மற்தபாவும் ஆலத்துடைய மற்தபாக்களும் தரிபடுவதிலும், அவை இரண்டின் மற்தபாக்களின் பேரிலும் ஏற்படக்கூடிய ஹுக்முகள் தரிபடுவதிலும் அவர்களுக்கிடையில் அறவே விதர்ப்பமில்லை.

واحکام واجب برواجب مترتب میدارند
واحکام عالم برعالم مترتب میدارند
واحکام آں بریں مترتب نکردند،واحکام
ایں برآں مترتب نشودایں است صراط مستقیم

வாஜிபு(ல் உஜூதின் மற்தபா உ)டைய ஹுக்முகள் வாஜிபுல் உஜூதின் பேரிலேயே தரிபட்டது என்று நம்புகிறார்கள். ஆலத்து(டைய மற்தபாக்களு)டைய ஹுக்முகள் ஆலத்தின் பேரில் தரிபட்டது என்று நம்புகிறார்கள்:-

அதின் (வாஜிபுல் உஜூதின் மற்தபா உடைய) ஹுக்முகளை இதின் (ஆலத்தின்) பேரில் கட்டுப்பட்டதாக ஆக்க மாட்டார்கள். இன்னும் இதனுடைய (ஆலத்தின் மற்தபா உடைய) ஹுக்முகளை அதன் பேரில் (வாஜிபுல் உஜூதின் பேரில்) கட்டுப்பட்டதாக ஆக்க மாட்டார்கள். இதுதான் நேரான வழியாகும்.

علماءظاهر بربنائے خود ہیچ طوراز اطواریکانکی
پیشتر عالم روان‌دارند بلکہ کفر پندارند

ளாஹிற் உலமாக்கள் அவர்களுடைய அகீதாவின் படி- கொள்கையின்படி ஹக்குத ஆலாவும் ஆலமும் எந்த ஒரு விதத்தினாலும் சரி ஒன்றாகயிருப்பதை சரி காண மாட்டார்கள். மேலும் அப்படி ஒன்றாகயிருக்கிறதென்பதை 'குப்று' என்றும் நினைக்கிறார்கள்.

ازآنکه نزدیک ایشاں عالم رابه حق
ہیچ وجه یکانکی نیست

ஏன் அவர்களிடத்தில் ஆலத்திற்கு ஹக்குதஆலா உடன் எந்த ஒரு விதத்திலேயும் ஒற்றுமையில்லை என்று தரிபட்டிருப்பதினால்.

وصوفی بربنائے خودہمه اطواریکانکی برعالم
جائز دارند،بلکه جزئه ورکنهٔ ازایمان شمارند

சூபிய்யாக்கள் அவர்களுடைய கொள்கையின்படி ஆலத்துடன் சகல விதங்களிலும் ஒற்றுமையாகயிருப்பதை சரி காணுகிறார்கள். மேலும் அது ஈமானின் கடமைகளில் நின்றுமொரு கடமை என்றும் எண்ணுகிறார்கள்.

از آنکه نزدیک ایشاں حق ثابت است
امانه جداگانه وبیگانه ازعالم

ஏன் அவர்களிடத்தில் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலாவாகிறவன் ஹகீகத்தில் ஆலத்திற்கு வேறானவனாகவும், பிரிந்தவனாகவும் இல்லாத விதத்திலிருக்கிறான் என்பதாக தரிப்பட்டிருப்பதற்காக.

ونه متحد ویگانه بااوزیر آنکه نزدایشاں
من حیث الوجودیکانکی است،ومن حیثالمراتب بیکانکی

இன்னும் அவன் ஒன்றாக ஐக்கியமானவனுமில்லை. ஒன்றாக சேர்ந்தவனுமில்லை. ஏன் ஹக்குதஆலாவாகிறவன் உஜூதின் புறத்தினால் தானானவன் என்றும், மற்தபாக்களின் புறத்தினால் வேறானவனென்றும் அவர்களிடத்தில் தரிபட்டிருப்பதற்காக.

وثبوت ایمان بدورکن است یکانکیوبیکانکی
ودوامر عبدورب وجمعالامرین المذکورین
راایمان تمام وکامل میدارند

ஈமானின் தரிபாடு, ஆலம் ஹக்குதஅலாவுக்கு (உஜூதின் புறத்தில்) தானாகயிருக்கிறது. (மற்தபாக்களின் புறத்தினால்) அவனுக்கு வேறாகயிருக்கிறது என்ற இரண்டு றுக்னுகளைக் கொண்டும் அப்து, றப்பு ஆகிய இரண்டு கருமங்களையும் கொண்டு தான் உண்டானதாகும். கூறப்பட்ட இந்த இரண்டும் சேர்ந்ததற்கு தான் பூரணமான நிறப்பமான ஈமான் என்றும் சொல்வார்கள்.

پس کسےکه بوجدانوذوق تباین واتحادہردو
مرتبه رابردارد وحقیقت وجودراباجمیع
مراتب اللاهیته،وباجمیع قیود خلقیته
دریابد اوراکامل ومکمل میگویند

ஆகவே எவருக்கு அவரின் விஜ்தானிலும், தவுக்கிலும்-பரவச நிலையிலும், அனுபவத்திலும்,(ஒரு விதத்தில்) வேறாகயிருக்கிறது. (ஒரு விதத்தில்)தானாகயிருக்கிறது என்ற இரண்டு மற்தபாக்களை நீக்கப்பட்டு, உஜூதான, ஹகீகத்தை அதன் இலாஹிய்யத்தான-தெய்வீகமான

மற்தபாக்களுடனும் அதன் சிருஷ்டியான கட்டுப்பாடுகளுடனும் பெற்றுக் கொள்வாரேயானால் அவரை காமில் முகம்மில்-சம்பூரணமானவர் சம்பூரணமாக்குகிறவர் என்று சொல்வார்கள்.

وکسے که باستیلاء وجود یا باستیلاء حقمرتبهٔ
خلق را محوسازداورامغلوب الحال گویند
ومعذوردارند ومرفوع القلم شمارند

எவருக்கு உஜூது(டைய காட்சி) மிகைத்ததினால் அல்லது ஹக்கு(டைய காட்சி) மிகைத்ததினால் சிருஷ்டியின் மற்தபா அழிந்து விட்டதோ அவரை மக்லூபுல் ஹால்-பரவசத்தால் மிகைக்கப்பட்டவர் என்று சொல்வார்கள். மேலும் அவருக்கு (அவர் தங்கடவாளி என்று) போக்கு சொல்வார்கள். அல்லாஹ் இடத்தில் அவர் (குற்றம் குறை எழுதப்படுவதை விட்டும்) எழுதுகோல் உயர்த்தப்பட்டவர் என்றும் நம்புகிறார்கள்.

وکسے که برؤیةخلق راساترآید اورامحجوب گویند

எவருக்கு சிருஷ்டியை பார்ப்பதைக் கொண்டு ஹக்குதஅலாவை (காண்பதை) விட்டும் திரை போடப்பட்டதோ அவரை மஹ்ஜூபு-திரையிடப்பட்டவர் என்று சொல்வார்கள்.

وکسے که بمجردعلم وحدت یا بتوہم حظوظ آں
علم مرتبهٔ خلق را نیزداردداوراملحد وزندیق گویند

எவன் வஹ்தத்த (துல் உஜூ)தை அறிந்திருப்பதை மட்டும் கொண்டு அல்லது அந்த அறிவின் பாக்கியம் கிட்டியிருப்பதாக எண்ணிக் கொண்டு சிருஷ்டியின் மற்தபாவும் (அவனை விட்டும் எடுபடாமல்) அப்படியேயிருக்க, சிருஷ்டியின் மற்தபாவை-அதன் ஹுக்முகளை நீக்கி விடுவானேயானால் அவனை 'முல்ஹிது' 'ஜின்தீகு'- நிராகரித்தவன், வழி தவறியவன் என்று சொல்வார்கள்.

وکسے که علم بمعرفت ووحدت راچنانکه مذکور
است بداند وبراں عقیدت صحیحه بماند
ومراقب بداں بوداوراعالم ربانی خوانند
وامید دارکه اوہم بطلب آںعلم وعقیدت
ومراقبه بدرجه کمال رسید دریں جهاں یادرآنجهاں

எவனாவது மஃரிபா உடைய இல்லைமயும், வஹ்தத்துடைய இல்லைமயும் சொல்லப்பட்டபடி அறிந்து அந்த சரியான கொள்கையிலேயே தரிபட்டு அப்படியே முறாக்கபா செய்கிறவனாக இருப்பானேயானால் அவனை 'ஆலிமுற் றப்பானி' என்று சொல்வார்கள்.

மேலும் அவன் இந்த அறிவு, கொள்கை, முறாக்கபாவின் தேட்டத்திலேயேயிருப்பதினால் அவன் இந்த உலகத்திலோ அல்லது அந்த உலகத்திலோ (ஆகிறத்திலோ) சம்பூரண பதவியளவில் சேர்ந்தவனாக ஆவதை ஆதரவு வைக்கப்படும்.

وكسے كہمراقب نبودوآں علم صحيح داردا ورا
چيزے ايں نصيب خالی نبودوازيں حظ عاری نباشد

எவன் முறாக்கபா செய்யாமல் அந்த அறிவை (மட்டும்) சரியாக அறிந்திருந்தானோ அவனுக்கு இந்த நற்பேற்றில் ஏதும் கிடைக்காமல் போகாது, இந்த பாக்கியத்தை விட்டும் ஒழிந்தவனாக ஆக மாட்டான்.

**இது வரையிலும் அவர்களுடைய பேச்சாகும் இனி அல்லாஹ்வின் உதவியைக் கொண்டு நான் சொல்கிறேன்:-**

**அவர்கள் وجود باستيلاءஉஜூது மிகைத்ததினால்' என்று சொன்னதற்கு கருத்தாவது:- 'ஹக்குதஆலாவின் உலூஹிய்யத்துடைய சிபத்துகளில்லாமல் அவனுடைய உஜூது மட்டும் மிகைத்ததினால்' என்பதாகும்.**

**இன்னும் حب باستيلاء–அல்லது ஹக்கு மிகைத்ததினால்' என்ற அவர்களின் வார்த்தைக்கு கருத்து:-'ஹக்குதஆலாவின் உஜூது அவனுடைய உலூஹிய்யத்தான சிபத்துகளுடன் மிகைத்ததினால்' என்பதாகும்.**

**அவர்கள் مرتبة خلق رامحو سازد 'சிருஷ்டியின் மற்தபா அழிந்துவிட்டதோ' என்று சொன்னதின் கருத்து:- அவனுடைய பார்வையில் சிருஷ்டிள் மறைந்து, 'அனல் ஹக்-நான் ஹக்கு' என்பது போன்று சொல்கிறான்' என்பதாகும்.**

**அவர்கள் شمارند القلم عومرفوع எழுது கோலை உயர்த்தப்பட்டவர்' என்று சொன்னதற்கு கருத்து:- அவர் அல்லாஹ்விடத்தில் அவனுக்கும் அவருக்குமிடையிலுள்ள விஷயங்களில் எழுதுகோல் உயர்த்தப்பட்டவர். கியமத்து நாளில் அவர் பேரில் குற்றம் பிடிக்கப்பட மாட்டாது. ஆனால் ளாஹிர் ஷரஃவில் அவர் குற்றம்பிடிக்கப்படவராகும். மேலும் அவர் அல்லாஹு தஆலாவிடத்தில் 'அனல் ஹக்கு- நான் ஹக்கு' என்பது போன்ற வார்த்தைகளை சொன்னதற்கு மட்டுமே கற்றம் பிடிக்கப்படாதவராகுமே தவிர மற்ற கெட்ட கொள்கைகள், பொருத்தமில்லா செயல்களின் பேரிலல்ல. ஏன் அவர் 'பனா' உடைய**

நிலையில் இருக்கும் போதும் ஏவல் விலக்கலாகிய தக்லீபுகள் அவரை விட்டும் விழாது. எனினும் அல்லாஹ் ஸுபுஹானஹுவதஆலா அவருடைய புத்தியின் ஸ்தானத்திலிருந்து கொண்டு சகல பாவ செயல்களையும் விட்டும் அவரை காப்பாற்றுவான்.

அவர் அல்லாஹ் அல்லாதவைகள் அடங்கலையும்விட்டும் மறைந்து அவனுடைய காட்சிக் கடலிலே மூழ்கினவராகயிருந்தாலும், கடமையான அமல்கள் அத்தனையையும் நிறைவேற்றுவதற்கு அவருக்கு அல்லாஹ் நல்லுதவி செய்வான்.

இப்படி தான் ளாஹிரையும், பாத்தினையும், அறிவாலும், அமலாலும் சேகரமாக்கிய அவ்லியாக்களின் கிதாபுளிலிருந்து விளங்கப்படுகிறது. அல்குத்புற றப்பானி, வல் கௌதுஸ் ஸமதானி அஷ்ஷெய்கு முஹிய்யித்தீன் அஸ்ஸெய்யிது அப்துல் காதிருல் ஜெயிலானி அவர்களையும் அவர்களல்லாதவர்களையும் போல. அல்லாஹ் அவர்களுடைய ஸிற்றுகளை பரிசுத்தமாக்குவானாக!

இன்னும் அவர்கள் بمجرد علم وحدت வஹ்தத்தை அறிந்திருப்பதை மட்டும் கொண்டு' என்று சொன்னதற்கு கருத்து:-

'உஜூதோ, அல்லது ஹக்குடைய மற்தபாவோ மிகைக்கமால் வஹ்தத்துல் உஜூது இன்னும் அதற்கவசியமானவைகளைக் கொண்டு நம்பிக்கை வைத்திருப்பதைக் கொண்டும மட்டும்' என்பதாகும்.

அவர்கள் علم حظوظآن يابتوهم–அல்லது அந்த அறிவின் பாக்கியம் கிட்டியிருப்பதாக எண்ணிக் கொண்டு' என்று சொன்னதற்கு கருத்து:-

'அவன் தனக்கு இல்மு, ஹாலு, குறு;பு, மஹப்பத்து, அறிவு, பரவசம், ஹக்களவில் முடுகுதல், மஙப்பத்துகளாகிய வஹ்தத்துல் உஜூதின் நற்பேறுகள் அறவே அவனுக்கு உண்டாகதிருக்க, தனக்கு உண்டாகி விட்டதாக சந்தேகிப்பதுவாகும். அதற்கு அடையாளம் ஷரீஅத்தில் இகழப்பட்ட கருமங்களில் அவன் மிகுந்து விஷயமாவதாகும்' என்பதாகும்.

அவர்கள் مرتبة خلق رانيزدارد சிருஷ்டியில் மற்தபாவும் அப்படியே இருக்க' என்று சொன்னதற்கு கருத்து:- சிருஷ்டி அவனுடைய பார்வையை விட்டும் நீங்கவில்லை. அவன் 'அனல் ஹக்கு- நான் ஹக்கு' என்பது போன்ற வார்த்தைகளை சொல்கிறான். அல்லது குர்ஆனுக்கும், ஹதீதுகளுக்கும், இஜ்மாஃவுக்கும் விரோதமான கெட்ட கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறான். அல்லது அல்லாஹ் ஹறாமாக்கினதை ஹலாலானது என்று நினைத்து பொருத்தமில்லாத செயல்களை செய்கிறான்' என்பதாகும்.

அவர்கள் اورا ملحد وزنديق موبند அவனை முல்ஹிது, ஜின்தீகு-நிராகரித்தவன், வழி தவறியவன் என்று சொல்வார்கள்' என்று சொன்னதின் கருத்து:- அவன் அல்லாஹ் இடத்தில்

**ஜின்தீகாகவும், காபிராகவுமிருக்கும். ளாஹிறு ஷர**஼**வில் துன்யாவில் ஜின்தீக்குடைய ஹுக்மைக் கொண்டு அவனைப் பிடிக்கப்படும். அவன் அதன் பேரிலேயே மவுத்தானானேயானால் ஆகிறத்தில் நரகத்தில் ஊழி ஊழி காலம் தரிபடுவான்' என்பதாகும்.**

**அவர்கள்** اورا عالم ربانی خوانند**அவனை அலிமுற் றப்பானி என்று சொல்வார்கள்' என்று சொன்னதின் கருத்து:- அவன் அல்லாஹ்தஆலாவை அறிந்தவன் அவனிடத்தில் முடுகுதலானவன். ஏன் அவன் அல்லாஹ்வின் தாத்தின் வலுப்பத்திலும், அவனுடைய உஜூதிலும் தபக்குறு செய்கிறான். அவனுக்கு சம்பூரண விதத்தில் நல்லொடுக்கம் கிடைக்குமென்று ஆதரவு வைக்கப்படும்.**

**ஹதீதில் இவன் விஷயத்தில்,**

تَفَكَّرُ سَاعَةٍ خَيْرٌ مِنْ عِبَادَةِ سِتِّيْنَ سَنَةَ

**'ஒரு மணி நேரம் தபக்குறு செய்வதானது- சிந்திப்பதானது அறுபது வருடம் இபாதத்து செய்வதை விடவும் விசேஷமானது' என்று வந்திருக்கிறது.**

اللهم صل على سيدنا محمد عبدك ورسولك السيد الكامل الفاتح الخاتم نورك المبين ورسولك الصادق الامين وآته الوسيلة والفضيلة والشفاعة وابعثه مقاما محمود الشفيع المرتضي المجتبي . اللهم صل عليه وعلى آله كما صليت على ابراهيم وعلى آل ابراهيم وبارك عليه وعلى آله كما باركت على ابراهيم وعلى آل ابراهيم فى العالمين انك حميد مجيد عدد خلقك ورضي نفسك وزنة عرشك ومداد كلماتك كلما ذكرك الذاكرون وكلما غفل عن ذكرك الغافلون وعلى آله وصحبه وسلم تسليما كثيرا برحمتك يا ارحم الراحمين والحمد لله رب العالمين.

*முற்றும்.*